# களம் தந்த களங்கம்

தென்மோடி நாட்டுக்கூத்து

# குருநகர் கலைமாட்சி

கலை, இலக்கிய,
நாடக, நாட்டுக்கூத்து தகவல்கள்



கலையார்வன்
(கு. இராயப்பு)

Jeyanth
Center

# களம் தந்த களங்கம்

(தென்மோடி நாட்டுக்கூத்து)

# குருநகர் கலைமாட்சி

(கலை, இலக்கிய, நாடக, நாட்டுக்கூத்து தரவுகள்)

**கலையார்வன்**

**(கு. இராயப்பு)**

Published by

**NEO CULTURAL COUNCIL**

28/1, St. James West Street,
Jaffna, Sri Lanka.
021-222 3224

நல்வரவு



## எனது





## உளம் நிறைந்த நன்றிகள்

- அண்ணாவியார் தம்பித்துரை யேசுராசா அவர்கள்,
- வாழ்த்துரை வழங்கிய வண. J.E. ஜெயசீலன் அடிகள்,
- அணிந்துரை வழங்கிய பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள்,
- வெளியீட்டுரை வழங்கிய திரு. V.J. கொன்ஸ்ரன்ரைன் அவர்கள்,
- அச்சிட்ட புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்,
- கணினி பதிப்பு செய்த ஜெயந்த் சென்ரர்.

காலத்தால் அழியாத கலை, இலக்கியச் சுடரை

அணையாது காத்திட

அயராது உழைத்து, அரும்பாடுபட்ட

குருநகரின் மைந்தர்கள் பலர்

இன்று எம்முடன் இல்லை.

மறைந்தும் வாழும்

கலை இலக்கிய அறிஞர்கள், கலைஞர்கள்

அனைவருக்கும் இந்நூல்

**சமர்ப்பணம்**

| | |
|---|---|
| நூலின் தலைப்பு | : களம் தந்த களங்கம். |
| | : குருநகர் கலைமாட்சி. |
| பொருள் | : தென்மோடி நாட்டுக்கூத்து. |
| | : கலை, இலக்கிய தரவுகள். |
| ஆசிரியர் | : கலையார்வன் (கு. இராயப்பு) |
| வெளியீடு | : நேயோ கல்சுரல் கவுன்சில் 28/1, சென் ஜேம்ஸ் மேற்கு வீதி, யாழ்ப்பாணம். |
| கணினி வடிவமைப்பு | : ஜெயந்த் சென்ரர், கணினிசார் சேவைகள் |
| அட்டை | : ஜெயந்த் சென்ரர், 28, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம். |
| அச்சுப் பதிவு | : புனிதவள்ளன் கத்தோலிக்க அச்சகம், பிரதான வீதி, யாழ்ப்பாணம். |
| முதற் பதிப்பு | : ஜீலை 2003 |
| நூல் அளவு | : 14 X 21 |
| பக்கங்கள் | : 114 + 14 |
| விலை | : 150.00 |







# வரவேற்பு


| | | |
|---|---|---|
| இதயத்திலிருந்து. | ........................... | VI |
| எண்ணத்திலிருந்து. | ........................... | VII-VIII |
| உள்ளத்திலிருந்து. | ........................... | IX-X |
| என்னுள்ளிருந்து. | ........................... | XI-XIII |

**களம் தந்த களங்கம்**

| | | |
|---|---|---|
| கதைச் சுருக்கம் | ........................... | 01 – 02 |
| 1 - 14 காட்சிகள் | ........................... | 03 – 50 |

**குருநகர் கலைமாட்சி**

| | | | |
|---|---|---|---|
| மாட்சியைத் தேடும் முன்.. | | ......... | 51 - 54 |
| மாட்சி - 1 | அலையாளும் குருநகர். | ......... | 55 - 62 |
| மாட்சி - 2 | வெளியிடப்பட்ட நூல்கள். | ......... | 63 - 64 |
| மாட்சி - 3 | வெளியிடப்பட்ட வெளியீடுகள் | ...... | 65 - 67 |
| மாட்சி - 4 | மன்றுங்கள். | ......... | 68 - 78 |
| மாட்சி - 5 | நாடக எழுத்தாளர்கள். | ......... | 79 - 83 |
| மாட்சி - 6 | இசைக் கலைஞர்கள். | .......... | 84 - 86 |
| மாட்சி - 7 | நாட்டுக்கூத்துச் சிறப்பு. | .......... | 87 - 95 |
| மாட்சி - 8 | எழுதப்பட்ட கூத்துக்கள். | .......... | 96 - 98 |
| மாட்சி - 9 | அண்ணாவிகள். | .......... | 99 -114 |

## இதயத்திலிருந்து.....



**வண. J.E. ஜெயசீலன் அடிகள்.**

*B.A, M.A, M Phil*

*Visiting Lecturer*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

பல நாட்களாக இந்தக் குருநகர் கடற்பரப்பினை அண்டிய பகுதி வாழ் மக்கள் பற்றிய ஓர் சமூகக்கலை ஆய்வு இல்லை என்ற குறை இருந்தது. "களம் தந்த களங்கம், குருநகர் கலைமாட்சி" வெளியீட்டினூடாக இது ஓரளவு நீக்கப்பட்டு விட்டதெனலாம்.

"உன்னையே நீ அறிவாய்" என்ற சாக்கிறற்றீசின் கூற்று கரை ஊருக்குப் பொருந்தும். கரையூர் தன்னை அறியவில்லை இதனால் தன் சுயமரியாதையை இழந்து சீரழிகிறது. கரையூர், குருநகருக்கு முந்திய பெயர். அதன் தொன்மை ஆபிரகாம் பிறந்த கலிலேயாவின் ஊருக்குப் பொருந்தும். புனித தோமையார் வந்திறங்கிய "கிரங்கனூர்" இற்கும் பொருந்தும். நம் தொன்மை அறியாது, விசுவாசப் பெருமை அறியாது திசையறியாப் பறவைபோல இவ்வூரின் வருங்கால சந்ததியினரான வாலிபர்கள் அலைகின்றனர்.

கலையார்வன் கு. இர்ரயப்பு தொகுத்துத் தந்துள்ள இந்நூல் இவர்கள் கண்விழித்து எழவும், மூன்றாம் மிலேனிய வாழ்வுதரும் சவாலை ஏற்கவும் உதவுமென நினைக்கின்றேன். அவருக்கு என் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்.

*12.06.2003* *J. E. ஜெயசீலன்*

# எண்ணத்திலிருந்து.....



**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**

*தலைவர்,*

*தமிழ்த்துறை,*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

கலையார்வன் திரு. கு. இராயப்பு அவர்களுடைய "களம் தந்த களங்கம், குருநகர் கலைமாட்சி" என்னும் நூலுக்கு அணிந்துரை எழுதுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். தமிழிலே செயல்முறைக் கணிப்பொறி, கணிப்பொறி 2000 என்னும் நூல்களை எழுதித் தமிழ் மொழிக்கு வளம் சேர்த்துள்ள கலையார்வன் ஆக்க இலக்கிய காரனாகவும், கலை இலக்கிய வரலாற்றாசிரியனாகவும் இந்நூலூடாக வெளிப்படுகிறார்.

"களம் தந்த களங்கம்' என்னும் தென்மோடி நாட்டுக்கூத்து இந்நூலின் முதற் பகுதியாக அமைகின்றது. அமரர் சந்தியோகு 1856 இல் எழுதிய "சந்தியோகுமையோர் படைவெட்டு" என்னும் நாட்டுக்கூத்தினை எப்படியாவது பிரதிவடிவிலே அச்சிடுவதற்கு ஆசிரியர் எடுத்துள்ள முயற்சியின் விளைவே "களம் தந்த களங்கம்" என்னும் இந் நாட்டுக்கூத்தாகும். அமரர் சந்தியோகுவின் நாட்டுக்கூத்துக்கான பிரதி கிடைக்கவில்லை. ஆனால், இக்கூத்திலே பங்கேற்றவர்கள் தொடக்கம் வாழையடி வாழையாக ஒரு மரபு பேணப்பட்டு வந்துள்ளது. பல கலைஞர்கள் காலத்துக்குக் காலம் இந் நாட்டுக்கூத்தினை மேடையேற்றி வந்துள்ளனர். இவர்கள் பின்பற்றி வந்த பிரதிகளை அடியொற்றி இப்பிரதியினை கலையார்வன் அமைக்க முற்பட்டுள்ளார். இதனை மிகுந்த தன்னடக்கத்துடன் அவர் செய்ய முற்பட்டதை,

> "முன்னைய கூத்து எழுத்தாளர்களால் எழுதப்பட்டுள்ளமையைப்போல் யாப்பிலக்கணம் தவறாமல் எழுதப்பட்டது என்று சொல்ல மாட்டேன். முன்னையோர் போட்ட இராக சீர்களுக்குள் என் எண்ணத்தைப் புகுத்திவிடச் சொற்களை இலகு நடையில் சேர்த்திருக்கின்றேன். இது முறையற்றதாகக் கருதப்படினும் காலத்தின் தேவையறிந்து கலையுலகம்

மன்னித்து ஏற்கும் என நம்புகின்றேன். பாடல்கள் அனைத்தும் பல தடவைகள் பாடப்பட்டு இராகத்தினுள் கட்டுப்படுவதை உறுதிசெய்த பின்னர்தான் இதனை நிறைவு செய்துள்ளேன்."

என்று கூறுவதனுடாக உணரக்கூடியதாயுள் ளது. ஆசிரியருடைய முயற்சியின் உண்மைத் தன்மையினையும், நேர்மையினையும் காணக் கூடியதாகவும் உள்ளது. நஞ்சைக் கடித்துத் தம் இன்னுயிரைப் போக்கிய பல மைந்தர்கள் வாழ்ந்த இந்த மண்ணிலே கையிலிருந்த மோதிரத்திலே பதித்த வைரத்தைக் கடித்து உயிரைப்போக்கிய ஸ்பானிய இளவரசியின் கதையினை நாம் விளங்கிக் கொள்வது கடினமில்லை.

"குருநகர் கலைமாட்சி" என்னும் பகுதி குருநகரின் கலைவரலாற்றை நேராக்கிச் சீராக்க வேண்டும் என்னும் ஆசிரியரின் ஆவலை வெளிப் படுத்தவதாக அமைகின்றது. குருநகர் கலைப் பாரம்பரியத்தினை ஆசிரியர் இந்நூலூடாக வெளிக்கொணருகிறார். ஒன்பது சிறு பகுதிகளாகப் பிரித்து குருநகரின் எழுத்தாளர்கள், வெளியீடுகள், இலக்கிய நாடக மன்றங்கள், நாடக எழுத்தாளர்கள், இசைக் கலைஞர்கள், நாட்டுக் கூத்து அண்ணாவிமார் என்பன பற்றியெல்லாம் அறிதற்கு ஏற்ற தரவுகளை எல்லாம் கலையார்வன் இந்நூலிலே தந்துள்ளார்.

எங்கள் மண்ணின் விரிவான வரலாற்றை அறிவதற்கு ஊர்கள் பற்றிய, நகரங்கள் பற்றிய விரிவான நுணுக்கமான வரலாறுகள் தேவை. இந்த வகையில் கலையார்வனின் இந்நூல் காலத்தின் தேவையாக அமைகின்றது. ஈழத்துத் தமிழரின் கலை பண்பாட்டு வரலாறு அவர்களுடைய பல தனித்துவங்களைக் கொண்டுள்ளது. அத்தகைய தனித்துவங்களை இனங்கண்டு கொள்வதற்கு கலையார்வன் போன்ற ஆசிரியர்களின் நூல்கள் உதவக்கூடியன. இந்நூலை எமக்களித்துள்ள கலையார்வனுக்கு கலையுலகம் சார்பில் பாராட்டுதல் களையும் வாழ்த்துக்களையும் கூறி இந்த அணிந்துரையை நிறைவு செய்கின்றேன்.

***11.06.2003*** ***அ. சண்முகதாஸ்***

## உள்ளத்திலிருந்து.....



**V.J. கொன்ஸ்ரன்ரைன்,**
(All Island Justice of the Peace)
Director
Neo Cultural Council

எழுபதுகளின் பிற்பகுதி வரை யாழ் பிரதேசத்தில் அரங்க செயற்பாடுகள் கிராமங்கள் தோறும் செழிப்பாக நடைபெற்று வந்துள்ளன. ஆனால் அதன் பின் அரங்க நடவடிக்கைகளுக்கு கல்வியியல் அந்தஸ்து கொடுக்கப்பட்டபோது கிராம மட்டங்களில் அரங்க ஆற்றுகைகள் வெகுவாகக் குறைந்து விட்டதை அவதானிக்கக் கூடியதா யிருந்தது. ஆனால் இன்று மீண்டும் அரங்க நடவடிக்கைகள் புத்துயிர் பெறுவது கண்டு நாம் மிகவும் மகிழ்சியடைகிறோம்.

மிகக் குறைந்த எண்ணிக்கையிலான நாட்டுக்கூத்துப் பிரதிகளே இன்று நம் மத்தியில் உள்ளன. தாள, இராகங்களுடன் நல்ல சொற் கட்டுக்களைக் கொண்டு மிகவும் சிரமப்பட்டு நாட்டுக் கூத்தினை எழுதுவதை விட ஏற்கனவே எழுதப்பட்டு பல் நூறு மேடைகள் கண்ட நாடகத்தை நடிப்பதேமேல் என்ற எண்ணத்துடன் நம்முள் பலர் இருந்து வந்துள்ளனர். இதற்கு மாறாக எழுத்தாளரும், கலைஞனுமான கலையார்வன் கு.இராயப்பு அவர்கள் "களம் தந்த களங்கம்" என்ற தென்மோடி நாட்டுக்கூத்தினை நமக்குத் தந்துள்ளதை நாம் பாராட்டாமலிருக்க முடியாது.

மேலும் பல சிறப்பியல்புகளைக் கொண்ட ஒரு சமுகக் குழுமத்தின் இருட்டடிப்புச் செய்யப்பட்ட அரங்குசார் நடவடிக்கைகளை தன்னால் முடிந்த வரை தேடல் மேற்கொண்டு "குருநகர் கலைமாட்சி"

என்ற தலைப்பில் ஒளியூட்டி ஆவணப்படுத்தியுள்ளமை மிகவும் வரவேற்கத்தக்கது. அரங்க கல்வியியலாளர்க்கும், ஆய்வாளர்களுக்கும் இந்நூல் மிகவும் பயனுடையதாய் இருக்குமென நாம் நம்புகிறோம்.

இன் நூலினை வெளியிடுவதற்கு எமக்கு சந்தர்ப்பமளித்த கலையார்வன் கு.இராயப்பு அவர்களுக்கு எம் உள்ளம் நெகிழ்ந்த நன்றிகள்.

வாழ்க வளமுடன்

12.06.2003

*V.J. கொன்ஸ்ரன்ரைன்*

# என்னுள்ளிருந்து.....



குருநகரைச் சேர்ந்த அமரர் சந்தியோகு என்பவரால் 1856ம் ஆண்டளவில் எழுதப்பட்டது "சந்தியோகுமையோர் படைவெட்டு" நாட்டுக் கூத்தாகும். இந்த படைவெட்டு நாட்டுக்கூத்தானது இரண்டு இரவுகள் தொடராக நடைபெற்றதாக முன்னையோர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்தக் கூத்தின் பிரதியைப் பார்த்ததேயில்லை.

நான் பார்த்ததெல்லாம், அமரர் சந்தீயோகுவின் படைவெட்டுப் பாடல்கள் பலவற்றைக் கொண்டதாக அமரர் ஜேம்ஸ் அவர்களால் சுருக்கமாக எழுதப்பட்ட "படைவெட்டு" கூத்தின் பிரதியேயாகும். இக் கூத்து 1972ல் புனித யாகப்பர் திருநாளை முன்னிட்டு குருநகர் கலையரங்கில் இளைஞர் கலைக் கழகத்தால் மேடையேற்றப் பட்டது. அண்ணாவியாராக அமரர் அண்ணாவி சிலுவை, உதவியாளராக அமரர் ஆ. றோமான் ஆகியோர் பங்காற்றினார்கள். நீண்ட இடைவேளைக்குப் பின்னர் மேடையேற்றப்பட்ட இக் கூத்திற்கு மக்களிடையே பெரும் வரவேற்புக் கிடைத்தது. கூத்தில் பங்காற்றிய பலர் இன்று நம்மிடையே இல்லை என்பது வேதனைக்குரியது.

படைவெட்டு கூத்தின் கதை "புவலயம் புகுந்த புனிதன்" என்னும் பெயரில் நாடகமாக இளைஞர் கலைக்கழகத்தினால் 1971இல் புனித யாகப்பர் ஆலய முன்றலில் மூன்று மேடைகள் அமைக்கப்பட்டு மேடையேற்றப்பட்டது.

படைவெட்டுக் கதையின் அடிப்படையில் நின்று விலகாது கதையின் ஆரம்ப நிகழ்வுகளில் சில மாற்றங்களை புகுத்தி "களம் தந்த களங்கம்" என்ற பெயரில் நாடகமாக்கி 1973ம் ஆண்டு குருநகர் கலையரங்கில், இளைஞர் கலைக்கழகத்தினால்

மேடையேற்றப்பட்டது. களம் தந்த களங்கத்திற்கு மக்களிடமிருந்து பாராட்டுதல்கள் கிடைத்தது. புவலயம் புகுந்த புனிதன், களம் தந்த களங்கம் இரண்டிற்கும் திரு V.J. கொன்ஸ்ரன்ரைன் (குருநகர் துரை) அவர்களே நெறியாள்கை செய்திருந்தார்.

1992 இல் அமரர் மிக்கேல்பிள்ளை அவர்களால் மேடையேற்றப்பட்ட "போர்க்களம்" நாட்டுக்கூத்தில் யாகப்பரின் வரலாற்றுடன் படைவெட்டு நிகழ்வுகள் சேர்க்கப்பட்டிருந்தாலும் அது மூலப் பிரதியின் பாடல்களைக் கொண்டதல்ல. மூலப் பிரதிகள் என்று கொள்ளக்கூடிய அமரர் சந்தியோகு அவர்களுடையதோ, அமரர் ஜேம்ஸ் அவர்களுடைய பிரதியின் சில எச்சங்களையோ தவிர வேறு பிரதிகள் எதுவும் கிடைக்கவில்லை. இந்த நிலை எதிர்கால சந்ததிக்கும் ஏற்படக்கூடா தென்பதற்காக அமரர் ஜேம்ஸ் அவர்களுடைய பிரதியின், கையில் கிடைத்த எச்சங்களைக் கொண்டு முழுமையான படைவெட்டு நாட்டுக் கூத்தாக அமைத்திட வேண்டுமென்று எண்ணினேன். அதன் விளைவுதான் "களம் தந்த களங்கம்" நாட்டுக்கூத்து நூலாகும்.

இந் நூலில் இடம்பெறுகின்ற பாடல்களில் நானறிந்த அமரர் ஜேம்ஸ் அவர்களுடைய பிரதியின் எச்சங்களில் உள்ள பாடல்களும் இடம் பெறு கின்றன. மூலப் பிரதியிலுள்ள பாடல்கள் எவ்வளவு எடுக்க முடியுமோ அவ்வளவையும் எடுத்து இணைத்துக் கொள்ளவேண்டும் என்பதே எனது விருப்பம். ஆனால் கிடைத்ததோ சொற்பம்.

இந்த நாட்டுக்கூத்தின் உருவாக்கத்திற்கு பெரிதும் உறுதுணை புரிந்தவர் அண்ணாவி தம்பித்துரை யேசுராசா அவர்களாகும். நாடக மாகவும், கூத்தாகவும் மேடையேற்றப்பட்டபோது ரெம்மில் அரசர் பாத்திரமேற்று நடித்தவர் இவரேயாவர்.

முன்னைய கூத்து எழுத்தாளர்களால் எழுதப்பட்டு உள்ளமையைப்போல் யாப்பிலக்கணம் தவறாமல் எழுதப்பட்டது என்று சொல்லமாட்டேன். முன்னையோர் போட்ட இராக சீர்களுக்குள் என எண்ணத்தைப் புகுத்திடச் சொற்களை இலகு நடையில் சேர்த்திருக்கின்றேன். இது முறையற்ற தாகக் கருதப்படினும் காலத்தின் தேவையறிந்து கலையுலகம் மன்னித்து ஏற்கும் என நம்புகின்றேன்.

பாடல்கள் அனைத்தும் பல தடவைகள் பாடப்பட்டு இராகத்திற்குள் கட்டுப்படுவதை உறுதிசெய்த பின்னர்தான் இதனை நிறைவு செய்துள்ளேன். இக்கூத்து 26.07.2003 இல் குருநகர் கலையரங்கில் மேடையேறுகின்றது.

இது எனது ஆறாவது நூலாகும். இந்த நூலில், வெவ்வேறான இரண்டு படைப்புகளை (நூல்களை) ஒன்றாக இணைத்துள்ளேன். இதன் மூலம் "களம் தந்த களங்கம்" குருநகரில் இருந்து வெளியாகும் 1வது நாட்டுக்கூத்து நூலாகவும், "குருநகர் கலைமாட்சி" குருநகரின் கலை, இலக்கிய, நாடக, நாட்டுக்கூத்து தரவுகளையும், குருநகர் வரலாற்றையும் கூறும் 1வது நூலாகவும், எனது ஏழாவது படைப்பாகவும் (நூலாகவும்) அமைகின்றது.

"குருநகர் கலைமாட்சி" இல் பலருக்கும் பயன்படக்கூடிய வகையிலும், ஆவணமாக்குவதற்கும் ஏற்ற தரவுகள் பலவற்றை முடிந்தவரை பலரூடாக சேகரித்து இணைத்துள்ளேன். இவற்றில் சில விடுபட்டிருக்கலாம். அவ்வாறு விடுபட்டதாக எவரேனும் இனங்காணுவார்களேயானால் தயவுசெய்து அவற்றை எனக்கு அறியத்தந்து உதவுங்கள்.

எனது இந்த சிறிய முயற்சிக்கு பலரும் பல வழிகளில் ஆலோசனை, ஒத்துழைப்புகளை வழங்கி, தங்கள் நேரங்களையும் செலவழித்திருக்கின்றார்கள். அவர்கள் அனைவரையும் மனத்திலிருத்தி என் இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மண்டைதீவுக் கடற்கரையில் 31 கடற்றொழிலாளர்கள் அறுப்பு, புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் 18 அடைக்கலம் புகுந்தவர்கள் அழிப்பு, அராலிக் கடலில் 7 அகதிகளின் உயிர் பறிப்பு, புனித யாகப்பர் ஆலயம் தகர்ப்பு போன்றவை கடந்த காலங்களில் குருநகர் மண் சுமந்த அவலங்களில் முக்கியமானவைகளாகும். மண் சுமந்த அவலங்களை மீண்டும் நினைவிற்கொள்ள இந் நிகழ்வுகளை நாட்டுக்கூத்தாக்கும் எனது அடுத்த முயற்சிக்கு உங்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன்.

நன்றி

அன்புடன்

**கலையார்வன்**

***10.06.2003*** *(கு. இராயப்பு)*

களம் சென்ற வேந்தன் உளம் நொந்து நின்றான்.

களம் வென்ற வேந்தன் களங்கத்தைத் தந்தான்.

# களம் தந்த களங்கம்

(தென்மோடி நாட்டுக்கூத்து)

## 1வது மேடையேற்றம்

## 26.07.2003 சனிக்கிழமை பி.ப.7.00 மணி

## குருநகர் கலையரங்கம்

### அரங்கில்

| | | |
|---|---|---|
| வாகைமேரோன் மன்னன் | : | கி. சுமேலன் |
| வாகை. தளபதி | : | ம. கட்ஸன் |
| வாகை. மந்திரி | : | அ. பூராசா |
| ரெம்மில் மன்னன் | : | த. யேசுராசா |
| ரெம். தளபதி | : | யோ. பொபி |
| ரெம். மந்திரி | : | யோ. நி. நிலோஷன் |
| ரெம். இளவரசி | : | லூ. சுதர்சினி |
| 1ம் பெண் | : | கி. கலிபோனியா |
| 2ம் பெண் | : | அ. ஆன்ஷாளிகா |
| 1ம் கன்னியாஸ்திரி | : | பூ. றெக்ஸ்கலா |
| 2ம் கன்னியாஸ்திரி | : | கி. சிந்துஷா |
| கட்டியக்காரன் - 1 | : | உ. ஜனேந்தினி |
| கட்டியக்காரன் - 2 | : | மி. பிறின்சியா |
| வீரன் - 1 | : | க. நிறைஞ்சன் |
| வீரன் - 2 | : | அ. தயாளன் |

தயாரிப்பு

## குருநகர் இளைஞர் கலைக்கழகம்

# களம் தந்த களங்கம்
(தென்மோடிக் கூத்து)

## கதைச் சுருக்கம்

துருக்கிய நாட்டு மன்னன் வாகைமேரோன் எதியோப்பியாவில் இருந்து ஆட்சி செய்து வருகின்றான். இவன் உலகிலுள்ள நாடுகளை எல்லாம் அடிமைப்படுத்தி அவற்றிலிருந்து பெண், பொன், திரவியங்கள் போன்றவற்றை திறையாகப் பெற்று ஒரே குடையின் கீழ் ஆழவேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டவன். தனது எண்ணத்தை பல நாடுகளை வென்று அடிமைப்படுத்தியதன் மூலம் சாதித்து வந்தான். இறுதியாக ஸ்பானியா நாட்டையும் அடிமைப்படுத்த விரும்பினான். அதற்காகப் போர் ஆயத்தங்களைச் செய்யலானான்.

தொம் ரெம்மில் என்னும் மன்னன் ஸ்பானிய நாட்டில் ஆட்சி நடத்தினான் இவன் போரிலே நாட்டமின்றி அமைதியையே விரும்பி நின்றான். இதனால் நாடெங்கிலும் பள்ளிக்கூடங்கள், ஆய்வுகூடங்கள், பல் தொழிற்சாலைகளை நிறுவி அறிவையும், ஆக்கங்களையும் பெருக்கினான். கடல் முத்துக்கள், பறவைகளின் இறக்கைகளை ஏற்றுமதி செய்துவந்தான். அமைதியில் நாட்டங்கொண்ட ரெம்மில் மன்னன், துருக்கிய மன்னனின் செய்திகேட்டு தடுமாறலானான்.

ஸ்பானிய நாட்டில் படைகளைக் திரட்டி போரிட ஆயத்தமாவதற்குள் இரவோடிரவாக துருக்கிய படைகள் நகரில் புகுந்துகொண்டது. ஸ்பானிய படைகளால் எதிர்க்க முடியவில்லை. ரெம்மில் மன்னன் கைதுசெய்யப்பட்டுக் கொண்டு செல்லப்படுகின்றான்.

நிர்ப்பந்தத்தினால் வருடந்தோறும் நூறு கன்னிப் பெண்களையும், முத்துக்கள் போன்றவற்றையும் திறையாகக் கொடுக்கவும், துருக்கிய கொடியின் கீழ் அரசாளவும் சம்மதித்து ஸ்பானிய நாட்டு ஆட்சி அதிகாரத்தைப் பொறுப்பேற்று மீளுகின்றான் ரெம்மில் மன்னன். உடனடியாகத் திறை அனுப்புவதற்கு பெண்கள் எவரும் , முன்வராமையால் பலவந்தமாகச் சேர்க்கப்பட்ட நூறு பெண்கள் திறையாக அனுப்பப்பட்டார்கள். தகவல் நாடெல்லாம் பரவ பல எதிர்ப்புக் குரல்கள் எழத்தொடங்கின.

இந்நிலையில் அடுத்த ஆண்டு திறையனுப்ப வேண்டிய காலமும் நெருங்கியது. பெண்களும், கன்னியாஸ்திரிகளும் எதிர்க்கத் தொடங்கினார்கள். பெண்திறை பற்றிய தகவலை அறிந்த இளவரசியும் மன்னனிடம் தன் எதிர்ப்பைக் காட்டுகிறாள். மன்னனுக்கு உணர்த்துவதற்காக அவனின் சம்மதமின்றித் தானே திறையாகச் செல்கிறாள். மன்னால் தடுக்க முடியவில்லை.

திறையாக துருக்கிய மன்னனிடம் சென்ற இளவரசி அவனை தன்னிடம் நெருங்கவிடாது, தடுப்பதற்காக தன்

மோதிரத்திலிருந்த வைரத்தைக் கடித்து விழுங்கித் தற்கொலை செய்துகொள்கிறாள். பிணம் ஸ்பானியா நாட்டுக்கு அனுப்பப் படுகின்றது.

மக்களின் எதிர்ப்பால், மகளின் திறையால் நிலை தடுமாறியிருந்த மன்னன் மகளைப் பிணமாகக் கண்டதும் துடிக்கலானான். இச் சந்தற்பத்தில் கன்னியாஸ்திரிகள் மன்னனின் தவறை உணர்த்தி புனித யாகப்பரில் (சந்தியோகுமையோர்) நம்பிக்கை வைத்து கேட்டால் துணைசெய்வார் என எடுத்துரைக்கிறார்கள். மன்னன் தன் தவறை உணர்ந்து பெண்திறை கொடுப்பதில்லை என முடிவெடுக்கிறான். போரிட ஆயத்தங்களையும் செய்யலானான்.

இந்நேரம் தமக்குத் தரவேண்டிய பெண்திறையைத் தரும்படி கேட்டு துருக்கிய தளபதி ஸ்பானியா நாட்டிற்கு வருகின்றான். ரெம்மில் மன்னன் அவனை ஏசி, பெண்திறை தாறதில்லையென முடிவாகச் சொல்லிவிட்டான்.

துருக்கிய தளபதி தன்நாடு சென்று மன்னனுக்கு தகவலைச் சொல்கின்றான். வாகைமேரோன் கொதித்தெழுந்தான் உடனடியோகவே போர் தொடுக்கவேண்டுமென ஆர்ப்பரிக் கலானான். அதற்கான ஆயத்தங்களையும் செய்து ஸ்பானிய நாட்டைச் சுற்றி வளைக்கப் பெரும் படையுடன் புறப்பட்டுச் செல்லலானான்.

துருக்கிய மன்னனின் படையெடுப்பை அறிந்த ஸ்பானிய மன்னன், போருக்கான ஆயத்தங்களுக்கு ஆணைகொடுத்துவிட்டு புனித யாகப்பர் ஆலயம் செல்கின்றான். ஸ்பானிய நாட்டையும், மக்களையும் துருக்கியரின் படையெடுப்பிலிருந்து காப்பாற்றும்படி மன்றாடுகின்றார். வேண்டுதலை ஏற்ற புனித யாகப்பர் வெண்குதிரையில் தோன்றி காட்சி கொடுக்கிறார். ரெம்மில் மன்னன் மகிழ்ச்சியுடன் போர்க்களம் செல்கின்றான்.

ஸ்பானிய நாட்டை சுற்றிவர பெரும் போர் நடை பெறலாயிற்று பலம் வாய்ந்த துருக்கிய படையினருடன் போரிடக்கூடிய திறமையைக் கொண்டவர்களாக ஸ்பானியப் படைகள் காணப்படவில்லை. பல முனைகளில் ஸ்பானியப் படைகள் இழப்புகளையே சந்திக்கலாயின. திடீரென வெண்குதிரையில் வந்த ஒரு வீரன் துருக்கிய படைகளை வெட்டிச் சரிக்கலானான். பல திசைகளாலும், பல போர் முனைகளுக்கும் பறந்தோடிப்போய் கொன்று குவித்ததால் வெகுண்ட துருக்கிய படைகள் பின்வாங்கத் தொடங்கின. துருக்கிய மன்னன் வாகைமேரோன் கைது செய்யப்பட்டான். போர் முடிவுக்கு வந்தது.

வெற்றி பெற்ற ரெம்மில் மன்னனால் வாகைமேரோன் நாடு கடத்தப்படுகின்றான். வாகைமேரோனுக்கு அடிமையாய் இருந்த நாடுகளுக்கெல்லாம் சுதந்திரம் வழங்கப்பட்டு, திறை முறை நீக்கப்பட ஆணை கொடுத்துவிட்டு யாகப்பருக்கு நன்றி செலுத்துவதுடன் கதை (கூத்து) நிறைவு பெறுகின்றது.



## காப்பு விருத்தம்

*பாராண்ட தமிழைத்தந்து பசிதீரச் சுவையைத் தந்து*
*சீராட்டிக் காத்து நிற்கும் சருவேசுரன் பாதம் போற்றி*
*பரமனின் சீடன் யாகப்பர் புகழினைப் பாடிடும் எம்மை*
*பரிவுடன் பார்த்து சிறியோர் பிழைகள் களைந்து காப்பதாமே.*

## தோடையம்

மண்ணைக் காக்கும் மாபரனைப் போற்றி
மைந்தர்கள் கூடினோம் கூத்தினைப் பாட
எண்ணமெல்லாம் உமதாய் நிறுத்தி
எடுத்தடி வைக்கிறோம் ஏற்பாய் இறைவா

வெண்புரவி மீதேறி ஸ்பெயனைக் காத்த
அண்ணல் யாகப்பரின் வரலாற்றை நாமும்
பண்ணிசைத்துப் பாடிட அரங்கினில் வந்தோம்.
எண்ணம் போலீடேற உன்னடி பணிந்தோம்

# களம் தந்த களங்கம்
(தென்மோடிக் கூத்து)

## காட்சி 1

### சபை தரு

ஒற்றைக் குடையின் கீழே உலகினை ஆழ– என்றே
அண்டை நாடுகளையெல்லாம் அடிபணியச் செய்தான்
வெற்றிக் களிப்பில் நின்று வெஞ்சமர் வென்றோரை– வரவேற்க
ஒற்றை மேளம் கொட்டிட கட்டியக்காரர் வந்தாரே

**இடம் : வீதி**

### கட்டியக்காரன் வரவு

மெட்டு : வழுக்கலாய் விழுந்தோடி

1ம் கட்: மன்னவராம் வாகைமேரோன் – அவர்
மண்ணுலகோர் போற்றும் வீரனுமாவர்
கன்னியருடன் பொன் வெள்ளி – பெற்று
காசினியில் தலைநிமிர்ந்து நிற்பவர்

2ம் கட்: செம்பிறை குடைகள் நீடவே – அருகே
செங்கதிர் கொடிகள் ஆடிடப்பாரீர்
செம்மலெம் மன்னவர் வாறார் – அவரை
செங்கம்பளம் விரித்து வரவேற்போம்நாமே

### வாகைமேரோன் மந்திரி வரல்

மெட்டு : கேடு சொல்லப்போ

பல்லவி

வா. மந்: மன்னர் என்னை ஏனழைத்தாரோ– அதிவிரைவாய்
மன்னர் என்னை ஏனழைத்தாரோ

சரணம்

மன்னர்க் கெல்லாம் சிங்கமவர்
மங்காப்புகழ் வீரனவர்
சுட்டிவிரல் அசைவினிலே
பெட்டிப்பாம்பாய் அடக்கிடுவார்.

(மன்னர் என்னை)

வென்ற நாட்டிற் கொண்ட செல்வம்
வென்ற திசைகள த்தனையும்
செந்நெல் வயல் களஞ்சியங்கள்
சொல்லக் கேட்டு அறியந்தானே

(மன்னர் என்னை)

**வகைமேரோன் தளபதி வரல்**

மெட்டு : போடா வாடாவென்று

வா தள: மன்னர் அழைத்திட சேதியை அறிந்துமே
மாட்சியுடன் சென்று மீட்சியைக் காணுவேன்
மன்னரின் வீரத்தை வையகம் அறியுமே
மாற்றானின் நிழல் கூட படநானும் விடமாட்டேன்

வீரம் விழைந்த துருக்கியின் மன்னரை
வழிபட மறுப்போரின் உயிருக்கு உலையாவேன்
வீரம் பேசிய வீணர்கள் அனைவரும்
வாழுக்கு இரையான கதையையும் சொல்லுவேன்

## இடம் : துருக்கிய அரண்மனை

**வாகைமேரோன் மன்னன் வரல்**

மெட்டு : அதியுக்கிரம லோலன்

அல்லா அருள் பெருக – அவர் நாமம்
அவனியில் மகிமை பெற – புரவிகள்
அடர்ச் சேனைகள் தொடர செங்கொடி
படரக் கொலுவினில் நடமிடுவேனே

மந்திரி தளபதி சூழ – மறுமன்னர்
துதிதந்தடி தாழ – துலங்கிடும்
அல்லா புகழினை அவனியில் நிறுத்திட
அனைவரும் போற்றிட அரசு செய்வேனே

**(கொலு அமர்தல்)**

வாகை: (கைகளை முன்னோக்கி நீட்டியபடி) சலாம் அலெக்கும்
ஏனை: (கைகளை குவித்தபடி) அலெக்கும் சலாம்

**சந்தக விருத்தம்**

தளப: வானுலாவு பானிலங்கு மகுடாலங்காரா சலாம்
மணியுலாவு கனகசிங்க அணியலங்காரா சலாம்

கானுலாவு மாதர் கவரி வீசலங்காரா சலாம்
கதிருலாவு கலிகையின் கீழ்வதி அலங்காரா சலாம்

அமை: கூனுலாவும் புலிக்கொடி அலங்காரா சலாம் சலாம்
கொய்யுலாவு யானைசேனை மெய் அலங்காரா சலாம்
தேனுலாவு வாசமாலை திருமுகலங்காரா சலாம்
சீரோன் வாகை மேரோநின் சீரடிக்கு வந்தனம்

வாகை: மந்திரியாரே!

தரு

மெட்டு : மாகருணான

வாகை: எட்டுத்திக்கும் படைசென்றே பற்பல
நாட்டையும் அடிமை கொண்டோமே – இப்போ
தூற்றுவார் எவர் போற்றுவார் எவரோ
ஆற்றுவீர் மந்திரியே இப்போதே

மந்திரி: தெய்வமே என்றும்மைத் துதிக்கையிலே தினம்
தெய்வத்தை எவர் தூற்றுவார் – பொன்னும்
பொருளும் அள்ளிக் குவிக்கின்றார்
பொக்கிஷ மெல்லாம் தங்கமயமாச்சே

வாகை: செல்லாத நாடுண்டோ ஏட்டினைப் பாரும்
வெல்லாத நாடுண்டோ அவனியில் கூறும்
சொல்லிடும் மதி மந்திரியே நீரேதும்
சொல்லுவ துண்டோ செப்பிடுவீரே

மந்திரி: நாட்டிலே பஞ்சம் என்பதே யில்லை
நானிலத்தி லெம்மைப் புகழாதாரில்லை – ஸ்பானிய
நாட்டையும் வென்று விட்டால் மேலும்
நமக்கென்ற பகையாளி யாருமேயில்லை

வாகை: இன்னமும் ஒரு நாடா? என்ன சொன்னீர், ஸ்பானிய நாடு அப்படித்தானே, ஓ நமது பெண்கள் விரும்பி அணியும் முத்துமாலை அங்கிருந்ததானே வருகிறது.

அமை: ஆம் மன்னா. நாம் பஞ்சணைக்குப் பாவிக்கும் புள்ளினத்தின் இறகுகள் கூட அங்கிருந்ததானே வருகிறது. முத்துக்கள் மட்டுமல்ல முத்தான கடல் திரவியங்கள் பல அங்கிருந்துதான் வருகிறது.

வாகை: அப்படியானால் அந்த நாடு இருக்கக்கூடாது எமக்குக் கீழ்பட்டுத்தான் இருக்கவேண்டும். நான்தான் அனைத்து நாடுகளின் சக்கரவர்த்தியாக திகழவேண்டும். தளபதி!

வாகை: போரிலே வெற்றி வீரர்கள் நாங்கள்
காரியம் ஆற்றிடத் தயங்குவதேனோ – ஸ்பானிய

தேசத்தை சுற்றி வளைத்திடும்
திட்டத்தைக் கூறுவீர் திடமாக இப்போ

தளபதி: ஸ்பானிய தேசமோ சின்னிவிர லெமக்கு
சரிபாதி சேனைகள் போதும் வெல்வதற்கு – இப்போ
போரைத் தொடங்கினால் ஈரேழு நாட்களில்
யாருமே தப்பிடார் வெற்றியும் நமதே

**சந்தக விருத்தம்**

வாகை: இந்நாள்வரையேன் காலங் கடத்தினோம் வீரத்தளபதியே
என்நாளும் எம்கொடி ஒன்றேதான் உலகிலே என்றேயிருப்போமே
எந்தன்முன் பணியாதவர் எவருமே இருக்கலாகா இம்மண்ணில்
இந்தக்கணமே எம்படைகள் செல்லட்டும் போராடிப் பணியவைப்போம்

வாகை: தளபதி, எதிரியைக் குறைத்து மதிப்பீடு செய்தால் எமக்குத்தான் ஆபத்து. வரலாறு கூறும் உண்மையிது. ஆகவே புறப்படட்டும் எமது காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை அனைத்துமே. ம்

**(திரை மூடல்)**



குருநகர் கலையரங்கில்
1973ம் ஆண்டு
மேடையேற்றப்பட்ட
“களம் தந்த களங்கம்”
நாடகத்தில் டெ. அன்ரனி
(சூரி), மு. பிரான்சீஸ்
ஆகியோர்
தோன்றும் காட்சி

## காட்சி 2

**இடம் : வீதி**

**ரெம்மில் தளபதி வரவு**

மெட்டு : அண்டமும் அதிர

வேந்தர் என்னை அழைத்ததை நானும்
வேகமுடன் சென்று கேட்டறிவேனே
சிந்தை நிறைய நல்லெண்ணங் கொண்டே
ஸ்பானிய நாட்டை ஆழுகின்றாரே

வேற்று நாட்டவர் வெகுண்டு வந்தாரோ
வேதனைத் தகவல்கள் அரண்மனை கிடைத்ததோ
கூற்று ஏதேனும் காற்றினில் வந்ததோ
கேட்டு அறிந்துநான் ஆவன செய்வேனே

**ரெம்மில் மன்னன் வரவு**

மெட்டு : பிதாச்சுதன்

பாருல கெங்கிலும் சீரும் சிறப்புடைய
பார்த்திபன் ரெம்மில் மன்னன் கீர்த்தி பெருகிட
பேருடை மன்னர்கள் வாழ்த்தி வணங்கிட
பாரினில் அமைதியை விரைந்து நான் காத்து நிற்பேன்

ஸ்பானிய மக்கள் கல்வியில் சிறந்திட
செவ்வனே பல்கலை பெற்றுப் பயன்பெற
கூடங்கள் சாலைகள் சாதனை கண்டுமே
குதூகலம் பெற்றுநான் சபைதனில் வந்தேனே

**(திரை விலகல்)**

**இடம் : ஸ்பானிய அரண்மனை**

**அரண்மனையில் தளபதி நிற்றல்**

**கவி**

ரெம்மில்: சந்தனமெனது வாசல் தங்கியே மகிழ்ந்து நிற்கும்
சுந்தரத்தவனே உந்தன் திறமையை நேரிலே பார்த்தேன்
தந்திரத்தாலே சிறந்து தத்துவம் கூறி நிற்கும்
மந்திரியாரை இங்கு இன்னமும் காணோம் யானே

தளபதி: ஆம் வேந்தே ஒருநாளும் இத்தனைநேரம் தாமதித்ததில்லையே, அதோ வாசலில் அவர் குரல் கேட்கிறது.

**ரெம்மில் மந்திரி வரவு**

மெட்டு : என்னாசை பாலரை

பல்லவி

ஆழும் மகராசன் அழைப்பு விடுத்துள்ளார்
பாழும் தகவலினால் நானும இங்கு ஏங்கித் தவிக்கிறேன்

சரணம்

பொன்னாசை கொண்ட மன்னன் வாகைமேரோன்
பெண்ணாசை பிடித்த பித்தனும் அவனேதான்
அன்னவர் செய்தியை அறிந்தபின் நானுமே
என்னென்று செல்லுவேன் மன்னனிடம் இப்போ

(ஆழும் மகராசன்)

ரெம்மில்: என்ன? என்ன அமைச்சரே என்ன?

பாரம் பரியமாய் பக்தியுடன் வாழும்
ஸ்பானிய மக்களை வஞ்சிப்பதாமோ
ஆரத் தழுவிடும் அமைதியைக் கொண்டநாம்
ஆர்ப்பரித் தெழுந்திடும் துருக்கனைத் தடுக்கவோ

(ஆழும் மகராசன்)

ரெம்மில்: மந்திரியாரே என்னசொல்கிறீர், முகத்திலே சோகம், வார்த்தையிலே புதிர் இதுநாள்வரை கண்டதேயில்லையே

**கொச்சகம்**

மந்திரி: கொட்டமடித் தெம்மை சண்டைக்கு இழுத்திட
துட்டனாம் துருக்கி தெட்டத் துணிந்துவிட்டான்
எட்டிய தகவலால் தட்டுத் தடுமாறிநான்
விட்டிட்ட பிழைதனை மன்னிப்பீர் வேந்தர்கோவே

ரெம்: உண்மையாகவா?.... அமைச்சரே! அமைதியை விரும்பிய நாம் அமைதிக்காகவே வாழ்ந்தோம். அதனால்
தளபதி: ஆயுதப் படைகளை பெருக்கவில்லை
ரெம்: அறிவாளிகளை பெருக்கினோம்
தள: ஆயுதச் சாலைகளை நிறுவவில்லை
ரெம்: ஆய்வு கூடங்களை நிறுவினோம்
அமை : பாசறைகளை அமைக்கவில்லை
ரெம்: பாடசாலைகளை அமைத்துள்ளோம்
அமை : ஆயுதங்களை குவிக்கவில்லை
ரெம்: அறிவாயுதங்களை குவித்துள்ளோம்

அமை: இப்போ..

மெட்டு : ஆகாது ஆகாதையா

ரெம்: என்ன செய்வதிப்போ ஏற்புடை மாற்றமேதோ
கண்ணாய் வளர்த்தோமே கல்வியை நாளும்
பொன்னாய் நினைத்தேன் நாட்டின் - அமைதியை
இன்றோ தடுமாறச் செய்தது ஏனோ

அமை: கண்கலங்காதீர் மன்னா கள்ளமில்லை எம்மிடத்தில்
மன்னரும் சொல்லைக்கேட்டு மறுப்பவர் யாரோ
ஆணையிட்டால் போதுமையா ஆளனி குவிந்துவிடும்
அரக்கனை வெல்வோம் வீரமுடன் நாமே

ரெம: கட்டிய எண்ணக்கோட்டை காற்றிலே பறப்பதாமோ
எட்டிய செல்வமெல்லாம் கொட்டியே தீர்க்கவா
சுட்டிய இலட்சியங்கள் சுடுகாடாய்ப் போவதாமோ
துட்டனின் கொட்டத்தை துரும்பாக மதிப்பதோ

தளப: கட்டளையொன்றே போதும் கலங்காதே மன்னா
கொட்டிடும் மேளத்தை கட்டளையாய் ஏற்பர்
கட்டிளங் காளையெலாம் கடலலையாய்த் திகழ்வர்
ஈட்டி வாழுடன் ஈனரைநாம் வெல்வோம்

ரெம்: உண்மையாகவா! தளபதியே. அமைதிக்காக வாழ்ந்த மக்களாச்சே!

### சந்தக விருத்தம்

தளபதி: நிச்சமென்று நான் கட்டியம் சொல்லுவேன் மன்னாதி மன்னவனே
அச்சமின்றி நாமும் அணிசேர்ப்போம் படைகளை போர்க்களம் சென்றிடவே
கல்விச் சாலைகளை சிலநாள் ஆயதச் சாலைக ளாக்கிடுவோம்
கல்விமான்களுடன் களம்நோக்கிச் செல்வோம் கலங்காதீர் மன்னா

ரெம்: இல்லை இல்லவே இல்லை

### கல்வெட்டு

ரெம்: கொட்டியது பாம்பென கொடுஞ்சொல்லால் துவண்டிடினும்
கோபமெனது நெஞ்சில் கொதித் தெழுகின்றதே
துட்டனாம் துருக்கியின் போர்வெறி கண்டுநான்
துளியேதும் அஞ்சிடேன் துணிவுடனே நிற்பேன்
கட்டிளங் காளையெலாம் களம்நோக்கிச் செல்லட்டும்
கன்னியர் படையும் களச்சேவை செய்யட்டும்
கட்டியக் கல்விச்சாலைக ளெல்லாம் ஆயுதசாலைகளாகட்டும்
கொட்டிடும் போர்ப்பறை சாலைகளிலெல்லாம் ஒலிக்கட்டும்

பெட்டிப் பாம்பாய் அடங்கிடக் கோழையல்ல எனவே உணர

**சிந்து**

பல்லவி

தளப: பேடியென் றெண்ணி விட்டானோ - ஓடிடுவானென்று
கெட்டியாய் முடிவெடுத்தானோ

அனுபல்லவி

பேடியென் றெண்ணிவிட்ட அடிமட்டப் போக்கிரியை
கொட்டமடக்கிடவே எட்டியே வருகின்றேனே
(பேடி)


கோழையென்று கோலமெடுத்தானோ - சொல்லாமல்
குவிந்திடுவோ மென்றே குதித்தானோ
கோழையென்ற கொற்றவனு மொடுங்க சேனை நடுநடுங்க
போரிலே வென்று ஆனவழி காட்டுவேன் நான் அவனை
(பேடி)

சீறிநின்றால் பாம்பு அல்லவோ - பார்த்தால்
சிறுகுருவி எனக் கணித்தானோ
சிறுத்தைபோலவே குறித்துப் பாய்ந்து கிலி பிடித்திட
சிதறுண்டோடி சரிந்திடச் சேனை பல செய்குவேனே
(பேடி)

ரெம்: தளபதியே.... புறப்படட்டும் கஜ, ரத, புர, பதாதிகள். கடற்படையும் இணைந்து கொள்ளட்டும் வெற்றி

தளபதி: நமதே

**(திரை மூடல்)**



குருநகர் கலையரங்கில்
1973ம் ஆண்டு மேடையேற்றப்பட்ட
"களம் தந்த களங்கம்" நாடகத்தில்
ரெம்மில் மன்னனாக த. யேசுராசாவும்,
வாகைமேரோன் மன்னனாக
டெ. அன்ரனி (சூரி) யும்
தோன்றும் காட்சி

## காட்சி 3

**இடம் : போர்க்களம்**

**(வீரர்கள் இருபுறமும் போரிடுவதைப்போல் மாறிமாறி ஓடிக்கொண்டிருக்கிறார்கள். பின்னணியில் உரை)**

**உரை:** போர் போர் உக்கிரமான போர் பலம்வாய்ந்த துருக்கிய படைகள் எதிர்பாராத வகையில் இரவோடிரவாக ஸ்பானியா நாட்டுக்குள் ஊடுருவி விட்டது. அமைதியை விரும்பி நின்ற ஸ்பானிய நாட்டுப் படைகளால் திடீரென அவர்களை எதிர்கொள்ள முடியவில்லை. இழப்புகள் அதிகரித்த வண்ணமேயிருந்தது..... தொடர்ந்தும் அலையலையாய் வந்த துருக்கிய படைகளின் எதிர்ப்பை சமாளிக்க முடியாமல் ஸ்பானிய படைகள் பின்வாங்கத் தொடங்கின.... முன்னணியில் நின்று போரிட்ட ஸ்பானிய மன்னன் ரெம்மிலை துருக்கிய படைகள் சூழ்ந்துகொண்டன. இறுதியில் ரெம்மில் கைதுசெய்யப்படுகின்றார்

**(வாகைமேரோன் வாளுடன் முன்செல்ல.
ரெம்மிலின் கைகளை கட்டியபடி போர்வீரர் இழுத்துப் போகிறார்கள்.
தளபதியின் கையில் ரெம்மில் மன்னனின் முடி இருக்கின்றது)**

**இடம்: வீதி**

**கட்டியகாரர் வரவல்**

மெட்டு : வருகின்றார் மன்னன்

1ம் கட்: வருகின்றார் மன்னவர் வாகைமேரோன் – ஸ்பானிய
வீரரை முற்றாக அழித்துமே
போரிலே புலியெனக் காட்டியே – கைது
செய்திட்டார் ரெம்மிலை கேளுங்கோ

2ம் கட்: தேசத்து மக்களே கூடுங்கோ– இங்கு
தெருவெங்கும் தோரணம் கட்டுங்கோ
தாசரெம் மன்னரின் பெயர்தனை – சொல்ல
தேசமெலாம் கொடி ஏற்றுங்கோ

**(திரை விலகல்)**

## காட்சி 4

**இடம் : துருக்கிய அரண்மனை**

**(வாகைமேரோன் அரண்மனையில் நிற்றல். ரெம்மிலை இரு வீரர் இழுத்துவரல்)**

**சந்தக விருத்தம்**

வகை: அச்சமென்பதே அறியாத எனை எதிர்த்தாயோ அற்பனே
மிச்சமென்ன கண்டாய் துச்சனே நீயும் அறிவாயோ மூடனே
பச்சைக்கொடி காட்டி ஏற்று இருந்தால்நீ அச்சமில்லை உனக்கே
அஞ்சாதே இப்போதும் அடியேனின் ஆணையை ஏற்று நடந்திடுவாய்

வாகை: எக்காளத்தொனி உரைத்த ஸ்பானிய நாட்டு மன்னவனே எமது படைகளின் வீரம் பற்றி அறிந்ததேயில்லையா?

**தரு**

மெட்டு : கூனற்றவளசங்க

வாகை: சேனைபலவிருக்கும் வாகைமேரோன் தன்னை
சாவிற்கஞ்சிடாத சக்கரவர்த்தி என்னை
பூனையென்றே நினைத்து போர்க்கோலம் பூண்டாயோ
பாதி இரவுக்குள்ளெ பந்தாடி முடித்தெனே
கொடுவிப்போ இளமங்கை நூற்றுவரைத் திறையாய்
விடுவிப்பேன் உனையின்றே கொடி கீழ் அரசாள

ரெம்: உந்தன் படைகளெல்லாம் மானப் படைகளோடா
ஊளையிட்டு நிற்கும் கோழை வாகைமேரோன்
ஈனத்தனமாய் எங்கள் இடத்தில் புகுந்த நீயும்
இரவோடிரவாய் அழித்தில் பெருமையா
தந்திடேன் திறையினை எனதுயிர் எடுத்திடினும்
திறையாகக் கன்னியரைத் தரேன் ஒருபோதும்

வாகை: கன்னியர் திறை என் இலக்கு
ரெம்: ஸ்பானிய மன்னனா பொறுப்பு?
வாகை: மண்ணாளவேண்டிய அடிமை நீ
ரெம்: வஞ்சனையால் வென்ற துரோகி நீ
வாகை: கொஞ்சம், நாவை அடக்கு
ரெம்: எஞ்சிய எனதுயிருக்காகவா?
வாகை: இல்லை
ரெம்: அப்படியென்றால்
வாகை: உன் நாட்டுக்காக
ரெம்: இழந்து நிற்கிறேனே

வாகை: உன் நாட்டு மக்களை
ரெம்: உயிராய் மதிக்கிறேன்
வாகை: நாட்டு வளங்களை
ரெம்: நட்பாய் நினைக்கிறேன்
வாகை: அப்படியா. பெண்திறை இல்லையென்றால்

வாகை: வானத்தால் விழைந்த வளங்களை அழிப்பேன்
வீரரைவிட்டுநான் சூறையாடிக் குவிப்பேன்
கன்னிய ரெல்லாரையும் கனியவைத்துப் பார்ப்பேன்
கட்டுக் குலையாத நாட்டைக் காணவே மாட்டாயே
முடிவாகச் சொல்லிடு மூடனே பெண்களை
திறையாக அனுப்பிடின் கொடுத்திடு ஆணை

ரெம்: இறைவா, எனக்கேன் இந்த சோதனை

ரெம்: நீசனுன்னை நினைத்து நாணிக் குறுகலானேன்
நாட்டு மக்களை நினைத்து நட்டாற்றில் தவிக்கிறேன்
ஸ்திரிலோலனே உந்தன் திறையை ஏற்றேன்
ஸ்பானிய நாட்டின் நலனைக் கருத்திலே கொண்டேன்
கைதியாய் இப்போ கைகட்டி நிற்கிறேன்
காலம் பதில்சொல்லு மொருநாள் அறிவாயே

வாகை: இது புத்திசாலித்தனம். அமைச்சரே, ஓலையில் எழுதியுள்ளதைப் படியுங்கள்.
அமை : **(ஓலையைப்படித்தல்)**
மேன்மை தங்கிய சக்கரவர்த்தி வாகைமேரோன் சமூகத்திற்கு ஸ்பானிய நாட்டு மன்னன் ரெம்மில் ஆகிய நான் போரிலே தோல்வி யுற்றதனால், இழந்த நாட்டை மீண்டும் பரிபாலிப்பதற்கு திறையாக வருடந் தோறும் நூறு கன்னிப் பெண்களையும், முத்துடன் சேர்ந்த கடல் திரவியங்கள் ஒவ்வொரு வண்டில்களும் அனுப்பி வைப்பேனென இத்தால் உறுதிப் படுத்துகின்றேன்.
இப்படிக்கு, தொம் ரெம்மில், ஸ்பானியா தேசம்.

**(வீரர்கள் கைகளை அவிழ்த்து விடல்,**
**அமைச்சர் ஓலையை ரெம்மிலிடம் கொடுத்தல்.**
**ரெம்மில் தயங்கித் தயங்கி இலஞ்சனை பதிப்பித்தல்.**
**வாகைமேரோன் முடியை தளபதியிடம் பெற்று ரெம்மிலுக்கு சூட்டுதல்**
**அனைவரும் கைதட்டி மகிழல்)**

வாகை: தளபதி ரெம்மில் மன்னருடன் ஸ்பானியா தேசம் சென்று, எமது கொடியை அரண்மனையில் நாட்டிவிட்டு நூறு கன்னிப் பெண்களைத் திறையாகப் பெற்று வருவீராக
தள: உத்தரவு வேந்தே!

**(திரை மூடல்)**

**இடம்: வீதி**

(துருக்கிய தளபதி கொடியுடன் முன்னே செல்லல்
ரெம்மியில் பின்தொடர்தல்)

**தரு**

மெட்டு : அய்யய்யோ கெட்டேனே

ரெம்: என்னென்று செல்வேனே மக்கள்முன்
என்னென்று செல்வேனே - இந்த
மண்ணினில் என்னையே எவரேனும்
மன்னிக்க மாட்டாரே

என்நெஞ்சு தானெரியுந் துயரம்
என்னென்றென் எண்ணத்தை - சொல்லி
உணர்த்து ஏற்றிடுவாரோ - அவர்
உணர்ந்து கொள்வாரோ

(திரை விலகல்)



குருநகர் கலையரங்கில்
1973ம் ஆண்டு
மேடையேற்றப்பட்ட
"களம் தந்த களங்கம்"
நாடகத்தில் த. யேசுராசா,
கி. கிறிஸ்ரியன்
ஆகியோர்
தோன்றும் காட்சி

## காட்சி 5

**இடம் : ஸ்பானிய அரண்மனை**

**(அமைச்சர், தளபதி நிற்றல்.
ரெம்மில் வந்து அரண்மனையில் ஏறி நிற்றல்,
துருக்கிய தளபதி கொடியை அரண்மனையில் நாட்டுதல்)**

ரெம்: யாரங்கே! (வீரன் வரல்) துருக்கிய தளபதியை நமது விருந்தினர் மண்டபத்திற்கு அழைத்துச்சென்று ஓய்வெடுக்கச் செய்யுங்கள்

வீரர்: உத்தரவு (இருவரும் போதல்)

தள: மன்னிக்க வேண்டும் மன்னவா, தங்களை தனிமையில்

ரெம்: இல்லை. தனிமையில் கைது செய்யப்பட்டதுதான் நல்லது. நீங்கள் இங்கில்லையென்றால் நாட்டு மக்கள் நலனைப் பேணுவது யார்?

மந்: மன்னா! தாங்கள் மிகவும் களைப்படைந்திருக்கிறீர்கள்.

**கலித்துறை**

ரெம்: கட்டுண்டேன் காவாக் கயவோர்
கடுஞ்சினத்திற் காவலுற்றேன்
வெட்டுண்டு மாண்டிடினும்
வீரமொடு உலகு புகழ் வேண்டிலனே
எட்டுண்ட திக்கும் ஸ்பானியர்
இழந்த புகழ் இனிவருமோ
கெட்டின்று போனேன் எனக்கிந்த
கேண்மையிலும் கேவலமே

அமை: மன்னா

**தரு**

மெட்டு : வீடாகிய பதுமாமணி

ரெம்: என்னி லுயிர் இல்லை – அதை
எண்ண உளமுமில்லை – பெண்ணை
எந்தநாளுமே இந்தநாள் முதல்
திறையா யனுப்பிட வேண்டுமே

அமை: நாடோ இடர்தன்னில் – யாரும்
கேளார் இந்தக் கதையை – பித்து
பிடித்த தென்றே இந்த வேளையில்
பரிகாசம் செய்துமே நிற்பார்

ரெம்: என்ன செய்வது அமைச்சரே, பெண்திறைக்கு நான் சம்மதிக்கவில்லை யென்றால்... நாடு நகரெல்லாம் சூறையாடப்படும், கற்புக் குலையாத

கன்னியர்கள் எல்லோரும் கற்பழிக்கப்படுவார்கள். நாடே சுடுகாடாய் மாறிடும்..... இந்நிலையில் எனக்கு வேறுவழி தெரியவில்லையே.

ரெம்: என்நிலை நீருமறிவீர் – இப்போ
நன்னயம் செய்யவெழுவீர் – பிழையை
மன்னித்தேற்றே இப்போதே சென்றுநீர்
கன்னியர் திறைக் கழைப்பீரே

தளப: மன்னா! நீங்கள் பிழை செய்வதா? இருக்கவே இருக்காது. நாட்டின் எதிர்கால நலனுக்கு நீங்கள் எடுத்த முடிவு சரியானதே

தள: நாட்டின் நலன்மிகவே – அதை
கெட்டியாய் உரைத்திப்போ – திறையை
கட்டிட எழுவோம் அன்றேல்
பலவந்தமாய் இழுத்த னுப்புவோம்

ரெம்: இந்தத் தருணம் எதையும் அலசி ஆராயமுடியாத தருணம். என் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவல்ல. நாட்டின் நலனொன்றிற்காகவே நூறு பெண்கள் திறைக்கு சம்மதித்தேன். அதே நாட்டின் நலனுக்காய் பெண்திறை அனுப்பிட எதைச் செய்திடினும் அனுமதி தருகின்றேன்..... அமைச்சரே! திறை சம்பந்தமாக நான் எடுத்துச் சொல்லும்வரை என் மகளுக்கு தெரியவேண்டாம்.

இரு: உத்தரவு

**(திரை மூடல்)**

**உரை:** சுயமாகத் திறைசெல்ல பெண்கள் எவருமே விரும்பவில்லை. பலவந்தமாகச் சேர்க்கப்பட்ட நூறு பெண்கள் திறையாக அனுப்பப் பட்டார்கள். தகவல் நாடெல்லாம் பரவ பல எதிர்ப்புக் குரல்கள் எழத்தொடங்கின. பெற்றவர் தங்கள் பெண் பிள்ளைகளுக்கு குறைந்த வயதிலேயே திருமணத்தைச் செய்யத் தொடங் கினார்கள். இதனால் குடும்பங்களிடையே பல பிரச்சினைகள் உருவெடுத்தன. கலாச்சராச் சீரழிவுகள் தலைகாட்டத் தொடங்கின.

சில பெற்றோர் தத்தமது கன்னிப் பெண்களுடன் அயல் நாடுகளில் புலம்பெயரத் தொடங்கினார்கள். பெண்கள் கன்னி யாஸ்திரி மடங்களில் தொகையாகச் சேரத் தொடங்கினார்கள். இவைகள் பலவகையிலும் பற்பல புதிய பிரச்சினைகளுக்கு வழிவகுக்கத் தொடங்கின. கல்வி, அமைதி குலையத் தொடங் கியது. இதனைத் தடுத்திட பலரும் முன்வரத் தொடங்கினார்கள். இந்நிலை தொடர்ந்து கொண்டிருக்கையில் திறை அனுப்ப வேண்டிய காலமும் அண்மித்தது. கிளர்ந்தெழுந்தனர் பெண்கள்.....

## காட்சி 6

**இடம் : வீதி**

(இரு பெண்கள் பாடிக்கொண்டுவரல்)

மெட்டு : என்மகனே பொன்மகனே

1ம் பெ: என்மகளை பொன்மகளை என
தின்பரசப் பைங்கிளியை
மன்னனின்றே திறைதா வென்றால்
என்னாளும் இணங்கிடவே மாட்டேனே

2ம் பெ: யாரோ பெற்ற பெண்டிர்களை எம
தரசன் அழைத்திடல் தகுமோ
பேர்விளங்க வந்த செல்வம் –அங்கே
சீரழிந்து போவதாமோ

1ம் பெ: கன்னியர் திறை தரவே மதி
மன்னனுக்கு கண்ணில்லையோ
என்னுயிர் இழந்திடினும் – நானும்
ஏற்றிடேனே பெண்திறையை

2ம் பெ: கண்ணாய் மதிக்கும் கற்பை – அந்த
காமுகன் பறித்திடலாமோ
பெண்ணாயப் பிறந்தவ ரெல்லாம் – இப்போ
மன்னனிடமே கேட்டிடணும்

1ம் பெ: உண்மை. இனிமேல்நாம் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. நாடெங்கிலுமுள்ள நாம் ஒவ்வொருவரும் கிளர்ந்தெழ வேண்டும். நிலமையை அரண்மனை அறிய வேண்டும். அதோ அமைச்சர் வருகிறார். அவரிடமே கேட்போம்

(அமைச்சர் வரல்)

**இன்னிசை**

2ம் பெ: உற்றமதி மந்திரியே மன்னவர் கடன்களுக்கு
கற்புடைய மாதரெம்மை கையளித்த நீதியெங்கே
பெற்றவுன் மகளைநீரும் பரிவுடன் அனுப்புவீரோ
அற்றகுடி மக்களைத்தான் அலையலையாய் அனுப்புவீரே

1ம் பெ: மந்திரியே
குற்றமறியாத பெண்ணை கொலைக்களம் அனுப்பலாமோ
பெற்றவரின் சிந்தையினை பொடிப்பொடியாய் உடைக்கலாமோ
கொற்றவனின் ஆணைதனை கோதையர் ஏற்கோமென்றே

பற்றுள்ள மந்திரியே பகருவீர் மன்னவ... மிப்போதே

மெட்டு : நல்லமதி மந்திரியே

அமை: கற்புநிறை மாதர்களே – கற்புநிறை மாதர்களே
கவலைகளை நானறிவேன் கேட்டீர்– இப்போ
சாற்றிடுவீர் மன்னனிடம் சற்றும் தயங்காமல்
சகிப்புடன் ஏற்றால் காத்திடலாம் உம்மை

அமை: பெண்களே உங்களைப்போன்ற பல்லாயிரம் பெண்களின் எதிர்ப்பை பல இடங்களிலும் பார்த்துதான் வருகின்றேன். நான் எதுவுமே செய்யமுடியாத நிலை. நீங்கள் மன்னரிடம் சென்று நேரடியாகவே எதிர்ப்பைக் காட்டுங்கள். அதற்குமுன் இன்று மன்னர் மகள் ராசவீதியால் வீதிவலம் வருகிறார். இளவரசியைச் சந்தியுங்கள். இளவரசியால்தான் மாற்றமுடியும்.

2ம் பெ: நன்றி மந்திரியாரே. உங்கள் யோசனையும் சரிதான் நீங்கள் போய்வாருங்கள். **(அமைச்சர் போதல்)** வா நாம் ராசவீதிக்குப் போவோம்.

**(பெண்கள் ஒருபுறத்தால் செல்லுதல். மறுபுறத்தால் இரு வீரர்கள் முன்வர இளவரசி தொடர்ந்து வருகிறார். பாதி தூரம் வந்தபின்னர் பின்னாலிருந்து இரு பெண்களும் வரல்)**

1ம் பெ: இளவரசி நில்லுங்க.
வீரர்: **(பெண்களைத் தடுத்து)** ஏய் யார் நீங்கள். இளவரசியை மறிக்கக்கூடாது.
இளவ: விடுங்கள் அவர்களை. வீரரே! சிறிதுநேரம் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். இவர்களுடன் நான் பேசவேண்டும். **(வீரர் போதல்)** வாங்கம்மா, நீங்கள் யார்? என்ன வேண்டும் உங்களுக்கு?
2ம் பெ: பொன் வேண்டாம், பொருள் வேண்டாம், மண் வேண்டாம், மணி வேண்டாமம்மா.
1ம பெ உயிர்ப்பிச்சை வேண்டும், கற்புடன் எம்மவர் வாழவேண்டும்.
இளவ: புரியவில்லையே அம்மா

மெட்டு : செப்பரியபூவில்

2ம் பெ: ஆருமிலாப் பாவிநாமே தேவி – உங்கள்
ஆதரவைத் தேடிவந்தோம் பாவி
பாரிலுந்தன் தந்தைசெய்கை யாலே – நாமோ
பலிக்கடாவாய் ஆகினோமே தேவி

இளவ: எந்தன் தந்தை செய்ததென்ன தாயே – ஏன்நீர்
ஏதலியாய் ஏங்குகிறீர் தாமே
நிந்தைபரிகாசம் செய்யும் மாதே – நீவிர்
நிவர்த்திகாண எனக்குரைப்பீர் தாயே

1ம் பெ: கன்னிப்பெண்ணை திறையனுப்பும் நீதி – பாரில்

காவலனுக்கெவர் தந்தாரோ தேவி
மன்னர்குல கன்னிகையே திறையாய் - யாரும்
மாற்றான் கைக்கு மாறலாமோ தேவி

இள: என்ன கன்னிப்பெண்கள் திறையா?

இள: வீண்பழியை சொல்வதேனோ நீவிர் - நம்மை
வாழவைக்க வந்தவரென் தந்தை
கன்னியரைத் திறையனுப்பும் தேவை - நாட்டை
காப்பவர்க்கு வந்ததேனோ கூறீர்

1ம் பெ: கடந்த ஆண்டு போரிலே தோற்று மீண்ட மன்னர் கதறக்கதற, பலவந்தமாய் இழுத்து நூறு பெண்களை திறையாக அனுப்பி வைத்தாரே உங்கள் அப்பா, எங்கள் மன்னர். இதை நீங்கள் அறியவில்லையா? இப்போ திறை அனுப்பவேண்டிய காலம் நெருங்கிவிட்டதை மறந்துவிட்டீர்களா?

இள: உண்மையாகவா நீங்கள் சொல்வதெல்லாம் புதுமையாக இருக்கிறதே

2ம் பெ: நாடே குமுறி எழுகிறதே யாரும் உமக்கு உரைத்ததே இல்லையா? .. ஸ்பானியா நாட்டு மக்களின் துடிப்பும், துயரமும, கண்ணீரையும் அரண்மனை அறியாதது வேதனை தருகிறது தேவி

இளவ: நீங்கள் சொல்வதொன்றையும் நானறிந்ததில்லை... கள்ளமின்றித் துள்ளித் திரிந்தேன். களம் சென்ற வேந்தனால் வந்த கறைபடிந்த களங்கத்தை காண மறந்திருந்தேன்.

**இன்னிசை**

இளவ: உச்சிதத்து ரெத்தினமாய் ஓங்கிய என்தந்தை
உச்சிமோந்த தன்மகட்கே மறைத்தார் திறையினையே
நிச்சமாய் பெண் திறையை நிகழநான் விடமாட்டேன்
அச்சமினி வேண்டாம்மாதே அமைதியாய்ச் செல்லுவீரே

இளவ: பெண்களே உங்கள் வேதனை எனக்குப் புரிகின்றது. கன்னிப்பெண் திறையை நியாயமென்று மண்ணினில் எவரும் சொல்லார். அந்தத் திறையை நிறுத்தி நாட்டு மக்களின் கண்ணீரை நிச்சயமாய்த் துடைப்பேன். என்னை நம்புங்கள். இத்தனைநாளும் நான் அறியாமற் போனதற்காக என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்.

1ம் பெ: வேண்டாம் இளவரசி உங்கள் வார்த்தை ஒன்றே போதும் நாங்கள் அமைதியாய் இருப்பதற்கு. நாங்கள் போய்வருகின்றோம்.

**(அனைவரும் போதல்)**

(திரை விலகல்)

**இடம்: ரெம்மில் அரண்மனை**

(ரெம்மில், தளபதி, அமைச்சர் நிற்றல்)

**விருத்தம்**

ரெம்: பகலவனை ஆடையாய் பனிமலையை மிதியடியாய் கொண்ட
பலஸ்தீனப் பாவையாம் கன்னிமரியா ளீன்ற மைந்தா
அகவினை பவவினை கழைந்தேநீரும் காப்பாய் எம்மை
அவனியில் அருளொடு நாம்வாழ அருள்வாயே துணை

(விருத்தம் முடியுமுன்னர் இளவரசி வந்து நிற்றல். முடிந்ததும்)

**கவி**

இள: தந்தையே அரசே போற்றி தரணியாள்பவரே போற்றி
விந்தையாய் திறையு மனுப்பும் வித்தகசித்தரே போற்றி
முந்தையோர் செய்யாத முறையை முன்மொழிந்தவரே போற்றி
வந்தாரை வாழ வைத்திடவே வழிகாட்டுபவரே போற்றி போற்றி

ரெம்: அந்தபுரத்தில் அணுகவேண்டிய இளவரசிக்கு இங்கு.....

இள: என்ன வேலை என்று கேட்கிறீர்களா? அந்தபுரம் அறியாத விடயங்கள் பல அரண்மனைக்குள் புதைந்து கிடக்கின்றது. அறிய வந்தேன் தந்தையே

ரெம்: புரியவில்லையே,

இள: அனைத்தும் அறிந்தவர் நீங்கள், நினைத்ததைச் சாதிப்பவர் நீங்கள் புரியவில்லையே என்பது புதிதாக இருக்கின்றது

ரெம்: புதிர் போடாதே மகளே!

இள: புரியாதவைகள் புதிராகத்தான் தெரியும். கன்னிப் பெண்கள் திறைபற்றி அறிந்திருக்கிறீர்களா? அத்திவாரமிட்டவரே நீங்கள், கதறக்கதற அனுப்பிவைத்தவரே நீங்கள் அப்படியிருக்கையில் அறியாதிருக்கமுடியுமா?

ரெம்: மகளே! இவற்றையெல்லாம் இயம்பியது யார்?

இள: மதிநுட்பமாய் மறைத்துவைக்கச் சொன்னீர்களா? மதிகெட்ட செயலை எப்படியப்பா துணிந்து செய்தீர்கள்.

ரெம்: மகளே!

மெட்டு : காணேனே என் அன்பி

ரெம: வா வா வா மகளே நீ
வாராயோ
காவலன் உன்தந்தை
பாவி என்ன செய்குவேன்
கண்ணிர் துளிசிந்தும்

பெண்ணைத் திறையாக
மண்ணிற் பிணையாக
வஞ்சகன் சொல்லிற்கு
வாழ வழியில்லை
மீளவும் வழியில்லை
மன்னவன் என்னை – நகை செய்ய
என்ன வினையோ

**தரு**

மெட்டு : கூனற்றவளசங்க

இள: உங்கள் புலம்பலெல்லாம் கறையைத் தடுக்குமாமோ
ஊரைக் கூட்டிக்கேழும் உயர்ந்த உள்ளத்தோடே
மங்கையர் திறையேற்று மீண்டு வந்த நீரும்
மதிகெட்டு களங்கத்தை சுமந்ததில் பெருமையோ
கல்வியில் கலைகளில் ஒழுக்கத்தில் உயர்ந்திட
அள்ளியே இறைத்தும் பயனற்ற தாச்சே

ரெம்: ஊரிற் பெரியோரும்
உத்தமரும் என்னை
ஒப்புரவற் றென்னை
இப்புவி ஏசுமே
வாளிற் கொலைஞன் முன்
தாழிற் பணிவேனோ
வஞ்சகன் தன்செயல்
நெஞ்சு கொதிக்குதே
நஞ்சு விதைத்தான் – பெண்கள் குலம்
அஞ்ச விழித்தான்

இள: மன்னரும் நீரோவென்றே மக்கள் கேட்டிடவே
மானமிழந்து நிற்கும் முடிமன்னரும் நீரே
மண்ணினில் உம்பழி அழித்திடல் முடியாது
மன்னனின் களங்கத்தை மகளேற்றுக் கொள்கின்றேன்
செல்கிறேன் திறையாக கன்னியர் குறைதீர
திறக்கட்டும் கண்கள் தருமத்தைக் காத்திட

ரெம்: என்னம்மா சொல்கிறாய்?
இள: திறையாக நான் செல்லப்போகிறேன்.
ரெம்: அம்மா! இளவரசியே திறையாகவா?
இள: நானும் பெண்தானேயப்பா. நாட்டிலுள்ள பெண்களை திறையாக அனுப்பலாமென்றால் என்னையேன் அனுப்பக்கூடாது. இளவரசிக்கு ஒரு சட்டம் ஏனைய இளவல்களுக்கு ஒரு சட்டமாப்பா?
ரெம்: இல்லை மகளே இல்லை
இள: அப்படியென்றால் ஏன் தடுக்கவேண்டும்.

ரெம்: நீ என்மகள்
இள: பெண்ணைப் பெற்ற ஒவ்வொருவர் நிலையும் இதுதானப்பா.
ரெம: மன்னன் மகளம்மா
இள: கண்கெட்ட மன்னனுக்கு மகளாக இருப்பதையிட்டு வேதனைப்படுகின்றேன். வெட்கித் தலைகுனிகிறேன். அப்பா என்னை மன்னித்துக்கொள்ளங்கள். நான் போகிறேன்
ரெம்: வேண்டாமம்மா? **(இளவரசி போக முயற்சித்தல்)** நில்.
இள: என்னைத் தடுக்க முடியாதப்பா பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட எவரும் சுயமாக முடிவுகளை மேற்கொள்ளவும், செயற்பட முடியுமென ஸ்பானிய நாட்டுச் சட்டம் சொல்லுதப்பா.
ரெம்: ஐயோ என்செய்வேன். **(வேறு திசையில் பார்த்தபடி நிற்றல்)**
இள: உங்களால் உருவாக்கப்பட்ட சட்டமும், உங்களால் உறுதியளிக்கப்பட்ட கன்னியர் திறையும் உங்கள் மார்பிலேயே பாயுமென்று நீங்கள் நினைத்தேயிருக்க மாட்டீர்களென்ன? போகிறேனப்பா **(இளவரசி போதல்)**
ரெம்: **(இளவரசி போவதைப் பார்த்துக்கொண்டிருத்தல்)** உண்மைதான் நான் தோண்டிய குழியில் நானே சிக்கிவிட்டேனே **(சோகத்தில் தடுமாறி அரண்மனைத் தூணைப் பிடித்தபடி நிற்றல்)**
அமை: இளவரசியாரின் செயல் வேதனை தருகின்றது மன்னா. வேந்தே நீங்களொன்றும் அறியாததல்ல பெண்திறையை நாட்டு மக்கள் அனைவருமே வெறுக்கிறார்கள்.
ரெம்: என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள் அமைச்சரே

**விருத்தம்**

அமை: பொன்மணி மகுடம் பூண்டிப் பூதலம் புரங்குங் கோவே
கன்னியர் தம்மைச் சோனர் கையினிற் திறையாயழியாமல்
இந்நிலத் தினிலுண்டாகும் மிகுநிதி தருவோமென்று
மன்னவர்க்கு தூது ஒன்றை கொடுத்து நீர் அனுப்புவீரே

**கவி**

ரெம்: அனுப்பு வாயெனவே சொன்ன அமைச்சனே அவனிமீது
சினப்புலி எதிர்த்து வந்தாற் சிறியமான் பயப்படாதோ
கனப்படை யுடையோனான கருதலன் தனக்கு முன்னே
மனப்பய மடைவா ரெங்கள் மாநகர்ச் சனங்கள் தானே

ரெம்: அமைச்சரே பெண்திறையை மறுக்கச்சொல்லி இலகுவாய் சொல்லுகிறீர். மறுத்தால் வாகைமேரோனின் படைகள் எங்களை நோக்கி வரும். நாட்டு மக்களுக்கெல்லாம் துன்பத்தை உண்டாக்கும்.

மெட்டு : எல்லையற்று

அமை: இல்லையில்லை திறையெ ன்றால் – துருக்கி
இடியென முழங்கல் திண்ணம்
தொல்லைதனை துடைப்ப தாயின் – போரை

தொடர்வதே நமக்கு நல்லம்

இணையில்லாத கன்னியர் கற்பை – அழித்தால்
இம்மண்ணிற் கேடன்றோ மன்னா
துணையுண்டு யாகப்பர் எமக்கு – வேண்டி
தோற்கடிப்போம் மாற்றார் படையை

ரெம்: தளபதியே பெண்திறை பற்றிய எதிர்ப்பு பல பக்கத்தாலும் ஓங்கி ஒலிப்பதை உளவுத் தகவல்கள் கூறுகின்றது. ஒருவேளை பெண்திறை கொடுக்க முடியாதுபோனால் போரைத் தவிர வேறு வழியில்லை. அதனால்

மெட்டு : ஆகமமா யறிவினுள்ள

ரெம்: கேடுதரு யுத்தமொன்றைத்தேடி
கனவிலேனும் நானெழவில்லை
கொடியோன் வாகைமேரோனின்
கொடிய திறையே தானே

வீட்டுக்கொருவர் வீரிட்டு எழனும்
வாளுடன் வேல்பயிற்சி
நாட்டையே போர்க்களமாக்கி
நன்றெனக் காத்திடுவீர்

தள: சங்கொலிகேட் டடங்குமுன்னே
சதிராடிக் கொல்வரெதிரியை
தூங்காது நாட்டைக் காத்து நின்று
துயர் துடைப்பார் கேளீர்

ரெம்: நல்லது... இத்துடன் அரசசபை கலையட்டும்

(திரை மூடல்)

## காட்சி 7

**இடம் : துருக்கிய அரண்மனை**

(வாகைமேரோன் நிற்றல்)

**கவி**

வாகை: மாயிருஞால மெல்லாம் வகுத்திடும் பரமே போற்றி
தாயினு மினிமை கொண்ட தண்ணொளியுடையாய் போற்றி
தூயமெஞ்ஞான ரூபாய்த் துலங்கிய சுடரே போற்றி
ஆயிலாறை சூலாய் நின்ற அல்லாவே போற்றி போற்றி

(மந்திரி வரல்)

மந்: அரசிறுப்புஞ் சிம்மாசனமும், ஆஸ்தான கொலுவும், குன்றாத கோலும், வற்றாத கொடையும், நிற்கமல பாதமும் சரணமே சரணமையா.

மெட்டு : மன்னவனாம் பிலிப்பரசன்

வாகை: சரணமெனவே சாற்றிடும் அமைச்சரே
சிரமமின்றியே திறைகள் வருகுதா – நாட்டில்
பருவமழையால் செந்நெல் விழையுதா
பங்கமேதும் இங்கு உண்டா சொல்வீர்

மந்தி: பங்க மேதும் இங்கில்லை மன்னா
தங்க வயல் பொங்கி வழியிது – ரெம்மில்
மன்னன் மட்டும் கன்னியர் திறையை
மறந்து விட்டானோ மறுத்து விட்டானோ வேந்தே

வாகை: கன்னியர் திறையை அனுப்ப காலம் கடத்தி விட்டானா? .. கூடாது
மந்: உண்மைதான். உடனடியாகவே அதிரடி நடவடிக்கைகளில் ஈடுபடுவது நல்லதல்ல. முதலில் தளபதியை திறைகேட்டு தூதனாக அனுப்பி விடுங்கள். திறை தர மறுத்தால் போர்தானென்று அறுதியிட்டுச் சொல்லி விடுங்கள்.
வாகை: மதிநுட்பமான யோசனைதான் மந்திரியே

(தளபதி வரல்)

மெட்டு : அதிராமராம

தள: அரசர்க்கரசே அவனிகாப்பவனே
அல்லாதுணையோடுதானே அரசாளும்
பரிவானதேவா படையாளும்நாதா
பலமாகநாடாள்பவா போற்றினேனே

மேதாவியாகி விதைத்துரைப்பவனே
மேவுங்கொடியோடுதுயரினை தீர்க்கும்

பாதக்கமலத்தைக் கொண்ட தேவா
பதம்பணிந்தேயும்மைப் போற்றினேனே

தள: வந்தனம் வந்தனம் மாமன்னா, என்னை அழைத்ததை நானறியலாமா ?

**சந்தக விருத்தம்**

வாகை: வந்தனை யோடதி விந்தையதாகவே வந்து பதம் பணியும்
மற்புய மேவிய விற்பனை சேனையில் வலிமைக் கோளாதிபனே
சிந்தனையாகவே பெண்திறை தந்திடு செம்மலாம் ரெம்மிலிடஞ்
சென்றவனைத்திறை வென்றியதாகவே சீக்கரமாய்த் தரவே
நொந்தனை செய்தவன் முந்திய ஆண்டோடு சூள்தரும் இவ்வாண்டு
தோகையர் திறையது வாகுறவே நீ துணிவுடனே கேட்டு
மந்தர தேர்தரு சுந்தரமேவிய வாகைபெறும் புயனே
வடவையெனும் பல படைகளுடன் போய் வாங்கியே வருவீரே

வாகை: தளபதியே ஸ்பானிய அரசன் ரெம்மில் முடிந்த ஆண்டுக்கான திறை அனுப்பவில்லை. ஆதலினால் முடிந்த ஆண்டுக்கான நூறு பெண்களையும், இவ்வாண்டுக்கான நூறு பெண்களை திறைகேட்டு தூது செல்வீராக.
தள: ரெம்மில் மன்னன் தர மறுத்தால்
வாகை: போர் என்று கூறும்
தள: உசாதீனம் செய்தால்
வா: உணர்வை அடக்கி திரும்பிவாரும் மதிப்போடு. மறுகணமே போர் வெடிக்கும்.

**(வீரன் வரல்)**

வீரன்: மன்னிக்கவேண்டும் மகாராசா. கோட்டை வாசலில் ஸ்பானிய நாட்டு இளவரசி திறையாக வந்திருக்கிறார்
வாகை: மன்னன் மகளே திறையாக வந்திருக்கிறாளா? வீரரே அனுப்பி வையுங்கள் உடனே.
வீரன்: உத்தரவு மகாராசா (போதல்)
வாகை: மன்னன் மகள்...... இளவரசி..... கனியை எதிர்பார்த்திருந்த எனக்கு கனிந்த பழமே கிடைத்திருக்கிறது. அமைச்சரே, தளபதியே நீங்கள் இருவரும் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் மீண்டும் அழைக்கிறேன்
இரு: உத்தரவு

**(இருவரும் போதல். இளவரசி வரல்)**
**(வாகை. கையைத் தட்டுதல். ஒருவீரன் மதுக் கிண்ணத்துடன் வரல். மதுக் கிண்ணத்தை எடுத்து குடித்தபின்)**

வாகை: வரவேண்டும் வரவேண்டும் இளவரசியாரே, தங்கச்சிலை போன்ற ஸ்பானிய நாட்டு இளவரசியின் பாதம் பட என் அரண்மனை என்ன பாக்கியம் செய்ததோ. கயல் விழி, அலைபாயும் குழல், அப்பிள் கன்னம், கொவ்வை இதழ், போதைதரும் கண்கள் பொற்சிலை உன்னைப் படைத்தவன் பெரும்

ரசிகனேதான், உடலை உற்றுப்பார்த்தால் தலையே சுற்றுகிறதே
இளா: போதும் உன் வர்ணனை
வாகை: பொற்சிலையும் பேசுமா, கோபங்கூட வருமா?

**(மதுவை மீண்டும் குடித்துவிட்டு பாத்திரத்தை வீரனிடம் கொடுத்தல்
வீரன் போதல்,
இளவரசியை உற்றுப் பார்த்துவிட்டு)**

மெட்டு : ஆகா இவள்

வாகை: மாதே நீயொரு பொற்சிலையோ – இப்புவிமீதில்
மாதே நீயொரு பொற்சிலையோ

அந்தரத்திலே உலவும் காந்தரூப ஸ்திரியோ
அந்தரற்கும் சுந்தரற்கும் வந்துகிட்டா மாணிக்கமோ
அந்திவான சூரிய அழகையொத்த மாதே
அந்தோ மாறன் அம்புபாயதே – என்னை யணைத்து
கன்னத்தி லொரு முத்தம் தாறாயோ – இவ்வேளைவந்து
அணைத்தே நின்று முத்தம் தாறாயோ

மெட்டு : வண்டிக்காரப் பயலே

இளா: போதையில் பிதற்றாதே அற்பனே – இந்தப்
பாரினில் மதி சொற்பனே
தீதென்று உணராது நிற்பதேன் – தாயை
தாரமென்றே நீயும் நினைப்பதேன்

வாகை: ஹ ஹ ஹ ஹ

வாகை: எத்தி எத்தி இங்கு முன்வரிசை காட்டி
ஏகா நிலைதனில் பின் வரிசை காட்டி
மருவி மருவிய உடையினா லுடலின்
எஞ்சிய பகுதியை எனக்கு உணர்த்த நிற்கிறாய் – நீயும்
மருவ வருவாயோ

இளா: மானத்தைக் காத்திடும் குலமடா – அதை
மாற்றானின் கையில் தருவதோ
ஈனத்தைக் கொண்டதுன் பிறப்படா – பாரில்
ஈடேறவே வழியைத் தேடடா

வாகை: ஹ ஹ ஹ ஹ

**(இளவரசியைத் தொடச்செல்கிறார்)**

இளா: தொடாதே!
வாகை: தொடாதே ஹ.. ஹ.. அரசாளும் மகாராணியல்ல என் அடிமை நீ

இள: அரக்கத்தனத்தின் அடிவருடியல்ல
வாகை: அறியாத சொல்லை புரியாது பேசுகிறாய்
இள: அதிகாரத் தொனியில் என்னை வெருட்டாதே
வாகை: என் அடிமை நீ. அனைத்துரிமையும் எனக்குத்தான்.
இள: உரிமை உன்னளவில். என்னை நெருங்க முடியாது.
வாகை: நெருங்கினால்
இள: நெருங்கிப்பார்
வாகை: ஹ ஹ ஹ

(வாகைமேரோன் நெருங்குதல்.
இளவரசி தன் மோதிரத்திலிருந்த வைரத்தைக் கடித்து விழுங்கல்.
தடுமாறி விழல். வாகைமேரோன் தொட்டுப்பார்த்துவிட்டு)

வாகை: ஓ இறந்தே விட்டாள். யாரங்கே (வீரர் வரல்) இந்தப் பிணத்தை அப்புறப் படுத்துங்கள். தளபதியை வரச் சொல்லுங்கள் (வீரர் போதல்) கைக்கெட்டியது வாயக்கெட்டவில்லை. இது ஒன்று போனாலென்ன இன்னமும் நூற்றுக் கணக்கில் வரும்தானே. அனைத்தையும் இஸ்ரம்போல் அணைப்பேன், சுவைப்பேன்.

(தளபதி, வீரர்கள் பாடையுடன் வரல்.
வீரர் பிணத்தைத் தூக்கி பாடையில் வைத்து கொண்டு செல்லுதல்)

வாகை: தளபதியாரே நினைத்ததொன்று நடந்ததொன்று. ஸ்பானிய இளவரசி, அந்தத் துரோகி தனது மோதிரத்திலிருந்த வைரத்தைக் கடித்து தற்கொலை செய்துகொண்டாள். இப்போதே பிணத்தை அனுப்பி வையுங்கள்..... தளபதி திறைகேட்டு இப்போது செல்லவேண்டாம். உடனேயே சென்று திறைகேட்டால் அசௌகரியங்களுக்கு இடமுண்டு. எனவே சில வாரம் கழித்துச் செல்லுங்கள்.
தள: உத்தரவு வேந்தே

(திரை மூடல்)



குருநகர் கலையரங்கில் 1973ம் ஆண்டு மேடையேற்றப்பட்ட "களம் தந்த களங்கம்" நாடகத்தில் டெ. அன்ரனி (சூரி), ம. யோசேப் ஆகியோர் தோன்றும் காட்சி

## காட்சி 8

**இடம் : வீதி**

**(இரு கன்னியாஸ்திரிகள் வரல்)**

**பரணி**

1ம் கன்: அருவாகி உருவாகி அதீதமாகி
ஆரணத்தின் பொருளாகி அவனியில்
குருவாகி வரும்யேசு நாதர் பாதம்
கொஞ்சமெனும் மறவாத நெஞ்சே

**தரு**

1ம் கன்: இப்போ திருமேவு துரைராசன் வாசல் செல்லவேண்டும்
என்ன செய்வோம் திறையை என்னென்று சொல்வோம்
அங்கே வரவேணும் வந்தருள் தரவேணும் இவ்வேளை
சந்தியோகே முன்னே நீர் வாரு ந்தியோகே

**பரணி**

2ம் கன்: அம்பரனை நம்புமறை அதற்கே சாட்சி
ஆகமுயிர் சோகமுற அரசன் வாளால்
இப்பார் தனில் வெட்டுவிக்க இசைந்தே நின்ற
ஏகபரன் சீடனெனும் இணையில்லானே

**தரு**

2ம் கன்: மருவாரும் குழல் மாதற்கொரு பேருமிரங்காரோ
என்னசெய்வோம் திறையை என்னென்று சொல்வோம்
இந்தத் தரை மீதிலெமக்கருள் திருப்பாதம் துணை தாராய்
சந்தியோகே முன்னே நீர் வாருந்தியோகே வந்தே உதவுந்தியோகே

**(திரை விலகல்)**

**இடம் : ரெம்மில் அரண்மனை**

**(ரெம்மில் மன்னன் நிற்றல்)**
**(கன்னியாஸ்திரியர் வரல்)**

**கவி**

1ம் கன்: நிருபருக்கரசே போற்றி நீணில புரப்பாய் போற்றி
மரபினிலுயர்ந்தாய் போற்றி மாட்சிமை மிகுந்தாய் போற்றி
விரைசெறி அலங்கள் சூடும் மேதகு செல்வா போற்றி
அரிவையர் எங்கள் கற்பை அன்புடன் காப்பாய் போற்றி

மெட்டு : வாரும் வாரும்

ரெம்: வாரும் வாரும் கன்னி மார்களே – நீரும்

வந்ததென்னவோ சொல்வீர் -- துயர்
தீருங்களெனநீர் வந்தாலும் - கன்னி
திறையாக நீரும் செல்லுவீரே

2ம் கன்: நாடாளும் வேந்தே

**இன்னிசை**

உற்றமதி மன்னவரே நீராகவிட்ட ஒப்பத்திற்கு
கற்புடைய மாந்தரெம்மை கையளித்த லென்னநீதி
தற்பரனார் தஞ்சமுண்டு தரணியில் எங்களையும்
கொற்றவடி வாளனதாற் கோறல்செய்து கொள்வீரே

ரெம்: ஏற்கனவே ஏர்முனைப்பட்ட விளைநிலம்போல் புண்ணாகிக் கிடக்கிறது எனதுள்ளம். மென்மேலும் புண்படுத்தாதீர்.

1ம் கன்: ஏனென்று அறியலாமா வேந்தே

ரெம்: என் மகள் (அழல்) என்மகளே திறையாகச் சென்றிருக்கிறாள்

2ம் கன்: நடக்கக்கூடாதது நடந்துவிட்டது உங்களால் தடுக்கமுடியவல்லையே மன்னா.

1ம் கன்: நடந்ததையிட்டு வேதனைப்படுகின்றோம்.

2ம் கன்: மன்னா ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தீர்களா? உங்கள் மகள் போலத்தானே நாட்டு மக்களும்

1ம் கன்: நீங்கள் அடைந்த வேதனைகளெல்லாம் அவர்களுக்கும் இருக்கும்தானே

ரெம்: என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்

மெட்டு : பொன்னும் நிறமும்

1ம் கன்: பெண்ணின் கற்பும் மன்னன் நீதியும்
பரிகாசம் அல்ல கவரிமான்களே
கன்னியர் கற்பைக் காத்திடும் மன்னா
காவலர் சந்தியோ காப்பார் நாட்டையே

2ம் கன்: துட்ட துருக்கியின் துள்ளல்கேட்டு
தூய செயலை செய்திடல் தகுமோ
திட்ட மெடுத்து எம்மைக் காரும்
துட்டரையழிப்பா ரெங்கள் யாகப்பர்

ரெம்: நாட்டினதும், நாட்டு மக்களினதும் நன்மை ஒன்றையே கருத்தில்கொண்டு ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டேன். இப்போ நாட்டு மக்களே கேட்டு நிற்கும்போது

**கவி**

ரெம்: மனத்துயர முற்றழுது புலம்புகின்ற
மங்கையரே யிங்கினியான் உரைக்கக் கேளீர்
அனைத்துலகு படைத்தளித்துக் காக்கும்
தேவனானவர் தன் துணையதனால் அவனிமீது
நினைத்தொரு நல்யோசனையே செய்திப்போது

நீணிலத்துமக்கு விடை நிகழ்த்துவேன் யான்
கனத்த சிலம்பணி பதத்தீரிங்கே நில்லுங்
கடுகைமிக்குள்வதில் மொழியான் கழறுவேனே.

(அமைச்சர் வரல்)

அமை: மன்னிக்கவேண்டும் மன்னா
ரெம்: ம்
அமை: மன்னா
ரெம்: என்ன?
அமை: தங்கள் மகள்..
ரெம்: என்மகளா? (ஆவலுடன்) உடனேயே அனுப்பி வையுங்கள் இங்கே, எதுவும் கூறவேண்டாம், தாமதிக்கவும் வேண்டாம் உடனேயே புறப்படுங்க

(அமைச்சர் போதல்)

ரெம்: கன்னியாஸ்திரிகளே, நீங்கள் வந்த நேரம் என் மகளும் வந்துவிட்டாள். நான் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறேன் தெரியுமா? சந்தோஷத்தைக் கொண்டாட நீங்கள் இங்கேதான் உணவருந்த வேண்டும்.

(தளபதியும், அமைச்சரும் முன்னே வர,
வீரர்கள் பிணத்தைத் தூக்கிக்கொண்டு வருகிறார்கள்)

ரெம்: தளபதி யார் பிணத்தை இங்கே கொண்டுவருகிறீர்கள்?
தள: வேந்தே அமைச்சர் தகவல் சொல்லவில்லையா?
ரெம்: அமைச்சரே என்ன?
அமை: மன்னிக்கவேண்டும் வேந்தே. தகவல்சொல்ல என்னை நீங்கள் விடவில்லை. உடனே மகளை அனுப்பிவைக்கும்படி ஆணையிட்டீர்கள் அவ்வாறே தூக்கி வந்திருக்கிறோம் இளவரசியை பிணமாக
ரெம்: மகளே.. என் மகளே.. மாற்றுக் குறையாத என் தங்கமே என்னையும், இம் மண்ணையும் விட்டே போய்விட்டாயா? அம்மா.. அம்மா.. ஏனிந்தக் கோலமம்மா? மாற்றான் கையில் சிக்கிடாதிருக்கவாம்மா? நாட்டுக்குக் காவலனான என்னால் நான்பெற்ற மகளை காக்கமுடியவில்லையேயம்மா, நாணிக் குறுகியின்று நாதியற்று நிற்கிறேனே

கொச்சகம்

ரெம்: பந்தமிகுந் தண்கலை பரப்பி என் மார்பில் தவழ்ந்தவளே
சிந்தைநிறை சுந்தரிய மகளே களம் தந்த களங்கமானாய்
தந்தைபழி யேற்றுநீயும் உந்தன் உயிர் துறந்தனையே

தரு

மெட்டு : வந்ததிந்த

வந்ததிந்ததுயர மென்நெஞ்சில் – மனமுவந்து
வரிந்துநின்று திறையாய் இப்போ யோயழிந்தாயே

என்மகளே என்செய்குவேன் இப்புவி மீதினில்
என்னால் வந்த வினையையிப்போ நான் சுமந்தேனே

சிந்தைகொதித்தெழவே என்கண்ணில் – நீர்சொரிய
சுமந்ததோழும் துடிக்கத் தடுமாறி விட்டேனே
என்மகளே எனைப் பிரிந்தாயே தப்பென்மேலே
என்றேநீ எட்டி உதைத்தாயே அம்மா

**சந்தக விருத்தம்**

குற்ற மென்றுள்ளம் சுட்டி வருந்திட நடைப்பிணமானேனே
பெற்ற மகளையே திறையாக அனுப்பிய கொடும்பாவி யானேனே
கொற்றவன் பழியை கோமகளும் ஏற்றாள் கொடிய திறையினாலே
பற்றும் அறுந்து பெற்றவளைப் பிரிந்து கொடும்பாவியு மாகினேனே

ரெம்: அமைச்சரே! என் மகள்.. என் மகள் இறக்கவில்லை. அயர்ந்து தூங்குகிறாள் அந்தபுரம் கொண்டு செல்லுங்கள் (அழல்) நான் அங்கு வருகிறேன்.

**(தளபதியும், அமைச்சரும் தொடர**
**இளவரசியின் பிணத்தை வீரர்கள் தூக்கிச் செல்கிறார்கள்)**

**(ரெம்மில் சென்று குதிரையில் இருந்து, தலையில் கையை ஊன்றிய**
**வண்ணமிருக்கிறார்)**

1ம் கன்: மன்னிக்க வேண்டும் வேந்தே! வேதனையின் விளிம்பில் நிற்கிறீர்கள். ஏனிந்த வேதனை, ஏனிந்த துயரம், எதனால் விழைந்தது இந்த சோகம் என்று ஒரு கணம், ஒரேயொரு கணம் சிந்தித்துப் பாருங்கள் மன்னா

ரெம்: என்னை அமைதியாய் இருக்கவிடுங்கள்.

2ம் கன்: உங்கள் அமைதியை நாங்கள் குழப்பவில்லை. நாங்கள் விடைபெறுகின்றோம். அதற்கு முன்னதாக ஒன்றுக்கு மட்டும் விடை தாருங்கள். அரண்மனையில் புள்ளிமானென துள்ளித் திரிந்த இளவரசி இன்று பிணமாக வருவதற்குக் காரணம் என்ன?

1ம் கன்: நீங்கள் இளவரசியைப் பிரிந்ததால் ஏற்பட்ட துயரமும், துன்பமும் பெண்ணைப் பெற்று திறையாகக் கொடுத்த ஒவ்வொருவருக்கும் இருக்கும் என்பதை ஏன் சிந்திக்க மறுக்கிறீர்கள்.

2ம் கன்: முடிந்தது முடியட்டும். மேற்கொண்டு உங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள். எதற்கும் தயங்க வேண்டாம். எமது நாட்டின் காவலர் சந்தியோகுமையோரிடம் சரணடையுங்கள் நிச்சயம் அவர் வழிகாட்டுவார். இது குருட்டு நம்பிக்கையோ, வரட்டு வேதாந்தமோ அல்ல.

1ம் கன்: மன்னா மனதை மாற்றாவிட்டால் மானம் காக்க மங்கையர் ஒவ்வொருவரும் இளவரசியின் வழியைப் பின்பற்றினால் நாட்டுக்குள் பெண்கள் நடமாட மாட்டார்கள். பிணங்கள்தான் நடமாடும்.

2ம் கன்: இப்படிப்பட்ட நாடும் ஆட்சியும் எமக்கு வேண்டாம் மன்னா. கன்னியர் நாம் எல்லோருமே மடிந்து விடுகிறோம். கறைபடிந்த வரலாற்றை சுமந்து கொள்ளுங்கள். நாங்கள் விடைபெறுகிறோம்.

ரெம்: நில்லுங்கள்........ என் கண்கள் திறந்தன.. கன்னியர் திறையின் கொடுமை புரிந்தது....... பெட்டிப்பாம்பாய் அடங்கிக் கிடந்த உணர்வுகள் உடைப்பெடுத்து விட்டது.. இல்லை.. இல்லை. இனிமேல் கன்னியர் திறையே இல்லை.

**கவி**

ரெம்: திறை யதை மறுக்கநானே திடசங் கற்பம் பூண்டேன்தானே
கறை யிலா மாதர்களே கவலை யைவிட் டேகுவீரே
நெறி முறை மாறியவென்னை நேரிடை யாகமாற்றி விட்டீர்
நம்பி நான் யாகப்பர்பாதம் சரணமென விழுந்து விட்டேன்

ரெம்: திறை மறுத்தால் வாகைமேரோன் போர்தொடுப்பான். அனைத்து மக்களும் யாகப்பரிடம் செபியுங்கள். கொடுமையை ஒழிக்க அவர்தான் துணை. நீங்கள் போய்வாருங்கள்.

**கவி**

1ம் கன் வச்சிர மகுடம் வாழ்க வயங்குநின் செங்கோல் வாழ்க
உச்சித கொலுவும் வாழ்க உயர்மதிக் குடையும் வாழ்க
நிச்சய அரசு வாழ்க நீளுமந்திர வாளும் வாழ்க
மெச்சிடும் அரசேநீரும் மென்மேலும் வாழ்க வாழ்க

**(திரை மூடல்)**

## காட்சி 9

**இடம் : வீதி**

**(இரு பெண்கள வரல்**
**சந்தோஷத்தில் கும்மாளம்)**

மெட்டு : அஞ்சு வண்ணங்கொண்ட

1ம் பெ: கன்னி திறை இல்லை என்றே
மன்ன னுரைத்து விட்டான்
எண்ணி யெண்ணி உளமெலாங்குளிர - நன்றிகூறுவீரே
பண்ணிசைத்துப் பாடுவீரே
கன்னியரெலாம் ஆடிமகிழ்ந்தே - நன்றிகூற

2ம. பெ: தங்க நகைகளைச் சூட்டுவோம் - இங்கு
பங்கமின்றி வாழ்த்துக் கூறிடுவோம்
மங்கையர் கற்பை காத்திட்ட மன்னரை - வாழ்த்திட
எங்கெங்கும் கூடுவோமே
செங்கோல் நிலைத்திட வேண்டியே - பாடிடுவோமே

**(பெண்கள் போதல்)**

**(வீரர்கள் வரல்**
**பயிற்சியில் ஈடுபடுதல்)**

மெட்டு : துணிவோடே வருமடை

1ம் வீர: வாளோடே வரும் பகைவர்தலை
வீழ்த்தியே நாட்டைக் காத்திடுவேன்
வில்லோடு வந்தெதிர்த்தாலும்
வீணர் எவரையும் தப்பிடவிடேன்
கல்லுமுள்ளிலும் கடும்பயிற்சிசெய்து
மல்லரெல்லோரையும் மண்டியிடச் செய்வேன்

2ம் வீர :அணியணியாய் பகைவர் வந்தாலும்
அடிபணியாது களம் புகுவேனே
பணியாது இருந்திடும்வீரரை
பாய்ந்தே உயிர் எடுத்திடுவேனே
நீரிலும் நெருப்பிலும் மூழ்கி எழுந்துமே
போரிடப் பயிற்சிகள் நானும் செய்வேனே

**(திரை விலகல்)**

## காட்சி 10

**இடம் : அரண்மனை**

**(ரெம்மில் மன்னன் நிற்றல்)**

**கவி**

ரெம்: தற்பாரானந்தா போற்றி சருவதயாபரனே போற்றி
அற்புதம் நிறைந்தாய் போற்றி அருள்மொழி ஒளியே போற்றி
கற்புத்திரை குன்றாத கன்னிமாமரியே போற்றி
தற்பரன் சீடனான புனிதர் யாகப்பரே போற்றி போற்றி

**(அமைச்சர் வரல்)**

**கவி**

அமை: தங்குமா மகுடஞ் சூடி தரணியைப் புரக்கும் கோவே
இங்கிப்போ மக்களெலாம் ஆர்ப்பரித் தானந்தமாயுள்ளர்
மங்கையர் திறைமறுத்ததால் ஆலையங்களில் வழிபாடும்
ஆங்காங்கே போர்ப்பயிற்சியும் அரங்கேறுகிறது வேந்தே

ரெம் மக்கள் சந்தோஷமே மன்னவன் சந்தோஷம்

**(தளபதி வரல்)**

தள: மன்னிக்கவேண்டும். வேந்தே. துருக்கிய நாட்டுத் தளபதி தங்களிடம் தூதுவனாக வந்துள்ளார்.

ரெம்: ம். **(அழைத்து வரும்படி சைகை செய்தல்)**

தள: உத்தரவு **(சைகையால் கூப்பிடல்)**

**(வாகை தளபதி வரல்)**

**களிநெடில் ஆசிரியம்**

வா. தள: மதுமலரின் மதுவண்டு பாட மயிலாட வானரமும் மாட
வளர்சோலை வளைகின்ற ஸ்பானியா நாடாளும்
மன்னவனே ரெம்மில் கேளாய்.
தருவானுமலையாலு மதிலாலு முயர்கின்ற தாள்விலா எதியோப்பியை
தானாளுகின்றவன் வாகைமேரோன் மன்னன் என்னையே உம்மிடத்தில்
துரிதாகவேயேகி முன்னின்று பெண்திறை கருதாய் அனுப்பாதலால்
சொல்லரிய இருநூறு பெண்கள் தன்னையே சுறுக்காக வாங்கியிங்கு
தரியாமல் வாவென்று எங்களை அனுப்பினார் தடம்புயத் தழகத்தன்யான்
தப்பாது இருநூறு குலமாதர் தம்மையே சடுதியிந் தருகுவாயே

வா தள: வேந்தே தாங்கள் பெண்திறை அனுப்பவேண்டிய காலம் கடந்துவிட்டதால்

புதிய ஆண்டுக்கான திறையுடன் இருநூறு கன்னிப்பெண்களை அனுப்பிவைக்கும்படி என்னை தூதனாக அனுப்பினார்.

## சந்தக விருத்தம்

ரெம்: சிந்தனையோடதி விந்தியதாகவே சேனைகள் சூழ்தரவே
செந்தொடை சூடியே முந்தியே வந்திடு சேனையினாதிபனே
சந்திர சூரியந்தரவானவர் தானெதிரே வரினும்
சத்த சமுத்திர மெத்து முழக் கொடுதத்தி எழுந்திடினும்
வெந்திறலுற்றிடும் மந்தர நேர்புய வேந்தனாம் வாகைமேரோன்
வெஞ்சமர் செய்திட மிஞ்சுதளத் தொடுவிரைவோடு வந்திடுகில்
பந்தெனவே தலைசிந்திடவே இகல்பண்ணியே வென்றிடுவேன்
பங்கமிருத்திடு மங்கையர் திறையிப்படி மிகை தரேனே

வா தள: ஹஹஹஹ சிரிப்பாயிருக்கிறதே
ரெம்: வியப்பாயில்லை
வா தள: கையெழுத்திட்டது தாங்கள்
ரெம்: இல்லையென்றால்
வா தள: இடியோசை கேட்கும்
ரெம்: தர மறுத்தால்
வா தள: தரணியே அதிரும்
ரெம்: வெகுண்டெழுந்தால்
வா தள: வெற்றுக் கடல்தான் எஞ்சும்
ரெம்: கையேந்துவேன் என்ற எண்ணமா?
வா தள: கன்னியர் திறை வரும் என்ற எண்ணம்
ரெம்: காண்பது கனவு
வா தள: கடைசியாக உமது முடிவு

## கல்வெட்டு

ரெம்: படபட என வடமேடு திடுதிடுஎன இடியினும்
படியின் வான்கூட மிடினும்
பகலவன் நிலைமாறி மேற்கிலே உதித்திடினும்
பண்டுநாள் இன்று வரினும்
விடுவிடு என வானோர்கள் தோன்றிடினும்
கோணப் பிரசண்டமே கண்டை மாறிவிடினும்
கூற்றுவர் போர்க்கென நாற்றிசை விரிந்திடினும்
கோணாது எந்தன் உள்ளம்
உடனடியாகவே ஓடியே உத்தரவு ஓதுவாய் ஒளியாமல்
உறுதியாய் உற்றநற் தூதுவனே

## சிந்து

பல்லவி

ரெம்: தாறதில்லை என்று சொல்லடா – பெண்திறையினி
தாறதில்லை என்று சொல்லடா

அநுபல்லவி

தாறதில்லை என்றுசொல்லு வீறுகொண்ட ரெம்மில் வில்லாற்
கூறுபோட்டவனைக் கொல்ல வாறேனென்றிக் கணஞ் சொல்லு

தாறதில்லை

சரணம்

புல்லனென்றெனை நினைத்தானோ அல்லாமலு மெந்தன்
மல்லுயுத்தத்தை பழித்தானோ என்னருங்கோண
எல்லையான் திக்கினை நாடிச் சொல்லிலு மவனைத்தேடி
வல்லியமெனவே யோடிக் கொல்லுவே னென்னடாபேடி

தாறதில்லை

தங்கமென்றால் வேண்டியோ கொண்டு வாகைமேரோன்
இங்கிதமாய் வாங்கியே கொண்டு போகச் சொல்லடா
அங்கவனது மறுத்து இங்கெனையுமே வெறுத்து
பொங்குகள மீதெதிர்த்துப் பங்கமுறுவான் சிறுத்து

தாறதில்லை

வாளெடுத்த வீரனல்லவோ பிழைக்கவேண்டிற்
தாள்வோடு படியச் சொல்லடா மிருகசிங்க
சோனரியுமே நடுங்க ஆழிசூழ் புவியொடுங்க
நாளையத் தினமுங் கோனைக் கூழி கட்டிடுவேன் நாளை

தாறதில்லை

துதுவனென்றுன்னை மதித்தேன் அல்லாது போனால்
வீதுகுடல் பீறமிதிப்பேன் இனிப் பெண்திறை
ஓதவே வந்திடுபேரைச் சூதுசெய் சோனக பேரைக்
கோதியே யிடுங்கிக் கட்டி மோதுவே னென்னடாமாட்டி

ரெம்: தூதுவனே இந்நாள்வரை பெண்திறை தந்தேன் என் நாட்டின் நலனைக் கருத்தில்கொண்டு. இப்போ நாட்டு மக்களே கொடுந்திறை என மறுக்கிறார்கள். மன்னன் நான் மக்களின் கருத்தை ஏற்றுள்ளேன். இனிமேல் பெண்திறை தர முடியாது என்று சொல்லு உன் மன்னனுக்கு.

வா.தள : இதைக் கேட்ட மன்னனின் படையெடுப்பை உங்களால் தடுக்க முடியுமா ?

ரெம்: முடியாமல் முடிவெடுப்பதற்கு முட்டாள்களல்ல நாங்கள்.. முடிவாக இதைச் சொல்லிவிடு. இடுக்கு கேள்வி கேட்பதற்கு நீ யாரெமக்கு. தூதுவன் நீ தூதுடன் நிறுத்திக்கொள் உன் மேதாவித் தனத்தை.

வா தள: மன்னிக்க வேண்டும். யார் முட்டாள்கள் என்பதை போர் சொல்லும். நான் விடைபெறுகிறேன்.

ரெம்: ம்.

**(தளபதி போதல்)**

**(திரை மூடல்)**

## காட்சி 11

**இடம் : வீதி**

**(வாகை தளபதியும் வீரரும் பாடிக்கொண்டுவரல்)**

மெட்டு : பண்டி நிலத்தை கிண்டி

தள: குங்குமத் தொடை தங்குமார்பகன்
கூறும் வாசகம் மாறில்லாமலே
துங்கன் றம்மிலை மங்கையர்திறை
சுறுக்கித்தா வென்றோம் - அவன்மீசை முறுக்கித் தாவென்றோம்.

வீர: இங்கிதர்த்துடன் எங்கள் மன்னவன்
இயம்பு கட்டளைக் கமைந்திடாமலே
சிங்கத்தொனி கொண்டங்கு றெம்மிலும்
சினந்து கூறினான் - மனதில் நினைத்தச் சீறினான்

தள: எந்தராசரும் வந்துபணியும்
ஏந்தல் தன்னிடம் சேர்ந்துநாமிப்போ
அந்த றெம்மிலைச் சிந்தவேசமர்
அடுக்கச் செய்குவோம் - அவன் மதம் கெடுக்கச் செய்குவோம்

வீர : முந்தவேதிறை தந்து வந்திடும்
மூடனாம் மதி கேடனாமவன்
இந்தப் போதினிற் பைந்தொடிதிறை
இல்லையென்றானோ - இனித் தரவில்லை யென்றானோ

**(திரை விலகல்)**

**இடம் : வாகைமேரோன் அரண்மனை**

**(வாகைமேரோன் நிற்றல்)**
**(தளபதி வரல்)**

**கவி**

தள: பொன்னாடும் மகுடஞ்சூடும் புகள்பெறும் வாகைமேரோய்
என்நாவில் எடுத்து என்ன இயப்புவேன் சொல்லக்கேளீர்
வின்னாருந்திறையோ வென்றான் வெகசினங் கொண்டானின்னம்
தான்நாளிற் திறையோர்போதும் தரேனென்றான் அறிகுவீரே

தள: வேந்தே உங்கள் ஆணைப்படி தூதுவனாகச் சென்றேன் திறைகேட்டு. ரெம்மிலோ கோபத்துடன் கப்பம் தாறதில்லை யென்றுவிட்டான். மேற்கொண்டு பெண்களைக் கப்பமாகக் கேட்டால் நாடு நகரெல்லாம் சுட்டெரித்துப் போடுவேனென எச்சரிக்கை விடுத்தான்

## கல்வெட்டு

வாகை: வங்கத் தெலிங்கக் கலிங்கங் குலிங்க மோடுவடுக
சிங்கள சீனமும் மருவுகொங்கணிய மோடு
கன்னடஞ் சீயம் மலாக்கா செவிட்டாகுமோ எங்கும்
தனித்தனி யிருந்து அரசாளுகின்ற எழுவானில்
மன்னரிந்த எவிரோப்பா அமெரிக்கா ஆபிரிக்கா எனுமூரிலிருந்தபல
மன்னரெல்லாம் தங்கடன் பலமிழந்தே ஏவல்செய்ய
இத்தரியவன் தொம்ரெம்மில் தார்குழல் பெண்கள்திறை தரேனெனச்
சினந்தவன் மூர்க்கங்கொண்டு அவனுரைத்திட்டதால்
அவனை இக்காசினியோர் நடுநடுங்க அங்கங் கழுகுகோடு
நாய்நரி பரந்துண்ண உடல்துண்டு காட்டுவேன் - காட்டுவேனே

### சிந்து

பல்லவி

வாகை: கப்பமில்லை என்றானோ - அத்தேரிமாக்கா
கப்பமில்லை என்றானோ

அநுபல்லவி

கப்பமில்லை என்றானோ தப்பிடவும் நின்றானோ
எப்பவும் போர் வென்றானோ தப்பிதமாய் நின்றானோ

கட்டளைதனை மறுத்த துட்டனின் சிரமறுத்துப்
பட்டணமறியக் குழி கட்டிடுவேன் திட்டமிது

கப்பமில்லை

சித்திரக் கிரணமணி வைத்திளைத்தொளிர் குலவு
நித்திலப் பிரபைதங்கு உத்தமகீரிடமதைச் - சிரமதிலே சூடி
வருகின்ற அரசர்கள் ஒருகோடி - வந்தென்பதம்
தேடியே தினம் புகழ்ந்து நாடியே மனம்கிழந்து
கூடியே திறையளித்திங் கோடியே என்முன் விழுந்து
தொண்டனிட்டும் பணியானோ - என்னையவன்
கண்டிற் கெணியானோ

பார் பார் இந்தத் தேசமெங்குமே மதிக்க வாசமுள்ள
போர் துதிக்க நீசரெம்மிலைச் சதிக்க யோசனை செய்வேன் கதிக்க

கப்பமில்லை

மந்திரப் புயத்தனான சுந்தரத் தளபதியை நிந்தையாய் உரைத்தனுப்பும்
விந்தையை நினைக்கும்போது மனதினிலதிவேகம்
உண்டாகுது தித்தினமதி லதிவேகம் - பதைத்திட
மண்டெமர்தனி வெதிர்த்துக் கொண்டல்களென அதிர்த்துக்
குண்டுகள்மிக விடுத்துச் சண்டைகள்தனை தொடுத்து
வருந்திடப் புரியேனோ - அவனுடலை
பருந்தினுக் கெறியேனோ நாய் நரிகள்

வெளவி அதிர்த்தே குரைக்க கௌவி எடுத்தே இரைக்க
பௌவமெனவே சுரக்கும் வெச்விரத்தமே பரக்கக்

கப்பமில்லை

கவி

வாகை: பொருத்தமுறை எனக்கனுப்புந் திறை மறுத்துப்
பூதலத்தின் நீதமுடன் புண்மைபேசி
வருத்தமுறத் தளபதியை அனுப்பும் பொல்லா
வஞ்சனெனும் ரெம்மிலும் வாடவேதான்
உருத்தெழுந்து சமர்பொருது வெல்லவல்ல உபாயமதை
உன்மனதிலலு ணர்ந்திப்போது
திருத்தமுடன் வாசலுறை மதிவல்லோனே
சீக்கிரத்திலெனக்குமுன் செப்புவாயே

வாகை: அமைச்சரே! ஸ்பானிய தேசத்தவனான ரெம்மில் ராசன் வருடந்தோறும் எனக்கனுப்பவேண்டிய நூற்று பெண்கள திறைக்காக தன் மகளைத் தனியே அனுப்பினான். அவளும் தன்னை மாய்த்து என்னை அவமானப்படுத்தினாள். இப்போ பெண் திறையையே மறுத்து எமது தளபதியையும், என்னையும் அவமானப்படுத்தி அனுப்பியுள்ளான். எனவே அவனது அகங்காரத்தை அடக்கி அவன் நாட்டைப் பிடிக்கக்கூடிய உபாயத்தைச் சொல்லுவீராக

**கவி**

அமை: வாட்டிறலதனாலிந்த வையக முழுதுங் காத்து
பூட்டலரவங்கல் சூடும் பொருனர் காவலனே கேளீர்
நீட்டமொன்றில்லாதந்த நேரவன் நகரைச் சூழ்ந்து
வீட்டுவெஞ்சமருடற்றி வெற்றி நாம் பெருகுவோமே

அமை: வேந்தே, முதலில் தன் மகளை அனுப்பி அவளைத் தற்கொலை செய்வித்தான். இப்போ திறையை மறுத்திக்கிறான். இவ்வளவு துணிவு வந்ததென்றால் இதில் ஏதோ சூழ்ச்சி புதைந்து கிடக்கிறது. நாம் மிகவும் நிதானமாக அடியெடுத்து வைக்கவேண்டும். வேற்று நாடுகளிலிருந்து ஏதேனும் படை உதவி கிடைக்கலாம். எனவே நமது அனைத்து படைகளுடனும் சென்று ஸ்பானிய நாட்டை முற்றுகையிடவேண்டும். அப்போது பிற உதவிகள் தடைப்படும். எவரும் தப்பிக்கவும் முடியாது.

வாகை: அற்புதமான யோசனை அமைச்சரே அற்புதமான யோசனை.

**கவி**

வாகை: திரைபொரு கடலைந்தானே சேர்ந்தணிவகுத்துக் கொண்டு
கருதுமே ஸ்பாஞ்ஞா நாட்டில் கடுஞ்சமர் புரியவேதான்
விரைவினிற் செல்வேனிந்த வீரவாளிதனைத் தரித்தே
அரசதைக் காப்பாய்யெந்தன் அமைச்சனே அன்பாயத்தானே

வாகை: தங்கள் ஆலோசனைப்படியே பெரும்போருக்கான ஆயத்தங்களுடன் செல்லுகின்றேன். நான் வரும்வரை இடையூறின்றி நாட்டை கவனித்துக்

கொள்ளுங்கள். மதிவல்லவனே போரிலே வெற்றிபெற உங்கள் ஆசீர் வேண்டும்.

**கவி**

அமை: மருவலரை வெற்றிபெற ஆசீர் கேட்ட மன்னவனே
இந்நிலத்தில் மகிழ்வதாக
துரகதங்கள் கரிநிரைகள் காலாள் சேர்த்து துங்க
முடனங் கவரைச் சூழ்ந்து நீரும்
பெருகுசமர் செய்திடு வீரல்லா உங்கள் பேரில்
வெகு தயவு செய்வார் பிரியமாகத்
தரியவரைத் தோற்கடித்து வாகைசூடி
சமர்த்துடனே வந்திடுவீர் தரையாள் கோவே

வாகை: மனம் மகிழ்ந்தேன் மந்திரியாரே. தளபதி

**கவி**

வாகை: படியிலுறு முடியரசரெ வரும் போற்ற பாராசு புரியுமெனப் படிலு பேசுங்
கடிய மனமுடைய தொம் ரெம்மிலென்னும் காவலன்
தன் நகரிலுள்ளோர் கலங்கவே தான்
வெடியதிரப்படை பொருது வெல்லவல்ல வீரர்களை
அணியணியாய் விரைந்திப்போது
நடவுரத முடனிவுளி மருங்கிற் சூடி நாடரிய தளபதியே நடப்போம் நாமே

வாகை: பல்தேசத்து முடியரசரும் வணங்கும் என்னை இந்த அற்ப அரசன் ரெம்மில் அவமானப்படுத்தவதா? கூடவே கூடாது. தளபதியே நமது நால்வகைச் சேனைகளையும் அழைத்து போருக்குப் புறப்படுவீரே. ஸ்பானிய சேனையைக் கூண்டோடு அழித்து, நாட்டைச் சூறையாடிக் குவிக்கவேண்டும்.

**(திரை மூடல்)**

## காட்சி 12

**இடம் : வீதி**

**(ரெம்மில் தளபதியும் வீரரும் வரல்)**

மெட்டு : உண்மைக் கொளிமதி

தள: எங்கள் மகராசன் தங்கு நகர்ப்புறத்தில்
ஏற்றமுடன் வாகைமேரோன் சீற்றமௌவந்தே

வீரர்: பொங்கு கடல்போலவே இங்கு சேனையுடனே
போர் புரிய வந்தேனென்றான் வீரமுட னேதான்

தள: நீசமறவே தான் மாதர் திறை கேட்ட
நீசன் வாகை மேரோனெங்கள் தேசமதிலேதானே

வீரர்: வாதினுடனே தான் மோதியமர் செய்ய
வந்தவனை இந்த நேரம் நொந்திடச் செய்வோமே

தள: பொன்னின் முடிசூடும் மன்னனிடஞ் சென்று
புல்லரெனுஞ் சோனகரைக் கொல்லச் செய்குவோம்.

வீரர்: உன்னிதமாக இந்நிலத்தில் வந்த
ஒன்னலரை வாட்டுவிப்போம் திண்ணமுடனேதான்

**(ரெம்மில் தளபதியும், வீரரும் ஒரு புறத்தால் போதல்)**
**(வாகைமேரோனும், தளபதியும, வீரரும் புறத்தால் வரல்)**

மெட்டு : தார்தலத்தோர் போற்றும்

வாகை: சீறிவிட்டான் ரெம்மில் – சூரரை
சீண்டியும் விட்டுவிட்டான்
கூறிட்டே நாட்டையிப்போ – கிளறி
காலனுக்கு உணவளிப்பேன்

தள: போரிலெமை வெல்வோர் – மண்ணில்
பிறந்திருக்கவே மாட்டார்
பார்த்தவிழி மூடுதற்குள் – பகைவர்
பந்தென விழுந்திடுவர்

**கவி**

வாகை: கொய்யுளை வயமா வீரர் கொடுஞ்சியந் தேர்பதாதி
எய்திடத்திரட்டி வந்த எளில் கொளாதிபனே கேளீர்

பொய்மிகு ரெம்மில் கோட்டை புடையினின் எதிரதாக
துய்ய கூடாரமொன்றை சுறுக்கினிலமைத்திடனே

வாகை: தளபதி நாம் நிற்குமிடம்தான் ஸ்பானிய நாட்டு எல்லை. அந்தப் பாதை நேராகவே ரெம்மிலின் கோட்டைவரை செல்கின்றது. இங்கே எமது பெரிய கூடாரத்தை அமையுங்கள். இதேபோன்று நாட்டின் நாற்புறமும் பெரும் கூடாரங்களை அமைத்து ஆங்காங்கே சிறு கூடாரங்களை அமையுங்கள். அப்போதுதான் நாட்டை முற்றுகையிட முடியும். எமது உளவுப்படையின் தகவல் வரும்வரை எவரும் எல்லை கடக்க வேண்டாம்.

தள: உத்தரவு வேந்தே

**(இருவரும் போதல்)**

**(திரை விலகல்)**

## இடம் : அரண்மனை

**(ரெம்மில், அமைச்சர் நிற்றல்
தளபதி வரல்)**

**கவி**

தள: தஞ்ச மென்றடைந்தோர் தம்மைத் தயவுடனினிது காக்கும்
நெஞ்சமேயுடைய கோவே நிகழ்த்திடும் வார்த்தை கேளீர்
வஞ்சியர் திறைமறுத்த வகையினால் வாகைமேரோன்
அஞ்சிடச் சேனையோடி ங்கடைந்தனன் அறிகுவீரே

தள: வேந்தே, வாகைமேரோன் பெரும் படையுடன் எமது நாட்டை முற்றுகையிடும் தன்மையில் பெரியதும், சிறியதுமான பல கூடாரங்களை அமைத்திருக்கிறான்.

**கவி**

ரெம்: தருமநெறி முறைமைதனைச் சற்றுந் தேராச்
சமரில் வெகு கொடியனெனத் தனையே மெச்சிப்
பரியிரத கெசமுடனே பதாதி கூட்டிப்
படையெடுத்து வந்திருக்கும் பகைஞன்றன்னை
விரைவிலர் பொருதவனைத் தோற்கடித்து
வெற்றிபெற இச்சணத்தில் விரைந்து நீயும்
கருதரிய சேனைகளைத் திரட்டி யொன்றாய்
கடிதிலர் செய்திடவே கடுகுவாயே

ரெம்: நாம் போரிடத் துணிந்தது வாகைமேரோனுக்கு அதிர்ச்சியைத் தந்திருக்கும். அதனால் அவன் தனது வளங்கள் அனைத்தையும் பயன்படுத்தி பெரும் படைகளுடனேயே வந்திருப்பான். எமது படையோ அவன் படையிலும்

சரிபாதி.

தள: உண்மைதான் எமது படை வீரர்கள் ஒவ்வொருவரிடமும் நாட்டு உணர்வு இருக்கிறது. தாய்நாட்டுப் பற்று இருக்கிறது. மண்ணைக் காக்கவேண்டுமென்ற வைராக்கியம் இருக்கிறது. இவைகள் கூலிக்கமர்த்தப் பட்ட துருக்கிய படைகளிடம் இருக்க முடியாது.

ரெம்: எமது வீரர்களை நான் குறைத்து மதிப்பிடவில்லை. முன்னர் ஒருதடவை ஏற்பட்ட பின்னடைவு மீண்டுமொருமுறை ஏற்பட அனுமதிக்க முடியாது. அவ்வாறு அனுமதித்தால் நமது நாடு வெற்றுக் காடாகத்தான் காட்சிதரும்.

தள: அப்படியானால் நாம்

ரெம: போராடத்தான் வேண்டும். எம்மையும் மீறிய ஒரு சக்தி இருக்கிறது அதுதான் தெய்வ சக்தி தளபதியாரே தெய்வசக்தி. எமது திறமையை விட மக்கள் வைத்திருக்கும் தெய்வ பக்திதான் எம்மை வழி நடத்தும். தளபதியே நமது சேனைகளை எல்லைவரை பகுதி பகுதியாக நகர்த்துங்கள்.

அமைச்சரே, பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பாதுகாப்பான இடங்களைத் தேர்வுசெய்து அங்கே அமர்த்துங்கள். மருத்துவச் சேவைப் பிரிவினைப் பெரிதாக்கிட சுயமாக முன்வருவோரைச் சேர்த்துக் கொள்ளுங்கள். உணவுக் களஞ்சியங்களிலிருந்து கிரமமாக மக்களுக்கும், போர்வீரர்களுக்கும் உணவுகள் செல்லட்டும். நான் எங்கள் காவலர் யாகப்பரை தரிசித்து வருகிறேன்.

**(திரை மூடல்)**



## காட்சி 13

**இடம் : வீதி**

**(ரெம்மில் தளபதியும், வீரர்களும் வரல்)**

மெட்டு : வாரும் வாரும் நீலாம்பிள்ளை

தள: வீரப் புலிகளே செல்லுவோம் – ரெம்மில்
வேந்தன் புயபலத்தைச் சொல்லுவோம்.
வாரிச் சோனகர் தளத்தைக் கொல்லுவோம்
மின்று மட்டில்லா ஆனந்தம் புல்குவோம்

வீரா: சண்ட மாருதந் தன்னிலேறுவோம் – மடை
சற்பமுங் கொடி மண்டைச் சீறுவோம்
வண்டா சோனகர் பேரைக் கீறுவோம் – இங்கு
மணிக்குடல் பிடுங்கியபின் தேறுவோம்

தள: பீரங்கி வாய்க்குள்ளே யோடுறோம் – மலையைப்
பேர்த்துச் சோனர் களத்தை சாடுவோம்
காரானைப் பந்தாடுவொம் எங்கள்
கடவுளைத் துதிசொல்லிப் பாடுவோம்

வீர: மேரோன் கோட்டையிதோ பிடிக்கிறோம்– அவன்
விழிபிதுங்க ஓங்கியிடிக்கிறோம்
சூரிய சந்திரரை ஓடிக்கனிறோம் – அந்தத்
துருக்கர் குலத்தையெல்லா மடிக்கின்றோம்

**(திரை விலகல்)**

**இடம் : கோவில்**

**இன்னிசை**

ரெம்: வந்த துருக்கர் படை வரும் நூறோர் ஆயிரமாய்
வெந்தழலும் கொண்டு எம்மை வீழ்த்துதற்கோ சூழ்ச்சி செய்தார்
இந்தநிலை மாறுதற்கு என்னசெய்வேன் இவ்வேளை
சந்த சந்தியோகுவெனும் நற்குருவே காராயோ

மெட்டு : ஆதி அந்தம் சோதி

ரெம்: கருணை அருள் பொழியும் இறைவா – எமை
காத்துநிற்கும் காவல் தலைவா

துருக்கன் என் நாட்டை அழிக்கவே
துடிப்புடன் நிற்கிறான் எம்மைச் சூழவே

1ம் கன்: எந்தை சந்தியோகு இறைவா - எங்கள்
இருளகற்றி காரும் சுடரே
சிந்தை நொந்து நாம் தொழுகின்றோம்
சிதைவுறாமல் நாட்டைக் காரும் தேவா

2ம் கன்: வாழுநாளெலாம் உமையேதான் தொழுதோம் - வாழ
வழிதேடும் எங்ளைப் பாராயோ அப்பா
சூழ்ச்சியாய் பெண்திறை பெறத் துடிப்பவனை
சிரசைக் கொய்து எமைக்காரும் சந்தியோகே

ரெம்: கொடியோர் படையால் நாமும் அழிவதா - எம்மைக்
காக்கும் தெய்வமே கேழா திருப்பதா
அடிமை விலங்கொடிய அருள்தாராய்
அபலையர் வாழ்வில் ஒளியாய் வாராய்

(இடி, மின்னல் மங்கிய ஒளியில் வெண் குதிரையில் யாகப்பர் காணப்படல்)

அசரீதி: *ரெம்மில்.. ரெம்மில்.. உங்கள் வேண்டுதலை ஏற்றுள்ளேன். கலங்க வேண்டாம். அகந்தைப்பட்டவர்கள் அழிக்கப்படுவார்கள். அச்சத்தைத் தவிர்த்து போரினைத்தொடு.*

(யாகப்பர் மறைதல் இடி, மின்னல் முடிவுற்றது)

## கொச்சகம்

ரெம்: கண்டுகொண்டேன் புவிகாணா கண்கொள்ளாக் காட்சியது
திண்டோர் தினவெடுத்த தீராதி தீரனை நான்
வெண்டோர் புவிதனில் வீராதி வீரமுடன்
கொண்டோர் துருக்கர் படை சென்றழிப்பேன் என்றுரைத்தார்.

மெட்டு : கண்டுகொண்டேன் உன்

ரெம்: என்ன விந்தை என்ன விந்தை ஏது சொல்வேன் நானும் - எந்தன்
ஏக்கமழிந்தொரு ஊக்கமடைந்தேன் எழுவீர் படையோடே - நீர்
வருவீர் படை கூட

2ம் கன்: தந்தை சந்தியோகு எந்தை தாழில் பணிந்தோமே - அவர்
சாற்று மொழியினில் ஏற்றமடைந்தோம் மாற்றார் படைவீழ - நாமும்
ஏற்றமுடன் வாழ

ரெம்: வெண் புரவிமீது வந்தோர் வீரனொரு வீரன் – இந்த
விண்ணுமதிர்ந்திட மண்ணுமதிர அண்ணலென வந்தார் – எமக்கு
அஞ்சேல் உரை தந்தார்

1ம் கன்: வாளின் படை வேலின் படை சூளும் பெரும்சேனை – அந்த
வல்ல துருக்கரை வெல்ல அழிப்பார் வல்ல சந்தியோகு – எங்கள்
அல்லலெல்லாம் தீரும்



ஸ்பெயின் நாட்டின் ஆலயங்களிலுள்ள
வெள்ளைக் குதிரையில் போர் புரியும்
புனித யாகப்பரின்
உருவச் சிலை இதுவாகும்.

அட்டைப் படத்திலும் காணலாம்.

## காட்சி 14

**இடம் : போர்க்களம்**

**(தளபதியும், வீரர்களும் போர் புரிவதைப்போல் இருபுறமும் ஓடிக் கொண்டிருத்தல். திரைப்பாடல் ஒலித்தல்)**

**திரைப்பாடல்**

சந்தக விருத்தம்

ஆனை படையொடு சேனை படையொடு ஆறு பரித் தேரும் - பெரு
வான முழங்கிடு வீர முழக்கொடு வந்த துருக்கர் படை
ஈனமழித்திடு வாளை மடக்கிட எதிரிடு ஸ்பானியர் - இவர்
சோனர் படைகளை ஊனமழித்திட தோன்று பொரு களமே
போரிடு களமதில் வேரோடு அழியவே பொருதிடு சோனர்படை - அவர்
வீரிடு புரவிகள் தேரொடு மடியவே வீழுந் துலுக்கர் படை
காரிடு முழக்கென போரிடு களமதில் கண்ணிமைப் பொழுதினில் - ஒரு
ஊரிடு வாளொடு கொடு படை மிதிபட குருசிடு கொடியுடனே

**(யாகப்பர் குதிரையில் வந்து போவதுபோல் காட்சி. வீரர்கள் கண்டு ஓடுகிறார்கள்)**

வந்தது வந்தது வால் பரி மீதொரு வாளொடு போர்த் தலைவன்
பந்தென உருளுது சிந்திச் சொரியுது பாவி துருக்கர் தலை
விந்தையொடு வரு வெண் குதிரை தனில் வீசிடு வாழுடனே
வந்தவர் வந்தவர் சந்தியோகோ வெனும் மா காவலனனே

வா. 1வீர: என்ன அதிசயம் வெண்குதிரையில் அந்தரத்தில் வந்த ஒருவரின் வாள் வீச்சுக்கு முன்னால் எவருமே நிற்க முடியவில்லை.

வா 2வீர: பெரும் அற்புதம் நிகழ்ந்ததுபோல் இருக்கின்றது. பெருந்தொகையான வீரர்கள் மடிந்துவிட்டார்கள். தளபதியம் கொல்லப்பட்டுவிட்டார்.

வா 1வீர: மன்னர் என்ன ஆனாரோ தெரியவில்லை. நான் ஏன் இங்கு நிற்க வேண்டும்

வா 2வீர: வா ஓடிடுவோம் (இருவரும் ஒருபும் ஓடல்)

**(மறுபுறத்தால் வாகைமேரோன் கைகள் கட்டப்பட்ட வண்ணம் வரல் பின்னால் ரெம்மில், தளபதி, வீரர் வரல்)**

மெட்டு : ஆழிப்பா ராச

ரெம் பாரினில் துருக்கியனக்கிணை
போரிலே வெல்வதற்கெவருமில்லை
கூறியே நின்றவாகைமேரோன்
கொட்டத்தை அடக்கி விட்டோம்

ஆதரவு இல்லையெமக்கென்றே

ஆர்ப்பரித் தெழுந்துநின்றாயே
உதவிட யாகப்பர் எமக்குண்டு
உணர்தாயோ உன்மத்தனே

ரெம்: தளபதி இந்தக் கொடியவனைக் கப்பலேற்றி நாடுகடத்தி விடுங்கள். களம் தந்த களங்கம் இவன் அழிவுடன் முடியட்டும். நீர் அமைதிப் படையுடன் எதியோப்பியா சென்று அங்குள்ள பெரியோர்களைக் கூட்டி நல்லதொரு அரசை நிறுவிகொள்ளுங்கள். அடிமையாய் உள்ள முடிமன்னர்களை விடுவித்து அவரவர் தத்தமது நாட்டை ஆழும் சுதந்திரத்தை பிரகடனப் படுத்திவிடுங்கள். நான் யாகப்பரை தரிசித்து வருகிறேன். (போதல்)

தள: உத்தரவு வேந்தே

(ரெம்மில் போதல்)

**தேவாரம்**

வாகை: முத்து வெண்குடை நிழலற்ற முடிமன்னர் சரண் வந்தேற்ற
சித்திரமின் மணிக் கோலேந்தித் திறலுடன் ஆண்டிருந்தேன்
சத்துரு ரெம்மில் சேனை தளமென்னஞ் சூழவாச்சே
இத்தின மெனக்குவந்த இன்னல் தீர் எமதல்லாவே

இராகம் : ஆதியதை மேவை

வாகை: முத்துநவ ரெத்தின மணி முடிபுனைந்திப்படி புரக்கும்
மூர்க்கமெல்லாந் தோர்க் கவாச்சுதே அல்லாவே

தத்துவெள்ளச் சேனை சூழச் சாமரைக் கன்னியர் வீசந்
தங்கச்சிங்காசன மிழந்தேனோ என்னல்லாவே

செப்பு மேவிரோப்பு வென்னுந்தேச மகராசனெனக்
செகதலத்தை ஆண்டிருந்தேனோ அல்லாவே

**(பாதி பக்கத்தால் கோவில் தெரிகிறது.**
**அங்கே கன்னியாஸ்திரிகள், ரெம்மில் நிற்கிறார்கள்)**

மெட்டு : ஆகாது ஆகாதையா

1ம் கன்: கன்னியர் திறை அழித்து
களங்கத்தை ஒழித்தவரே
புண்ணியம் செய்தோமே நாமே – காக்க
பரிதனில் வந்தாயே போரில்

ரெம்: சொல்லாது இருப்பேனோ
சந்தியோவை நான் மறப்பேனோ
துல்லியமாய் வெல்ல வைத்தாரே – இதற்கு
கைமாறு என்ன செய்வேன்.

திரை மூடுதல்

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் - ஆனந்த
மங்களம் மங்களம் மங்களமே

பிதா சுதனுக்கு மங்களம் - தூய
ஆவி யானவர்க்கும் மங்களம்
தேவ சாட்சிகட்கும் மங்களம் - மறை
பரப்பு வோர்களுக்கும் மங்களம்

காவலர் யாகப்பர்க்கு மங்களம் - கலை
காவலர் களுக்கும் மங்களம்
சேவை உளத்தோர்க்கு மங்களம் - வாழும்
அன்னை தமிழுக்கும் மங்களம்

கூத்து ஆடியவர்க்கு மங்களம் - ஆன்று
நடத்தி யோர்களுக்கு மங்களம்
ஒத்துழைத் தோர்களுக்கு மங்களம் - ஆடல்
பார்த்து மகிழ்ந்தோர்க்கு மங்களம்

# குருநகர் கலை மாட்சி

## மாட்சியைத் தேடும் முன்..



அலையாளும் குருநகர், கலையாளும் இடமாய், கலையின் வளர்ப்பகமாய் திகழ்ந்தது அன்று. இன்று அனாதரவான நிலையில், பிறரறிந்திடா வகையில் காணப்படுவதை உணரக் கூடியதாக இருக்கின்றது. போர்க்காலச் சூழலின் வக்கீரத்தில் நிகழ்ந்ததா?, பொறாமைக்குள் சிக்கி சீரழிந்ததா? அல்லது கலைவாழ்வின் முன்னோடித் தனத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டதா?

எதுவாயிருந்தாலும் எதிர்கால, நிகழ்கால சந்ததிகள், முன்னையவர்களின் பிரபல்யமான தகவல்களை அறிந்து கொள்வதற்கோ, இருப்பினை உணர்த்தி நிற்பதற்கோ ஆவணப்படுத்தல் ஒன்றாலேதான் முடியும். ஆவணப்படுத்தல் என்ற அரியதொரு பொக்கிஷம் குருநகரைப் பொறுத்த வரை வெறுமையாகவே காணப்படுகின்றது என்பதை எண்ணும்போது வேதனை தருகின்றது. டிசம்பர் 2002, “செவ்வானம்” காலாண்டு இதழில் அ. யேசுராசா அவர்களினால் குருநகரிலிருந்து வெளியான நூல்கள், சஞ்சிகைகள், தொகுப்பு இதழ்கள் பற்றிய சில விபரங்கள் வெளிக் கொண்டுவரப்பட்டமை ஒரு முன்னோடி நடவடிக்கையாகும்.

எமது பாரம்பரிய நாட்டுக்கூத்தினை எடுத்துக்கொண்டால் மேடையிலாடிய நடிகர்களாக, வழிநடத்திய அண்ணாவிமார்களாக, எழுத்தாற்றல் மிக்க கவிஞர்களாக இருந்தும் தமது உயிரோட்டமுள்ள செயற்பாடுகளை ஆவணப்படுத்தத் தவறிவிட்டார்கள். வசதி படைத்தவர்களாக இருந்தவர்களும், நடுத்தர வாழ்க்கை நிலையைக் கொண்டவர்களும், சாதாரண வாழ்க்கைத் தரத்தை உடைவர்களுமாக வாழ்ந்த மேற்படி கலைஞர்கள் ஒவ்வொருவரும் அவ்வப்போது தோன்றும் விண்மீன்களைப்போல பிரகாசித்தார்களே தவிர கலையை, தமது நிலையைப் பற்றிய தரவுகளை கல்லில் பதித்திட எண்ணியதேயில்லை. தமது கலைத்துவத்தின் முத்திரைகளை குறுகிய

வட்டத்திற்குள் பதித்தார்களே தவிர அவற்றை எவர் மூலமாகவேனும் முன்னிலைப்படுத்த முனைய வில்லை. இதுதவிர குருநகரில் கல்விமான்களாக தம்மைக் கூறிக்கொண்டு பெருமிதம் பேசும் கனவான்களும் கலைத்துறையில் குருநகர் இருந்த செழிப்பை உலகுக்கு உணர்த்தவோ, அதன் தடங்களை எதிர்கால சந்ததிக்கு பதிக்கவோ முன்வரவில்லை.

ஆனால் ஏனைய சில இடங்களில் வரிந்தெடுக்கப்பட்ட, விலை கொடுக்கப்பட்ட பட்டங்களை சுமந்த பலரை, சிறியவைகளையும் ஆவணப்படுத்தி பெருமைகொண்ட பலரை காண்கிறோம். ஆவணப்படுத்தலால் புகழடைந்த மேதாவிகள் பலரும் குருநகரின் கலைவாழ்வின் வளர்ச்சியை, உயற்சியை, கலைக்காக உழைத்த வர்களை ஆவணப்படுத்த தவறிவிட்டார்கள். அவர்களுக்கு உரிய தரவுகள் கிடைக்கவில்லையா? அல்லது அவரவற்கே உரித்தான புறக்கணிப்பா? என்பதை அவற்றைப் படிப்பவர்கள் உணர்ந்து கொள்வார்கள். அவர்களின் மனப்பான்மையை அல்லது அவர்கள் கடைப்பிடித்த கொள்கையை மீளாய்வு செய்வதைவிட, நாமிருக்கும்போது அவர்களை ஏன் எதிர்பார்க்க வேண்டும்? என்ற கேள்வியை ஒவ்வொரு கலைஞனும், அறிஞனும், ஆர்வலனும் தம்முள் கேட்டிருக்க வேண்டும். கேட்க வேண்டும்.

இது ஒரு குதர்க்கமான வேண்டுகோள் அல்ல. பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் நாட்டுக்கூத்துப் பற்றிய ஆய்வினை மேற்கொண்ட காலத்தில் குருநகரில் மிகச் சிறந்த கூத்துக் கலைஞர்கள் ஆற்றுகைகளில் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் பற்றிய விபரமான தரவுகளை, தகவல்களை ஏன் பேராசிரியர் அவர்கள் வெளிப் படுத்தவில்லை என்பது இன்றுவரை கேள்விக் குறியாக இருக்கின்றது.

ஆய்வினைத் தொடர்ந்த பேராசிரியர் அவர்கள், நடிகமணி வைரமுத்து, அண்ணாவி பூந்தான் யோசேப் ஆகியோர்களுடன் மட்டுமே தொடர்புகளை ஏற்படுத்தி அவர்கள் மூலமாக தரவுகளைப் பெற்று தமது சேகரிப்பாக்கி வெளிக்கொண்டு வந்தார், என்றே சிந்திக்கத் தோன்றுகின்றது.

பிறிதொரு விதமாக நோக்கினால் பேராசிரியர் அவர்களின் ஆய்விற்கு உதவியதாக கருதப்படும் மேற்படி கலைஞர்கள் பரந்த அளவிலான தகவல்களைப் பெற்றுக்கொடுப்பதில்

தவறிழைத்தார்களா? அன்றேல் பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்ட வரையறையைத் தவிர மேற்செல்ல விரும்பவில்லையா? என்ற கேள்விகளைக் கேட்கத் தோன்றுகின்றது. எதுவாக இருப்பினும் உண்மைகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டு விட்டதென்பது கண்கூடு.

பேராசிரியர் நீ மரியசேவியர் அடிகளார், "கம்பன் மகன்" நாட்டுக்கூத்து நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"கூத்தின் ஆணிவேராக இருப்பவர் அண்ணாவி. அவரை யாரும், எந்த நிறுவனமும் "பிறப்பிக்க" முடியாது. அவரது பிறப்பியல்பில் குரல்வளம், நடிப்பு சிறப்பு, ஆடற்கலை, அளிக்கை ஆற்றல் செறிந்திருக்கும். அவரை இனங்கண்டு மற்றவர்கள் பாராட்டி, வளர்த்தெடுத்துப் பயன்படுத்த முடியும். அண்ணாவி சடுதியாக தோன்றுபவர் அல்ல. கூத்துக்கலையை குற்றமறத் தெரிந்த ஓர் அண்ணாவியின் மாணவனாக அவர் இருந்திருப்பதும் இன்றியமையாதது. அதனாலேதான் கள ஆய்வாளர்களும், அளிக்கை தயாரிப்பாளர்களும் அண்ணாவியின் உதவியை நாடுகின்றனர். (சில வேளைகளில் உதவி பெற்றவர்கள் பெயர் எடுப்பதும், அவர்களுக்கு உந்துசக்தியாக நின்ற அண்ணாவி மறக்கப்படுவதும் கலையுலகில் நிகழ்ந்துவரும் கவலையான நிலை.) ஆக, கூத்துக்கலை நம் மத்தியில் வாழவேண்டுமானால் அண்ணாவிமார் போற்றப்பட வேண்டும். பெயர் புகழில் அவர்களுக்குரியது அளிக்கப்பட வேண்டும். கலையுலகைப் பொறுத்தமட்டில் காழ்ப்புணர்ச்சி, இருட்டடிப்பு, காட்டிக்கொடுத்தல் என்பன தலைதூக்கி நிற்பது வேதனைக்குரியது.

கூத்துக்கலைத் துறையில் உண்மைகளை மூடிமறைப்பதும், திறந்த மனதுடன் ஆய்வுகளை மேற்கொள்ளாமையும், குறிப்பிட்ட வாய்ப்பாடுபோல் எழுதப்பட்ட தரவுக்குள்ளேயே மட்டுப்பட்டு நின்று செயற்படுவதும் அண்மைக் காலங்களில் அரங்கியலாளர்களிடையே காணப்படும் மிக முக்கியமான குறைபாடாகவுள்ளது. இது ஆரோக்கியமானதல்ல. கூத்துக்கலையை ஆத்மீகமானதாக நினைத்து தூய்மையாகச் செயற்படும் பலரை இச் செயற்பாடுகள் மிகுந்த வேதனைக்கு உள்ளாக்குகிறது. குறிப்பாக உயர்கல்வி மட்டத்தினர் இதுபற்றி அதிக அக்கறை செலுத்துதல் வேண்டும்."

கடந்தகாலத்தில் நிகழ்ந்த தவறுகள் எதிர் காலத்திலும் இடம்பெறாதிருக்க வேண்டுமென்றால் குருநகரின் நிகழ்கால கலை, இலக்கிய கலைஞர்கள், அறிஞர்கள், ஆர்வலர்கள் முன்வர வேண்டும். முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் குருநகரில் கலை வாழ, வளர முடியும், பிரபல்யங்களை பிறர் அறிய முடியும். முன்னைய வெற்றிடங்களை சீர்செய்து குருநகரை கலைநகராய் உயர்த்திட முடியும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இது ஊரின் மீது கொண்ட பற்று. இதனைத் தவறு என்று யாருமே எண்ணிடக்கூடாது. மூன்றாம் சங்கம் படைத்த எட்டுத்தொகை நூல்களான புறநானூற்றில்,

**"யாதும் ஊரே! யாவரும் கேளிர்"**

எனும் பாடலடியைக் காண்கின்றோம். ஊரெல்லாம் ஓருலகம், எல்லோரும் சகோதரர்கள்

என்ற அரும் பெரும் தத்துவத்தை உலகுக்கு உரைத்த உன்னத கவிஞன் "கணியன் பூங்குன்றன்" என்பவராவார். இந்த மா மனிதனும் ஊரின்மீது கொண்ட பற்றினால்தான் கணியன் என்ற தனது பெயருடன் பூங்குன்றம் என்கின்ற தனது ஊரின் பெயரையும் இணைத்து "கணியன் பூங்குன்றன்" என எழுதியிருக்கிறார். ஊரில் பற்றுக் கொள்ளுதல் உபயோகமற்ற ஒன்றல்ல. உயரியவற்றை வெளியே கொண்டுவருதற்கு உந்தலாக இருக்கின்றது. அந்த உந்தலே பலவற்றை வெளிக்கொணர வழி வகுத்துள்ளது எனலாம்.

இந்த நூலில் முன்னையோர் விட்ட தவற்றை கையிலெடுத்துள்ளேன். குருநகரில் புதைந்துபோன கலை வாழ்வையும், வளர்த்த கலைஞர்களையும், வெளிவகுத்த மன்றங்களையும், எழுதிய ஆக்கங்களையும், ஆற்றிய ஆற்றுகை களையும், கலை, இலக்கியச் செழிப்பையும், பிறரால் மறைக்கப்பட்ட உண்மைகளையும் அகழ்ந் தெடுத்துள்ளேன். புதைந்தவைகள் எல்லாம் மீட்டெடுக்கப்பட்டதென அறுதியிட்டுக் கூறமுடியாது எடுக்கக் கூடியவற்றை எடுத்துள்ளேன் என்பதுதான் உண்மை. எடுத்தவற்றைப் பல பகுதிகளாக இங்கே தருகின்றேன்.

அத்துடன் குருநகர் மக்களின் பூர்வீகம், நிலையம், வதிவிடம், சிறப்புக்கள், இழப்புக்கள் போன்றவற்றையும், குருநகரின் நாட்டுக்கூத்து நிகழ்வுகளையும் வெளிக் கொண்டுவருவதில் பெருமிதமடைகின்றேன்.

**மாட்சி - 1 :** அலையாளும் குருநகர்.

**மாட்சி - 2 :** குருநகர் எழுத்தாளர்களால் வெளியிடப்பட்ட நூல்கள்.

**மாட்சி - 3 :** குருநகர் மக்களாலும், குருநகரிலிருந்தும் வெளியிடப் பட்ட வெளியீடுகள்.

**மாட்சி - 4 :** குருநகர் கலை, இலக்கிய, நாடக மன்றங்கள்.

**மாட்சி - 5 :** குருநகர் நாடக எழுத்தாளர்கள்.

**மாட்சி - 6 :** குருநகர் இசைக் கலைஞர்கள்.


**மாட்சி - 7 :** குருநகர் நாட்டுக்கூத்துச் சிறப்பு.

**மாட்சி - 8 :** குருநகர் கவிஞர்களால் எழுதப்பட்ட கூத்துக்கள்.

**மாட்சி - 9 :** குருநகர் பிரசவித்த அண்ணாவிகள்.

# மாட்சி - 1

## அலையாளும் குருநகர்.



அலையாளும் குருநகர் பற்றிய விபரங்களை வெளிக்கொண்டுவர, அருட் பணியாளன் கலாநிதி A.J.B. அன்ரனைனஸ் அடிகளாரால் 1956ம் ஆண்டில் எழுதி வெளியிடப்பட்ட "WHO ARE THE KURUKULAMS OF JAFFNA" என்னும் நூலிலிருந்து சிறு பகுதியைத் தருவது சிறப்பானதாகவும், பயனுள்ளதாகவும் இருக்கும் எனக் கருதுகின்றேன்.

நெவிலின் மற்றொரு ஏடு "முக்கற கற்றன" வாகும். 7740 வீரர்களைக் கொண்ட கரவ சேனை காஞ்சிபுரம், காவிரிப்பட்டணம், கீழக்கரை, முதலிய குருகுல தேசத்தில் (குருமண்டலிலிருந்து பெறப்பட்ட கொறமண்டல் என்ற பெயரிலும் இது அறியப்படும்) இருந்து இங்கு வந்ததை விபரிக்கிறது (Thursten Fodd). இவர்கள் முக்குவர்களையும், துலுக்கர்களையும் போராடி வென்றனர். என்று விபரிக்கின்றது. (பிரிட்டோவின் யாழ்ப்பாண சரித்திரம்) கோட்டையின் 6-ம் பராக்கிரமபாகுவே இவர்களை அழைத்தான் என்றும், அவர்களை எவ்வம்சத்தினர் என வினவி அறிந்து சந்தோசமடைந்தான் என்றும் சொல்கிறது. நீர்கொழும்பின் பல வீதிகளை அவர்களுக்கு வசிப்பிடங்களாக கொடுத்து அவர்களின் கடற்பிரயாணத்திற்கும், வியாபாரத்திற்கும் பதினெட்டு துறைமுகங்களை வரியின்றிக் கொடுத்தான். அரச முத்திரையாகிய சூரிய, சந்திர கொடிகளையும், அவர்களின் வழித்தோன்றல்கள் இன்றும் பாவிக்கும் மகரக் கொடியையும் அளித்தான். இச்சேனையின் தலைவர்கள்,

1. வச்சநாட்டுத்தேவர்,
2. குருநாட்டுத்தேவர்,
3. மாணிக்கத்தலைவன்,
4. ஆதி-அரச-ஆதப்ப-உன்னகே,
5. வர்ணசூரிய-ஆதப்ப-உன்னகே,
6. குரு-குல-சூரியமுதியான்சே,
7. அரச-குல-சூரியமுதியான்சே,
8. அரச நிலையிட்ட முதியான்சே

இவர்கள் பெயர்கள் அவர்கள் மூதாதையர்களைச் சுட்டிக்காட்டுகின்றது. இவர்களின் வம்சாவழியினர் கண்டி அரசர்களின் கீழ் முக்கிய பதவிகள் வகித்து

அம்பன, பவித்த, தம்பன்கடுவ முதலிய இடங்களில் கௌரவிக்கப்பட்டு நிலங்கள் தானம் செய்யப்பட்டு குடியேறினர். E.W. பெரராவின் "சிங்கள கொடிகளும் தகுதியும்" என்னும் நூலில் இவர்களின் பண்டைய கொடிகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இவர்களில் பெரும்பாலானோர் தங்கள் குருகுலத்தலைவர்களின் கீழ் அரசனின் கடற்படையாக அமைந்தனர். முதலியார் இராசநாயகத்தின் "பண்டைய யாழ்ப்பாணம்" பக். 211–ல் இது குறிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். சமாதான காலங்களில் யாழ்ப்பாண வள்ளங்களே வர்த்தக உயிர் நாடியாயின யோண் ஸ்ரில் குறிப்பிடுபவையும் இவையே (Jungle Tide p.116).

1905–ம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு புகையிரதத்தின் வருகையோடு இவர்கள் கைவசமிருந்த இக்கடல் வியாபாரம் வீழ்ச்சி அடைந்தது. மோட்டார் வாகனங்களின் வருகையோடு எஞ்சியிருந்த வாய்ப்புக்களும் முற்றுப்புள்ளி பெற, வேறு தொழில்களை இவர்கள் நாடவேண்டியதாக இருந்தது. சுவாமி S. ஞானப்பிரகாசர் குறிப்பிடுவது போன்று அவர்களில் வறியவராயுள்ளோர் வருவாயுள்ள தொழில் இல்லாமையால் மீன்பிடியைத் தொழிலாகக் கொண்டனர். "யாழ்ப்பாண பாதுகாவலன்" 1921–ம் ஆண்டு ஏப்ரல் 30 சொல்வது போன்று "பண்டைய சத்திரியர்களே போர்க்காலத்தைத் தவிர்ந்த ஏனைய வேளைகளில் தங்கள் சாதாரண தொழிலாக மீன்பிடியை வைத்திருக்கலாம் வேட்டையாடுதல் போன்று மீன்பிடித்தலும் பண்டைய காலங்களில் அரச பொழுது போக்காகவே கணிக்கப்பட்டது" போர் வீரர்கள் பரம்பரையினரின் வீர மனநிலைக்கு ஒத்ததாகவே கடல்தொழில் கருதப்பட்டது. இவர்களின் தலைவர்களும், தளபதிகளும் முதலியார்கள் அதிகாரிகள் கப்பலோட்டும் வணிகர்களாக மாற இவர்களுள் ஏனையோர் மீன்பிடித்தலைத் தொழிலாகக் கொண்டனர். S.J. பறாடாஸ் (Barradas) அடிகள் கூறுவது போல் இவர்களில் மிகவும் ஏழைகளே உள்ளூர் தேக்கங்களில் மீன்பிடிப்பதை இழிவான தொழிலாகக் கருதினர். (Monthly Lit. Register 4-132)

யாழ்ப்பாணத்தின் பழைய அரசர்கள் தங்கள் அரண்மனையின் மேற்குப் பகுதியையே அவர்களுக்குக் கொடுத்தனர். இதைக் கரையூர் என்று அழைத்தனர். ஒல்லாந்தர் வரைபடங்களிலும் கரையூர் என்றே குறிக்கப்பட்டுள்ளது. கிழக்கில் நல்லூரையும், தெற்கில் சுண்டிக்குளியையும், வடகிழக்கில் வண்ணார் பண்ணையையும் எல்லையாகக் கொண்டிருந்தது. இதே இன்றைய யாழ் நகராகும். இதனுள் பெரியகோயில், குருமடம், சம்பத்திரிசியார் கல்லூரி, திருக்குடும்பக் கன்னியர் மடம், அடைக்கலமாதா கோவில், சந்தியோகுமையோர் கோவில், யாழ் மத்திய கல்லூரி, நீதிமன்றம், கோட்டை இவற்றை உள்ளடக்குகின்றன. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் இதைப் "பறங்கித் தெரு" என்றனர். (Cf Earliest Dutch Topographical Map (1720) in Land, Maps & Surveys p. 142 by Brohier and paulusz published 1951)

இன்றைய யாழ் நகருக்குக் கரையூர் என்ற நாமம் கொடுக்கப்பட்டுள்ளதில் அர்த்தம் உண்டு. கரையூர் என்றால் "கரை நிலம்" அல்லது "குரு நிலம்" இதுவே ஆதிக் கௌரவர்களின் தாயகமாகும். இதையே சூளாமணி, நிகண்டு கரையார்களின் பூர்வீக நாடு குருநிலம் இதுவே பண்டையகால பூர்வீக சத்திரியர்களின் நாடு. காசிச் செட்டி ஏற்றுக்கொள்வது போன்று இன்றைக்கும் அவர்கள் குருகுலத்தார் என்றே யாழ்ப்பாணத்தில் அழைக்கப்படுகின்றனர். (F. Gazeteer p.235)

தேஸ்டன் தன்னுடைய தென்னிந்தியாவின் பூர்வ குடிகளும் சாதியும் (Casts and Tribes India) என்ற நூலில் குருகுலத்தாரைப் பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார். குரு என்ற சொல்லிலிருந்து இப்பெயர் எடுக்கப்படுகிறது. பட்டணவான்களால் கௌரவர்களின் மூதாதையர் என்று ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பட்டணவான்கள் என்றால் பட்டணங்களில் அல்லது நகரங்களில் வாழுவோர் இச் சொல் கரையோரமாக உள்ள

நகர்ப்புறங்களில் காணக்கிடக்கிறது. உ+ம் நாகப்பட்டணம், சென்னைப்பட்டணம், பட்டணவான்களில் இரு பெரும் பிரிவுகள் உண்டு. பெரியனவாகவும் சிறியனவாகவும். நெல்லூர் மாவட்டத்தில் நடுக்குடும்பம் போன்ற ஊர்களில் கங்கா புத்திரர்கள் (குழந்தைகள்) என்றும் அழைக்கப்படுவதுண்டு... சில பட்டணவர்களுக்குச் சாதிப்பெயர்கள் உண்டு உ+ம்; ஆரியர் ஐயாயிரத் தலைவர், வர்ணகுலமுதலி நீர் கடவுளாகிய வார்த்தையில் இருந்து வருகின்ற பெயராகும். குருகுல வம்சம் கௌரவர்களின் மூதாதையின் 'குரு'வில் இருந்து வருவதாகும்.

பெருவாரியான குருகுலத்தார் மன்னார் மாதோட்ட பகுதிகளைப் போன்று விவசாயத்தையே தொழிலாகக் கொண்டிருந்தனர். அவர்களுக்கும் யாழ் குருகுலத்தவர்களுக்கும் ஒரே மரபு தான் உண்டு. அவர்களிடம் இருப்பதுவும் கரவர்களின் கொடியே. இதுவே நீர்கொழும்பு முதலியார் வழித்தோன்றல்களிடம் இன்றும் காணப்படுகிறது. அது பொல்லநறுவை மாவட்டத்திலுள்ளது. அதன் பிரதி ஒன்று யாழ். புவிராஜசிங்கத்தின் குடும்பத்தாரிடம் உண்டு. இக் கொடியின் மத்தியில் கூம்பிய தொப்பி அணிந்த அரசன் அல்லது தலைவன், ஒரு வாளுடன் வெள்ளை யானை மீது அமர்ந்திருப்பதைக் காணலாம். அவன் இரு மருங்கிலும் முத்துக் குடைகளும், விசிறிகளும், வெண்சாமரைகளும், சந்திர சூரிய நச்சஸ்திரங்களும், ஒரு மீனும், ஒரு நாகப்பாம்பும், சங்கும், ஐந்து திரிகளுடன் கூடிய ஒரு தீ பந்தமும், வெள்ளைக் கேடயங்களும் அல்லது வட்டத்தகடு (அதன் நடுவே சங்கின் அடையாளமும்) பூக்கள் (தாமரைப்பூக்கள்) இரு கொம்பவுண்ட இலைகள் (Compound Leaves) காணப்படுகின்றன.

குருகுல மக்களின் கோயிலான யாழ் சந்தியோகுமையோர் ஆலய குருமனையில் வண. மறுவோ (Fr. Mauroit) அடிகளின் உருவப்படத்தின் பின் ஒரு மகரக் கொடியை இன்றும் காணலாம். இந்தியாவிலும், இலங்கையிலும் மிக உயர்ந்த அரசவம்சத்தின் தவறற்ற அடையாளங்களே இவை. சூளாமணி, நிகண்டின் 21ம் அதிகாரத்திலும், சதுர் அகராதியிலும் காணப்படும் அரசர்களுக்கான இருபத்தியொரு அடையாளங்களில் சில இவையாகும். (Cf. Casie chitty castes PP. 26-28) இவையே வட இந்தியாவின் சூரிய சந்திர வம்சாவழியினரின் ராஜரீகத்துக்குரிய விசேட அடையாளங்களாகும். (Cf. E.W. Perera's Book of Banners under the name of Karawa Flags) இந்திய மகாராஜாக்களின் அரச பவனிகளின்போது மகரக்கொடி எடுத்துச் செல்லப்பட்டது. இந்து புராணங்களில் சிவன் தனது அவதாரங்கள் ஒன்றினுள் குருகுல சம்பந்த பரதர் கோமான் அதிராசன் (மகாராஜா) மகளை மணம் முடிக்கப் போகும்பொழுது மகரக் கொடியையும் தன்முன் எடுத்துச் சென்றார் என்று குறிக்கப்படுகிறது. மகரம் என்றால் யானையின் தந்தத்தையும், சிங்கத்தின் கால்களையும், பன்றியின் காதையும், மீனின் உடலையும், வெளித்தெரியும் பற்களையும், குரங்கின் கண்களையும், அழகான தோகையையும் கொண்ட ஒரு கடல் பிராணியாகும். பிரபஞ்சங்களின் ஆளுமையை அடையாளம் மூலம் காட்டுவதே அதுவாகும். மீன் ஒரு அரச அடையாளமும், குருகுலத்தாரின் அடையாளமுமாகும். விஷ்ணு புராணத்தில் குருநாடு யமுனா, கங்கா பாயும் இடைவெளியேயுள்ள நிலமாகும். இது ஒரு மீன் வடிவத்திலுள்ளது. இதுவே கௌரவர்களின் வேதகால இருப்பிடமுமாகும். வட இந்தியாவின் குருவம்சத்தோடு உறவு கொண்ட தென் இந்திய பாண்டிய அரசர்கள் இதைத் தம் அடையாளமாகக் கொண்டதனால் மீனவர்கள் என்று அழைக்கப்பட்டனர். "மணிப்புறா" வின் குருகுல அரசனான அடுத்தி (Aditti) "கங்கா மாதாவின் கரையோரங்களில் வசிக்கும் நம் எல்லோருக்கும் மகரம் எங்கள் குருகுல வம்சத்தின் அடையாளம் அல்லவோ" என்கிறார். (வலைவீசுபுராணம்)



என அந்த நூலில் தொடர்ந்துகொண்டே போகின்றது. பெரிய நிலப்பரப்பையும், விரிந்த எல்லையையும் கொண்டு வியாபித்திருந்த குருகுல மக்களின் வாழ்விடம் கரையூர் என்று அழைக்கப்பட்டுள்ளது. இப்போது குருநகர் என அழைக்கப்படும் அதே குருகுல மக்களின் வாழ்விடம் முன்னைய நிலப்பரப்பிலிருந்து மிகக் குறுகிக் காணப்படுகின்றது. பல் தொழில்களை செய்துவந்த பலர் தமது வருவாய்க்கு கடற்றொழிலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டதாலோ, அன்றேல் அவ்வப்போது தோன்றிய பிரச்சினைகளின் பூதாகரத்தாலோ படிப்படியாக குடிப்பரம்பல் கடற்கரையை நோக்கி நகரத் தொடங்கியிருக்க வேண்டும். தம் உறவுகளுடன் அருகருகே அன்னியோன்யமாக வாழவேண்டும் என்ற எண்ணமும், ஒரே சமூகமாக வாழவேண்டுமென்ற விருப்பமும் குடிப்பரம்பலின் நகரலுக்குரிய வேறு காரணங்களாக இருக்கலாம். இந்த எண்ணங்களை இப்போதும் கொண்டவர்களாகவே அவர்கள் காணப்படுகின்றார்கள்.

இன்று மிகக் குறுகிய எல்லையைக் கொண்ட குருநகர் அதிகமான சனத்தொகையைக் கொண்டதாகவே காணப்படுகின்றது. மாநகரசபையில் 2ம், 3ம், 4ம், 5ம், 6ம் வட்டாரங்களையும், பிரதேச சபையில் J67, J68, J69, J70, J71, J72 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளையும் கொண்டதாக குருநகர் எல்லை காணப்படுகின்றது. இந்த எல்லைகளுக்குள் பல பகுதிகளில் பல்வேறு சமூகத்தவர்கள் செறிந்தும், பரந்தும் வாழ்கின்றார்கள். தெற்கு எல்லையாகக் காணப்படும் புதிய கடற்கரை வீதியை மருவியதாக கடல் தொடர்கின்றது. தெற்குநோக்கி முன்நூறு மீற்றர் தூரத்தில் சிறியதொரு தீவு காணப்படுகின்றது. அத்தீவில் மக்கள் வசிப்பதில்லை. லூர்துமாதா ஆலயம் இருக்கின்றது. முன்னர் ஆலயம் தரிசிப்பதற்கும், பொழுதுபோக்கிற்குமென அடிக்கடி பலர் சென்றுவருவதுண்டு. இப்போது இராணுவ வலயம் காரணமாக எவரேனும் செல்வதில்லை.

வண பிதா பிரான்சீஸ் அடிகளாரின் முயற்சியால் 1949ம் ஆண்டு குருநகர் வீடமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டது. பலநூறு வீடுகள் கட்டப்பட்டு குடியேற்றத் திட்டம் அமைக்கப்பட்டது. இக் குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்டதும் பரந்த எல்லையில் பரவலாக வாழ்ந்த குடும்பங்கள் அவற்றை விடுத்து குடியேற்றத்

திட்டத்தில் குடியேறலானார்கள். அப்போதைய ஜீவனோபாய தொழிலாக கடற்றொழில் சிறப்புற்றிருந்ததாலும், குடும்ப அங்கத்தவர் தொகை அதிகரித்துச் சென்றமையாலும் அவர்கள் அம்முடிவை எடுப்பதற்கு நிற்பந்திக்கப் பட்டிருக்க வேண்டும். இதுவே புதிய எல்லையைத் தோற்றுவித்தது எனலாம். புதிய எல்லைக்குள் அடக்கப்பட்ட மக்கள் தற்போது பிரதான வீதியைத் தாண்டி நகர்ந்து வாழத் தலைப் பட்டிருக்கிறார்கள். கணிசமான அளவு எல்லையைத் தாண்டி வாழத்தொடங்கியமை பழைய எல்லையை மீளப்பெறச் செய்வதாக அமைகின்றது.

குடியேற்றத் திட்டம் காரணமாக புதிய கடற்கரை வீதிக்கும், கடற்கரை வீதிக்கும் இடையிலான பகுதியில் மக்கள் மிகவும் செறிந்தும், ஏனைய இடங்களில் பரவலாகவும் வாழ்கிறார்கள். தற்போதைய எல்லை தவிர்ந்த முன்னைய பரந்த எல்லையின் பல பகுதிகளில் குருகுல மக்கள் அன்றுதொட்டு பரவலாக வாழ்ந்து வருகின்றார்கள்.

தற்போதைய எல்லையிலுள்ள குருநகர் நான்கு ஆலயங்கள், சிற்றாலயம், இரண்டு சனசமூக நிலையங்கள், இரண்டு பாடசாலைகள், இரண்டு முன்பள்ளிகள், பகல் பாலர் விடுதி, மண்டபம், விளையாட்டு மைதானம், கலையரங்கம், இறங்குதுறை, வலைத் தொழிற்சாலை, பனிக்கட்டித் தொழிற்சாலை, சந்தை, அரச களஞ்சியம், மீன்பிடிப் பயிற்சிக் கல்லூரி, உடற் பயிற்சிக் களரி, கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி, கட்டிடத் திணைக்களம், மது பரிபாலனத் திணைக்களம், இரண்டு மகப்பேற்று நிலையங்கள், இரண்டு குடிநீர்த் தாங்கிகள், சுங்கத் திணைக்களம், வானிலை ஆராச்சி நிலையம், போன்றவற்றைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது.

பெரும்பாலானோர் கடற்றொழிலிலும், ஏனையோர் அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், சுய தொழில்கள் போன்றவற்றிலும் பணியாற்றுகின்றார்கள். யாழ்ப்பாணத்தில் கலை, இலக்கிய, நாடக, நாட்டுக்கூத்துகளில் சிறந்து விளங்கியவர்கள் தொடர்ந்தும் விளையாட்டுப் போட்டிகளில் முன்னணி வகிக்கிறார்கள். புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் குருநகர் மக்களின் நிதியுதவியினால் மாலைநேர வகுப்புகள் பல பிரிவுகளாக நடத்தப்படுகின்றது.

1990 இல் ஆழ்கடலுக்கென 3 ½ தொன் உள்ளிணை இயந்திரப் படகுகள் 291, நடுத்தரக் கடலுக்கென 17 அடி வெளியிணை இயந்திர நார்இழைப் படகுகள் 82, பரவைக் கடலுக்கென 17 அடி மர வள்ளங்கள் 129, போன்றவை உரிய உபகரணங்களுடன் கடற்றொழிலுக்கு பயன்படுத்தப்பட்டது. 1984 இற்கு முன்னர் 40-60 அடி 20 வத்தைகள் பொருட்களை ஏற்றி இறக்குவதற்கும் பயன்படுத்தப்பட்டது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் கடற்றொழில் முற்றாகவும், ஏனைய இயல்பு நிலைகள் அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. மேற்கே 500 மீற்றர் தூரத்தில் யாழ். கோட்டையும், தெற்கே 800 மீற்றர் தூரத்தில் மண்டைதீவும் இருக்கின்றமையால் போரட்ட காலங்களில் குருநகர் மக்கள் மேளத்தின் நிலையாகினார்கள். பல மோசமான பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டியவர்களானார்கள். இதன் காரணமாக காலத்துக்குக் காலம் பல இடப் பெயர்வுகளை சந்தித்து அனைத்தையும் இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். அனேகமான வீடுகள் இன்னமும் முற்றாக அழிந்த நிலையிலேயே காணப்படுகின்றது.

பல இடங்களில் அடைக்கலம் புகுந்த வேளைகள், பாதுகாப்புத்தேடி ஓடிய வேளைகள், தொழிலுக்கு சென்ற வேளைகள், இடப்பெயர்வுகள், மீளமர்வுகள், மட்டுமன்றி பல்வேறு சந்தர்பங்களில் தனித்தும் குழுமமாகவும் தமது உயிர்களை காணிக்கை செய்திருக்கிறார்கள். உடலுறுப்புகளை, சொத்துக்களை இழந்திருக்கி றார்கள். இதனால் புலம்பெயர்ந்தும் வாழ்கின்றார்கள். அனேகமான குடும்பங்களில் குறைந்தது ஒருவரேனும் கொல்லப்பட்டிருப்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது.

இடப்பெயர்வு காரணமாக வன்னியில் வாழ்ந்தபோதும் உயிர், உடலிழப்புகளை சுமந்திருக்கிறார்கள். இவற்றில் அனைத்தையும் நினைவில் வைத்திருப்பதோ, சேகரித்து பட்டியலிடுவதோ, சம்பந்தப்பட்ட பல குடும்பங்கள் இன்னமும் மீளக் குடியமராத நிலையில் விசாரித்தறிவதோ கடினமானதொன்றாகும்.

காலத்துக்குக்காலம் பல இடப்பெயர்வுகளைச் சந்தித்த இம் மக்கள் அனுபவித்த துன்பங்கள் – துயரங்கள், வேதனைகள் – வேரறுப்புக்கள், இழப்புக்கள் – இதயத் துடிப்புக்கள் அனைத்தும் மறைக்கப்பட்ட ஒன்றாக மாறிக்கொண்டு வரும் இவ்வேளையில் நடந்த சிலவற்றையேனும் வெளிக்கொண்டுவரச் சந்தற்பம் கிடைத்ததையிட்டு இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

## உயிர், உடலுறுப்பு இழப்புகள்:


- ***23.12.1964*** *கடும் புயற் காற்றில் சிக்குண்டு படகுகள், உபகரணங்களுடன் 15 பேர்களுக்கு மேல் உயிரிழப்புகளும் ஏற்பட்டது.*
- ***24.12.1968*** *யாகப்பர் ஆலயத்தில் நடுநிசியில் கிறிஸ்மஸ் திருப்பலியில் பங்குபற்றிக் கொண்டிருந்த பக்தர்கள் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு டயஸ் அவர்களின் தலைமையில் வந்த பொலிஸாரினால் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள். பாதுகாப்புத்தேடி ஆலயத்திற்குள் புகுந்தவர்களும் தாக்கப்பட்டு படுகாயம் அடைந்தார்கள். தாக்கப்பட்டவர்களின் செந்நீர் ஆலயமெல்லாம் சிந்திக் கிடந்தது.*
- ***07.03.1970*** *பாலைதீவு அந்தோனியார் திருவிழாவிற்குச் சென்ற 80 பயணிகள் படகு கவிழ்ந்து கடலில் மூழ்கி மாண்டனர்.*
- ***10.06.1986*** *மண்டைதீவுக் கடற்கரையில், கடற்படையினரால் 31 கடற்றொழிலாளர் கொடூரக் கொலை செய்யப்பட்டார்கள்.*
- ***25.02.1987*** *மண்டைதீவில் இருந்து ஏவப்பட்ட ஷெல்லால், சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் அடைக்கலம் புகுந்த 4 பேர்கள் கொலை செய்யப்பட்டும் 11 பேர்கள் படுகாயம் அடைந்தார்கள். இந்த நிகழ்வின் வடுவாக ஒற்றைக் கண் அகற்றப்பட்ட நிலையில் திருமதி சி. பாக்கியம் காணப்படுகின்றார்.*
- ***22.10.1987*** *சம்பத்தரிசியார் கல்லூரியில் அடைக்கலம் புகுந்திருந்த குருநகர் அகதிகளில் 18 பேர்கள் எறிகணைத் தாக்குதலால் கொல்லப்பட்டனர். பலர் படுகாயம் அடைந்தனர்.*
- ***21.11.1987*** *அராலிக் கடலில் பயணம் செய்த குருநகர் அகதிகள் இந்திய விமானப் படையின் துப்பாக்கிச் சூட்டில் குழந்தைகள் உட்பட 7 பேர்கள் கொல்லப்பட்டார்கள். 11 பேர்கள் படுகாயமடைந்தார்கள். இதற்குச் சாட்சியாக தனது வலது காலை இழந்த அப்போதைய 5வயதுச் சிறுவன் திரு டே. கமில்ரன் என்பவர் காணப்படுகின்றார்.*
- ***30.11.1987*** *சுகவீனமுற்று வைத்தியசாலைக்காக கல்முனையிலிருந்து வந்த குருநகர் அகதிகள் 3 பேர்கள் கொலை செய்யப்பட்டும், 6 பேர்கள் படுகாயம் அடைந்தார்கள்.*
- ***18.08.1990*** *பாஷையூர் அந்தோனியார் ஆலயத்தில் அடைக்கலம் புகுந்தவர்களில் எறிகணைத் தாக்குதலால் 6 பேர்கள் கொலை. காயப்பட்ட பலரை தள்ளு வண்டிலில் கொண்டுவந்த காட்சி மனதை உறுத்தக்கூடியது.*
- ***08.08.1990*** *சம்பத்தரிசியார் கல்லூரியில் அடைக்கலம் புகுந்திருந்த குருநகர் அகதிகள் குண்டுத் தாக்குதலால் ஒருவர் கொல்லப்பட்டும் 11*

பேர் படுகாயமும் அடைந்தார்கள். இக் குண்டுத் தாக்குதலின் நினைவாக தனது இடது கையை இழந்த திரு சி. அல்போன்ஸ் காணப்படுகின்றார்.

- **13.11.1993** இலங்கை விமானப்படையின் சுப்பர்சொனிக் குண்டுத் தாக்குதலால் குருநகர் யாகப்பர் ஆலயத்தின் ஒரு பகுதி தகர்க்கப்பட்டது. அதில் 9 பேர்கள் உயிரிழந்தும், 15 பேர்கள் படுகாயம் அடைந்தார்கள்.
- **05.12.1993** சின்னக்கடை சந்தை, சென் றோக் சனசமூக நிலையம் ஆகியவைகளில் 11 பேர்கள் விமானக் குண்டு வீச்சால் பலியானார்கள்.
- **16.06.1994** இரவு மண்டைதீவிலிருந்து ஏவப்பட்ட எறிகணையால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் படுகொலை செய்யப்பட்டார்கள்.
- **10.05.2000** தொடர்மாடி அருகில் வீழ்ந்த எறிகணையால் 6 பேர்கள் பலி.
- **1984** முதல் **1999** வரை மேலே குறிப்பிடப்பட்டவற்றைத் தவிர 132 பேர்கள் கடலுக்குத் தொழிலுக்கு சென்றபோது கொல்லப்பட்டுள்ளார்கள்
- **1995** மாபெரும் இடப்பெயர்பின் பின் **1996** இல் நாச்சிக்குடாவில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டு நால்வர் படுகாயம் அடைந்துள்ளனர். 1999 இல் நாச்சிக்குடா கடலில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். ஏனைய விபரங்கள் அறியப்படவில்லை.
- **2000** வரை 236 பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர்.

### பொருளாதார இழப்புகள்:

- **24.10.1987** குருநகர் இறங்குதுறையில் தரித்துநின்ற 3 ½ தொன் இயந்திரப் படகும் அதற்குரிய தொழில் உபகரணங்களும் குண்டுவீச்சால் முற்றாக எரிந்து நாசமாகியது. அப்போதைய பெறுமதி ஒவ்வொன்றும் 3 இலட்சம்.
- **02.08.1990** குருநகர் முழுவதும் "காப்பெற் பம்மிங்" செய்யப்பட்டு 60 வீதமான வீடுகள் அழிக்கப்பட்டும், கடும் சேதமாக்கவும்பட்டது.
- **1990** இற்கு முந்திய முழுமையான இழப்பு விபரங்களை நிரூபிக்க முடிய வில்லை. 1990 இற்குப் பின்னர் 3 ½ தொன் இயந்திரப் படகுகள் 290, 17 அடி நீளமான நாரிளைப் படகுகள் 60, 17 அடி நீளங்களுள்ள மரவள்ளங்கள் 120 ஆகியவை முற்றாக சேதமாக்கப்பட்டது. இவற்றின் அப்போதைய பெறுமதி 200 மில்லியன் ரூபாய்களாகும்.
- **1990** இற்குப் பின்னர் E.L.F. வாகனங்கள் 16 அழிக்கப்பட்டது. சீநோர், ஐஸ் தொழிற்சாலைகளுடன் 50 சிறுதொழில் நிலையங்கள் அழிக்கப் பட்டது.




குருநகர் மக்களின் இதயத்தைப் பிழிந்த புனித யாகப்பர் ஆலய தகர்ப்பின் அடையாளம்.


ஆலயத் தகர்ப்பின் 10வது ஆண்டு நிறைவு நாளில் அருட் கலாநிதி அ. பி. ஜெயசேகரம் அடிகளால் நினைவுக்கல் நாட்டப் பட்டது. அந்தக் கல்லில் பின் வருமாறு பொறிக்கப்பட்டுள்ளது.

**"இறந்தவர்களுக்கு வணக்கம், இருப்பவர்களுக்கு எச்சரிக்கை"**


## 1995 இல் கிராம அலுவலர் பிரிவுகளும், மக்கள் தொகையும்





மக்கள் தொகை 1220
குடும்பங்கள் 300
குருநகர் மக்கள் 20%





மக்கள் தொகை 5102
குடும்பங்கள் 1288
குருநகர் மக்கள் 80%





மக்கள் தொகை 4608
குடும்பங்கள் 975
குருநகர் மக்கள் 95%




மக்கள் தொகை 3277
குடும்பங்கள் 707
குருநகர் மக்கள் 60%




மக்கள் தொகை 1974
குடும்பங்கள் 530
குருநகர் மக்கள் 95%




மக்கள் தொகை 626
குடும்பங்கள் 161
குருநகர் மக்கள் 75%

# மாட்சி - 2

## குருநகர் எழுத்தாளர்களால் வெளியிடப்பட்ட நூல்கள்.

கல்வி, கலை, இலக்கியம், மருத்துவம், விவசாயம், மனையியல், அறிவியல், தொழிற் பயிற்சிகள், பொழுதுபோக்கு போன்ற இன்னோரன்ன தேவைகளின் நிமித்தம் ஆங்காங்கே, காலத்துக்குக் காலம் பலதரப்பட்ட நூல்கள் வெளிவந்தன. வெளிவந்துகொண்டும் இருக்கின்றன. அந்தவகையில் குருநகர் மக்களும் தமது பட்டறிவைக்கொண்டு பலதரப்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டிருக் கிறார்கள். என்பதை அறிவேன். அவற்றைத் தேடியலைந்ததில் 1815 இல் எழுதப்பட்டுள்ளமையை அறியமுடிந்தது. ஆனால் 1955 இற்கு முன்னர் வெளியிடப்பட்ட நூல்களின் விபரங்களை அறியமுடியவில்லை. அவ்வாறே பிற நாடுகளில் வாழ்ந்த குருநகர் மக்களால் வெளியிடப்பட்ட நூல்களைப் பற்றிய முழு விபரங்களும் கிடைக்கப் பெறவில்லை. கிடைத்தவற்றை இங்கே பட்டிய லிட்டுத் தருகின்றேன்.

| நூலின் பெயர் | ஆண்டு | நூலாசிரியர் |
|---|---|---|
| 1. Who are the Kuru – Kulams of Jaffna | (1956) | Rev. Dr. A.J.B.அன்ரனைனஸ் |
| 2. The Chronicle of the Sanctuary of Our Lady of Madhu | (1979) | Rev. Dr. A.J.B.அன்ரனைனஸ் |
| 3. The Martyrs of Mannar | | Rev. Dr. A.J.B.அன்ரனைனஸ் |
| 4. Saradiel | | Rev. Dr. A.J.B.அன்ரனைனஸ் |
| 5. Despot in Purple | | Fr. F.J. ஸ்ரன்ஸ்லோஸ் M.A. |
| 6. Fiat Justitia | (1978) | Fr. F.J. ஸ்ரன்ஸ்லோஸ் M.A. |
| 7. சிறுவர் செபப் பொக்ஷம் | (1955) | L. கிறேஷியன் |
| 8. மாணவர் பூமிசாஸ்திரம் | (1962) | L. கிறேஷியன் |
| 9. 5ம் வகுப்பு சூழல் வினாவும், விடையும் | (1963) | L. கிறேஷியன் |
| 10. புவியியல் சங்கிரகம் | (1970) | L. கிறேஷியன் |
| 11. திருச்சிலுவை ஆராதனை | (1982) | L. கிறேஷியன் |
| 12. யாழ்ப்பாணத் திருச்சபை வரலாறு I | (1997) | Fr. J.A. ஜெயசீலன் M.A. |
| 13. யாழ்ப்பாணத் திருச்சபை வரலாறு II | (1999) | Fr. J.A. ஜெயசீலன் M.A. |
| 14. யேசுக்கிறிஸ்துவை பின் செல்லுதல் | (1987) | Fr. J.A. ஜெயசீலன் M.A. |
| 15. கிறிஸ்துவில் வாழ ஒன்பது படிகள் | (1988) | Fr. J.A. ஜெயசீலன் M.A. |
| 16. சியன்னா கத்தரீனா | (2000) | Fr. J.A. ஜெயசீலன் M.A. |

| | | | |
|---|---|---|---|
| 17. | மூன்றாம் நூற்றாண்டு மறை சாட்சிகள் | (2000) | Fr. J.A. ஜெயசீலன் M.A. |
| 18. | ஏன் என்னைக் கொன்றீர்கள்? | (2001) | Fr. J.A. ஜெயசீலன் M.A. |
| 19. | தேவதாயின் அற்புத வரலாறு (மொ.பெ) | (2003) | Fr. J.A. ஜெயசீலன் M.A. |
| 20. | காதல் நெஞ்சம் (இலக்கியக் கட்டுரைகள்) | (1969) | வித். புலவர் வேல்மாறன் |
| 21. | தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும் | (1974) | அ. யேசுராசா |
| 22. | அறியப்படாதவர்கள் நினைவாக | (1984) | அ. யேசுராசா |
| 23. | தூவானம் | (2001) | அ. யேசுராசா |
| 24. | பனிமழை (மொழிபெயர்ப்பு) | (2002) | அ. யேசுராசா |
| 25. | அம்பா (மீனவர் பாடல் விளக்கம்) | (1976) | மு. புஸ்பராஜன் |
| 26. | மணப்பெண் | (1992) | S.N.J. மரியாம்பிள்ளை |
| 27. | இரட்டையர் | (1992) | S.N.J. மரியாம்பிள்ளை |
| 28. | கனவு பலித்தது | (1992) | S.N.J. மரியாம்பிள்ளை |
| 29. | தடுமாறும் சாஸ்திரங்கள் (சுவிஸ்) | (1993) | கு. இராயப்பு |
| 30. | தமிழ்ச் சோலை (சுவிஸ்) | (1994) | கு. இராயப்பு |
| 31. | அவலத்தின் இராகங்கள் (சுவிஸ்) | (1995) | கு. இராயப்பு |
| 32. | செயல்முறை கணிப்பொறி | (1999) | கு. இராயப்பு |
| 33. | கணிப்பொறி 2000 | (2001) | கு. இராயப்பு |
| 34. | தாயகம் நோக்கிய பயணம் I (மொழி பெ.) | (1992) | V.P. ஜோசப் |
| 35. | தாயகம் நோக்கிய பயணம் II (மொழி பெ.) | (1992) | V.P. ஜோசப் |
| 36. | களத்திலேயே வீழ்வோம் (மொ.பெ. கவிதை) | (2001) | V.P. ஜோசப் |
| 37. | குழந்தைப் பாடல்கள் தொகுதி I (சுவிஸ்) | (1997) | திருமதி ஜெயந்தி ஜீவா |
| 38. | குழந்தைப் பாடல்கள் தொகுதி II (சுவிஸ்) | (2001) | திருமதி ஜெயந்தி ஜீவா |
| 39. | நீதியின் இருக்கைகள் | (2000) | ம. சாம்பிரதீபன் |
| 40. | உள்ளத்தில் மட்டும் (பிரான்ஸ்) | | கி. கிறிஸ்ரியன் |
| 41. | திருப்பம் (பிரான்ஸ்) | | கி. கிறிஸ்ரியன் |
| 42. | உயிர்ப்பில் (பிரான்ஸ்) | (1999) | கி. கிறிஸ்ரியன் |
| 43. | வீணாகிப்போன நாட்கள் (பிரான்ஸ்) | | கி. கிறிஸ்ரியன் |
| 44. | அனல் | (1998) | மேரி அனற் மிராண்டா |
| 45. | இலக்கிய பலகணி | (1994) | செ. தங்கராசா |
| 46. | கரையோரப் பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தியில் அதிகாரப் பரவலாக்கமும் பணி கையளிப்பும் | (1991) | செ. தங்கராசா |
| 47. | கன்னியர் அன்னையர் கண்ணீர் சிவந்தது | (1986) | பி. மிக்கேல்பிள்ளை |
| 48. | காலையும் மாலையும் | (1991) | S.A. அழகராஜா |
| 49. | மண்ணே சாட்சி | (1991) | S.A. அழகராஜா |
| 50. | வேதனுக்கு வேள்வி | (1991) | S.A. அழகராஜா |
| 51. | ஆசிரியத்துள் நான் | (2003) | திருமதி M.R.C. கொன்ஸ்ரன்ரைன் |

**தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும்.**

இலங்கை சாஹித்திய மண்டலப் பரிசு பெற்றது - 1975

**நீதியின் இருக்கைகள்.**

வடக்கு கிழக்கு மாகாண கல்வி - பண்பாட்டமைச்சின் பரிசு பெற்றது - 2001

**தூவானம்.**

வடக்கு கிழக்கு மாகாண கல்வி - பண்பாட்டமைச்சின் பரிசு பெற்றது - 2002

# மாட்சி - 3

## குருநகர் மக்களாலும், குருநகரிலிருந்தும் வெளியிடப்பட்ட வெளியீடுகள்.

ஒரு ஊரின், ஒரு சமூகத்தின் செழிப்பு, அதன் எழுச்சி போன்றவை அங்கிருந்து வெளியாகும் சஞ்சிகைகள், தொகுப்பு மலர்கள், தொகுப்பு இதழ்கள் போன்றவற்றிலிருந்தே அறிந்துகொள்ள முடியும் என்று சொல்வதுண்டு. அந்த வகையில் குருநகரிலிருந்து 11 சஞ்சிகைகள், 2 தொகுப்பு இதழ்கள், 10 தொகுப்பு மலர்கள் காலத்துக்குக் காலம் வெளியீடாக வெளி வந்திருப்பதை அறியக் கூடியதாக இருக்கின்றது.

இவை அனைத்தும் 1961ம் ஆண்டிற்கு பின்னர் வெளிவந்தவைகளாகவே காணப்படுகின்றது. 1961இற்கு முன்னர் வெளிவந்த எவையேனும் கிடைக்கப்பெறவில்லை. அதேபோல் பல தொகுப்பு மலர்கள் அழிந்துவிட்ட நிலையில், அதன் வெளியீட்டாளர்களை இனங்காணமுடியாத நிலையில் அவற்றின் குறிப்புகளைப் பெறவும் முடியவில்லை. நாட்டிய அரங்கேற்றம், விளையாட்டுப்போட்டி, ஆலய வரலாறு, பரிசளிப்பு போன்ற பல சிறிய மலர்களும் வெளியாகியிருந்தன. அவற்றின் விபரங்கள் இங்கே இணைக்கப் படவில்லை. இந்த இணைப்பில் உள்ளவைகள் முற்றுப்பெற்ற தகவல்கள் இல்லா விடினும் கணிசமான அளவு வெளிவந்திருப்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது. அதன்மூலம் குருநகரின் செழிப்பை ஓரளவேனும் உணரக் கூடியதாக இருக்கின்றது.

### சஞ்சிகைகள்

பெயர் : **அலை** : *1975 – 1990*
ஆசிரியர் : அ. யேசுராசா, மு. புஸ்பராஜன் (ஆசிரியர் குழு)
வெளியீடு : அலை இலக்கிய வட்டம்.

பெயர் : **வழிகாட்டி** : *1988*
ஆசிரியர் : வண. யோ. எ. ஜெயசீலன்
வெளியீடு : கொழும்புத்துறை புனித சவேரியார் குருமடம்

பெயர் : **கவிதை** : 1994 – 1995
ஆசிரியர் : அ. யேசுராசா
வெளியீடு : அ. யேசுராசா

பெயர் : **தேவதாயின் குரல்** (மாத இதழ்) : 1991ல் இருந்து.
ஆசிரியர் : வண. யோ. எ. ஜெயசீலன்
வெளியீடு : வளன் ஆச்சிரமம்.

பெயர் : **மனிதன்** : 1977 – 1980
ஆசிரியர் : வண. யோ. எ. ஜெயசீலன்
வெளியீடு : வளன் ஆச்சிரமம்.

பெயர் : **Spectrum** : 1981
ஆசிரியர் : வண. யோ. எ. ஜெயசீலன்
வெளியீடு : மைசூர், இந்தியா.

பெயர் : **ஓடம்** (கையெழுத்துப் பிரதி) : 1996–2002
ஆசிரியர் : யே. இக்னேஷியஸ்
வெளியீடு : குருநகர் இளைஞர் ஒன்றியம்.

பெயர் : **சிப்பி** (கையெழுத்துப் பிரதி) : 2000
ஆசிரியர் : யே. இக்னேஷியஸ்
வெளியீடு : குருநகர் இளைஞர் ஒன்றியம்.

பெயர் : **திரையொளி** (மாதாந்த இதழ்) : 1968 – 1969
ஆசிரியர் : பவானி மணாளன் (10/2 அடப்பன் றோட், குருநகர்)
வெளியீடு : இலங்கைநாயகி அச்சகம்.

பெயர் : **செவ்வானம்** (காலாண்டு இதழ்) : 2002 முதல்
ஆசிரியர் : யோ. மரியாம்பிள்ளை
வெளியீடு : சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகம்.

பெயர் : **அலை ஓசை** (காலாண்டு இதழ்) : 2003 தை முதல்
ஆசிரியர் : எமிலியானுஸ் ஜோய்
வெளியீடு : சென் ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கம். (பிரான்ஸ்)

## தொகுப்பு இதழ்கள்

பெயர் : **புத்தொளி** : 1967
ஆசிரியர் : இ. டோறஸ்
வெளியீடு : கலைக்கழகம்.

பெயர் : **உலகின் ஒளி** : *1968*
ஆசிரியர் : கு. இராயப்பு
வெளியீடு : இளைஞர் கலைக்கழகம்.

## தொகுப்பு மலர்கள்

பெயர் : **புனித யாகப்பர் நூற்றாண்டு மலர்** : *1961*
ஆசிரியர் : இ. டோறஸ்
வெளியீடு : புனித யாகப்பர் பங்குச்சபை.

பெயர் : **குருநகர் கலைக்கழகத்தின் கலைவிழா மலர்** : *1966*
ஆசிரியர் : இ. டோறஸ்
வெளியீடு : குருநகர் கலைக்கழகம்.

பெயர் : **நெய்தல்** : *1971*
ஆசிரியர் : மு. புஸ்பராஜன்
வெளியீடு : நெய்தல் வளர்பிறை மன்றம்.

பெயர் : **குருநகர் கலைக்கழகத்தின் ஆண்டுவிழா மலர்** : *1971*
ஆசிரியர் : ஆசிரியர் குழு
வெளியீடு : குருநகர் கலைக்கழகம்.

பெயர் : **குருநகர் கலையரங்க திறப்புவிழா மலர்** *1972*
ஆசிரியர் : ஆசிரியர் குழு
வெளியீடு : குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி.

பெயர் : **கலைக்கதிர் நாடக மன்ற 5வது ஆண்டு நிறைவு மலர்**: *1972*
ஆசிரியர் : பொன் பொன்ராஜா
வெளியீடு : கலைக்கதிர் நாடக மன்றம்.

பெயர் : **நடன நல்லிசைக் கலாமன்ற ஆண்டுவிழா மலர்** *1974–1988*
ஆசிரியர் : சி. தார்சீசியஸ்
வெளியீடு : நடன நல்லிசைக் கலாமன்றம்.

பெயர் : **புனித யாகப்பர் ஆலய 125வது ஆண்டு நினைவு மலர்** *1986*
ஆசிரியர் : ஆசிரியர் குழு
வெளியீடு : புனித யாகப்பர் பங்குச்சபை.

பெயர் : **குருநகர் றெக்களமேசன் சனசமூக நிலைய 25ம் ஆண்டு நிறைவு விழா மலர்** *1964*
ஆசிரியர் : ச. யேசுதாசன், திருமதி ஞானப்பிரகாசம்
வெளியீடு : குருநகர் றெக்களமேசன் சனசமூக நிலையம்.

பெயர் : **திரு இருதய சபை 90வது ஆண்டு விழா மலர்** *1995*
ஆசிரியர் : ஆசிரியர் குழு
வெளியீடு : குருநகர் திரு இருதய சபை.

# மாட்சி - 4

## குருநகர் கலை, இலக்கிய, நாடக மன்றங்கள்.

பண்டுதொட்டு ஒவ்வொரு நகரங்கள், ஊர்கள், கிராமங்கள் தோறும் துறைசார் மன்றங்கள் இயங்கி வந்தமையை யாவரும் அறிவர். பல மன்றங்கள் முரண்பாடுகள், நிறைவேற்றப்படாத தீர்மானங்கள், செயலிழந்துபோன நிர்வாகிகள், அரசியல் புகுந்தமை, நிற்பந்தங்கள், தேவையான நிதிகள் கிடையாமை, நோக்கம் செயலுருப் பெற்றமை போன்ற பல்வேறு காரணிகளால் இறந்து காணப்படுகின்றது. நாட்டில் ஏற்பட்ட அமைதியற்ற சூழல், இடப்பெயர்வுகள், கட்டுப்பாடுகள், அடக்கு முறைகள் போன்றவை பலவகையிலும் மன்றங்களின் வளர்ச்சியைக் கேள்விக்குறியாக்கி விட்டதையும், தொடரமுடியாத நிலை ஏற்பட்டதையும் எவரும் மறுப்பதற்கில்லை.

இந்த நிலை குருநகருக்கு மட்டும் விதிவிலக்கல்ல என்பதை மன்றங்கள் பற்றிய தரவுகளைத் தேடியலைந்தபோது உணரக்கூடியதாக இருந்தது. குருநகரைப் பொறுத்தவரை பல துறைசார் மன்றங்கள் செழிப்புடன் இயங்கி வந்துள்ளமையைக் கண்டிருக்கிறேன். விளையாட்டுத் துறை, நாடகத்துறை, கலை இலக்கியத்துறை, இசைத்துறை, சிற்ப ஓவியத்துறை, சமூக முன்னேற்றம், கடற்றொழில் முன்னேற்றம், கல்வி முன்னேற்றம், அபிவிருத்தி போன்ற பலதுறைகளில் மன்றங்கள் இயங்கி வந்துள்ளது, மேலே குறிப்பிட்ட காரணிகளால் பல இயங்காதிருப்பினும், படிப்படியாக புதிய இரத்தம் பாய்ச்சப்பட்டு அவை இயங்கத் தொடங்குவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

இவற்றில் அனைத்து மன்றங்களினது தரவுகளையும் இங்கே என்னால் தர முடியாமைக்கு வருந்துகிறேன். கலை இலக்கியத்துடன் தொடர்பு களைக்கொண்ட மன்றங்களை மட்டுமே இங்கே வெளிக்கொண்டுவர முனைகின்றேன். இவற்றிலும் எனக்கு பெரியதொரு சிக்கல் காத்திருந்தது. சமய நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட அமைப்புகளும்

நாடகத்தை தமது இலக்குகளில் ஒன்றாகக் கொண்டு இயங்கியிருக்கிறார்கள், விளையாட்டுக் கென ஆரம்பிக்கப்பட்ட மன்றங்களும் நாடகத்தை வளர்த்திருக்கின்றார்கள். சனசமூக நிலையங்களும் கலையை வளர்த்திருக்கின்றது. ஆகவே கலை இலக்கியத்தைச் சுட்டக்கூடிய பெயர்களை உடைய மன்றங்களைத் தவிர வேறு சில மன்றங்களும் கலையை வளர்த்திருப்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது. அவற்றையும் இணைத்திருக்கின்றேன்.

ஒவ்வொரு மன்றமும் மேடையேற்றிய கூத்துக்கள். நாடகங்களின் பெயர்களை முடிந்தவரை சேகரித்துள்ளேன். இவற்றில் பல நாடகங்கள், கூத்துக்கள் பல மன்றங்களால் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் மேடையேற்றப்பட்டும் உள்ளது. இங்கே அப்பெயர்களை ஒரு தடவை மட்டுமே குறிப்பிட்டுள் ளேன். இதனால் நாடகம், கூத்துக்களின் எண்ணிக்கை தகவலாளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் பாரிய வேறுபாட்டைத் தருகின்றது. தகவலாளர்கள் இதனை ஏற்றுக்கொள்வார்களென நம்புகின்றேன்.

## 1. திரு இருதய சபை - 1904

சிறுவர்களையும், வாலிபர்களையும் பக்தியிலும், நன்னெறியிலும் பயிற்றுவிக்கும் நோக்குடன் 1905ல் உருவாக்கப்பட்டது திரு இருதய சபை. காலப்போக்கில் சமய, சமூக, கல்வி, கலாச்சார, கலை – இயல், இசை நாடகம், விளையாட்டு, அலங்காரம் போன்ற பணிகளை ஆற்றியுள்ளமையை, திரு இருதய சபையின் 90வது நிறைவு மலரில் அறியக்கூடியதாக இருக்கின்றது.

அநேக நாடகங்கள் அளிக்கை செய்துள்ளார்கள் என்று கூறுபவர்களால் பிலோமினா, தார்சியஸ், எஸ்தாக்கியார், ஞானசௌந்தரி போன்ற நாடகங்களை மட்டும் நினைவு கூர முடிகின்றது. நாடகங்களுக்காகவே அரங்கப் பொருட்கள் செய்யப் பட்டதாக மலரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திரு இருதய சபைக்கு சொந்தமானதாக அரங்கப் பொருட்கள் நிறையவே இருந்ததை நான் அறிவேன் மேடை அமைப்பு உபகரணங்களான அழகிய காட்சிகள் சித்திரமாக வரையப்பட்ட திரைச்சீலைகள். இந்தத் திரைச்சீலை ஒவ்வொன்றும் ஒரேமேடையில் பலதரப்பட்ட காட்சிகளை காண்பிப்பதற்கேற்ற வகையில் அரண்மனை, வீதி, காடு, பட்டினம் போன்ற பற்பல காட்சிகள் சித்திரமாக வரையப்பட்டிருந்தன. இவைதவிர திரைச்சீலைகளுக்கான தடிகள், கப்பிகள், அரண்மனைப் படிகள், தூண்கள், அரங்க முகப்பை அலங்கரிக்கும் தட்டிகள், நடிகர்களுக்கான உடைகள் போன்ற அரங்கப் பொருட்களுடன் பின் வரிசையில் பார்வையாளர்கள் அமர்வதற்கான கலரியும் வைத்திருந்தார்கள்.

இக் கலரியானது இரும்புப் பட்டத்தால் உயர்ந்துசெல்லும் படிகளாக மடிக்கப்பட்டிருந்தது. இவற்றில் நான்கு சட்டம் காணப்பட்டது. இந்தச் சட்டங்களை

நிறுத்தி குறுக்கே பலகைகளைப் போட்டுவிட்டால் படிப்படியாய் கலரி அமைந்துவிடும். இப் பொருட்கள் யாவும் குருநகர் புனித யாகப்பர் ஆண்கள் பாடசாலை (தற்போது பெண்கள் பாடசாலை) மண்டபத்திற்கு பொருத்தமானதாகவே இருந்ததை அவதானிக்க முடிந்தது. திரு இருதய சபையின் பணிமனையும், பாடசாலையும் ஆலய வளவில் இருந்ததினால் அம்மண்டபத்தையே அவர்கள் பயன்படுத்தியிருக்க வேண்டும். அதற்கேற்றதாகவே அரங்கப் பொருட்களை செய்திருக்கவேண்டும்.

இப் பொருட்களை பயன்படுத்தி சில மன்றங்கள் குருநகர் புனித யாகப்பர் பெண்கள் பாடசாலை மண்டபத்தில் பல நாடகங்கள் மேடையேற்றியதை நான் அறிவேன். திரு இருதய சபையினர் இளவயதினரையும், பெரியோரையும் கருத்தில் கொண்டு 01.04.1945ல் ஒரு கட்டிடத்தை சிரமதானம் மூலம் கட்டி அதில் வாசிகசாலையையும், இரவல் கொடுக்கும் பகுதியையும் நிறுவி செயல்படுத்தியுள்ளார்கள்.

## 2. கார்மல் மாதா கூட்டம் - 1906

கத்தோலிக்க சமய தொண்டிற்காக, வண. ஹென்றி யூலன் ஆண்டகையின அனுமதியுடன் 1906ல் உருவாக்கப்பட்டது கார்மல் மாதா கூட்டம். கலை வளர்ச்சிக்கு மிகவும் தொண்டாற்றி வந்திக்கின்றது என்பதை, அங்கு காணப்பட்ட அரங்கப் பொருட்கள் சான்று பகர்கின்றன. கார்மேல் மாதா கூட்டத்திற்காக பெரியதொரு மண்டபம் 1913ல் கட்டிமுடிக்கப்பட்டுத் திறக்கப்பட்டது. ஆண்டுக் குறிப்பை மண்டப முகப்பில் காணக்கூடியதாக இருக்கின்றது. இக் கூட்டத்தில் கலையை வளர்ப்பதற்கென கார்மேல் மாமரி சபா, கீதா வாக்கிய சபா போன்றவை இயங்கி வந்துள்ளன.

இம் மண்டபத்தில் சவிரியப்பர் பாடசாலை நடத்தப்பட்டுள்ளது. தற்காலிக தும்பு, கைப்பணித் தொழிற்சாலை, தற்காலிக வைத்தியசாலை, தையல் நிலையம் போன்றவையும் காலத்துக்குக்காலம் நடாத்தப்பட்டுள்ளது. நான் அறிந்த காலத்தில் அம் மண்டபத்தில் முன்னர் மேடைக்காகப் பயன்படுத்தப்பட்ட 10அடி நீளமும், 5 அடி அகலமும் கொண்டதான பல மேசைகள், வீதி, அரண்மனை, காடு, பட்டினம், மறியற்சாலை, குகை போன்றவை சித்திரங்களாக வரையப்பட்ட திரைச்சீலைகள், திரைச்சீலைகளுக்குப் பயன்படுத்தப்படும் நீண்ட உருண்டையான பனஞ் சிலாகைகள், கப்பிகள், ஏணிகள் போன்றவையும், மேடையின் இருமருங்கும் கட்டப்படும் தட்டிகள், கூத்துக்களுக்கு அரசர் மற்றையோர் மேற் சட்டையாகப் பயன்படுத்தப்படும் மணி உடுப்புகள், அரண்மனைப் படிகள் போன்றவற்றைக் கண்டிருக்கிறேன். அவற்றில் சேதமடையாதவற்றை பயன்படுத்தி "ஞானசௌந்தரி" இசை நாடகம் (1964) மேடையேற்றியதை அறிவேன். (எனக்கும் சிறிய பாத்திரத்தில் நடிக்கக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது.)

கார்மல் கூட்டத்தால் ஆரம்பகாலம் முதலே கூத்துக்கள், நாடகங்கள் மேடையேற்றப்பட்டு வந்துள்ளது. அவைகளாவன, திருஞானதீபன் (1923), இதற்கு முன்னைய கூத்துக்களின் விபரம் அறியமுடியவில்லை. மேலும் ஞானசௌந்தரி யூதகுமாரன், பரமார்த்தகுரு, பாவசங்கீர்த்தன இராச்சியப் பலி, செனகப்பு, குணசீலன், கற்பலங்காரி, அலங்கார ரூபன், உடைபடா முத்திரை, அருள்மணி, அபயசீலி ஞானசௌந்தரி (இசை நாடகம்), பபியோலாவின் பரிசுத்த காதல் (இசை நாடகம்), விந்திய வீரன் (நாடகம்), தர்மப்பிரகாசம், சங்கிலியன், உத்தரியத்தின் மகிமை போன்றவற்றை மேடையேற்றி உள்ளதாக அறிந்தேன் இவை முற்றுப்பெற்ற தரவுகளல்ல. தற்போது கார்மல் மண்டபம் முற்றாகப் புனரமைக்கப் பட்டுக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## 3. திருப்பாலத்துவ சபை - 1912

கத்தோலிக்க சமய சார்பான அமைப்பாக உருவாகினாலும், காலத்தின் தேவையினால் நாடகத்துறையையும் தமது நோக்கோடு இணைத்துக் கொண்டார்கள். 1912 இல் ஆரம்பிக்கப்பட்ட திருப்பாலத்துவ சபையை எடுத்துக்கொண்டால் அதில் அங்கம் வகிப்பவர்கள் ஆலயத்தில் நடைபெறும் பூசைப்பலியில் பணியாற்ற வேண்டியவர்களாக இருந்தார்கள். இதனால் லத்தீன் மொழியைப் படிக்கவேண்டிய தேவை அவர்களுக்கு இருந்தது. லத்தீன் மொழியைக் கற்பதற்கு ஆங்கில அறிவும் அவசியமாகப்பட்டது.

அந்த வகையில் திருப்பாலத்துவ சபையைச் சார்ந்தவர்கள் தகமை உடையவர்களாகவும், சமூகத்தில் புதிய தலைமைத்துவத்தையும், ஆளுமையையும் கொண்டவர்களாகவும் இருந்தார்கள். இதனால் பலவற்றை அவர்களால் சாதிக்கக் கூடியதாக இருந்தது எனலாம்.

திருப்பாலத்துவ சபையினால் ஞானசௌந்தரி (இசைநாடகம்) (1949) சுசில்டா, அகந்தையால் உருக்குலைந்தவன், கலைக்கோவில், தந்தை எங்கே, தேன் விருந்து, பவுண் பாத்திரம். (ஏனைய நாடகத் தரவுகள் கிடைக்கப்பெறவில்லை) ஆகிய நாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ளன.

## 4. குருநகர் சனசமூக நிலையம் - 1948

பத்திரிகைகளையோ, சஞ்சிகைகளையோ, புத்தகங்களையோ கொள்வனவு செய்து வீட்டில் வாசிப்பதற்கேற்ற வசதிகளற்ற காலகட்டத்தில் குருநகர் மக்களின் கலை, இலக்கிய வளர்ச்சிக்கென 1948 இல் உருவாக்கப்பட்டது குருநகர் சனசமூக நிலையம். 1960 இல் நிரந்தர கட்டிடம் கட்டப்பட்டு நூல்கள் இரவல் கொடுக்கும் பகுதி ஆரம்பிக்கப்பட்டது. வானொலி நிகழ்ச்சிகளை மக்கள் கேட்பதற்கு ஏற்றவாறு நூல்நிலையத்திற்கு அருகாமையில் சிறிய கோபுரம் அமைக்கப்பட்டிருந்தது. அக் கோபுரத்தில் வானொலிப் பெட்டி வைக்கப்பட்டிருக்கும். தினமும் வானொலியைக் கேட்டு மக்கள் பயனடைந்தனர்.

சராசரி நூறு மக்களுக்குமேல் தினமும் வாசித்துச் செல்கிறார்கள். அமைதியற்ற சூழல் நிலவிய காலகட்டத்தில் பெருந் திரளாக மக்கள் வந்துசென்றதாக அறியக்கூடியதாக இருக்கின்றது. சனசமூக நிலையத்தால் சுகாதார விழாக்கள் நடத்தப்படுவதுடன் ஆண்டுதோறும் விளையாட்டுப் போட்டிகள், கவிதை, கட்டுரை, நாடகப் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளது. அசம்பாவிதங்களினால் நூல்கள் யாவும் அபகரிக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட நூல்நிலையத்திற்கு தற்போது புதிய நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட ரீதியில் சனசமூகங்களுக்கிடையே நடத்தப்படும் கலைப் போட்டிகளில் கலந்துகொள்ளத் தவறுவதில்லை. 98ம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் இருவர் தங்கப்பதக்கம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இது தவிர பல போட்டிகளில் முன்னிலைப் பரிசில்களைப் பெற்றுள்ளார்கள். கலை, இலக்கியவாதிகள் பலர் குருநகர் சனசமூக நிலையத்தை நினைவுகூரத் தவறுவதில்லை.

## 5. குருநகர் நாடக மன்றம் - 1955

முதன்முதல் நாடக ஆற்றுகையையே இலக்காகக்கொண்டு ஆரம்பிக்கப் பட்டது குருநகர் நாடக மன்றம் ஆகும். இம் மன்றம் 1955இல் ஆரம்பிக்கப்பட்டது. நாடகத் துறைக்கு பல நடிகர்களை உருவாக்கிய பெருமை இம் மன்றத்தையே சாரும். முதுபெரும் நடிகர்களைத் தன்னுள் கொண்டதாக விளங்கிய குருநகர் நாடக

மன்றத்தின் ஆரம்ப தரவுகளைப் பெறமுடியா விட்டாலும், மன்றத்தால் மேடையேற்றப்பட்ட சில நாடகங்களை அறிய முடிந்தது. அவைகளாவன:

நிராசை, குறுஞ்சிமலர், மனோன்மணி, குமணன், யூலியஸ்சீசர், சாம்ராட் அசோகன், கட்டப்பொம்மன், சாக்கிரடீஸ், சேரன் செங்குட்டுவன், குற்றவாளிக் கூண்டிலே, அருளப்பர், துளிவிஷம், மலைமேற்கொலை, தியாகி, ஏழையின் கண்ணீர் போன்றவையாகும்.

இவற்றில் "அருளப்பர்" இசை நாடகமாகும். ஏழையின் கண்ணீர் நாடகம் நாடகப் போட்டியில் முதற் பரிசு பெற்றதுடன், சிறந்த நடிகராக அமரர் ம. விக்ரர் தேர்வு செய்யப்பட்டார். கார்மேல் மண்டபத்தில் இவர்களால் பல நாடகங்கள் மேடையேற்றப்பட்டதாக அறியக்கூடியதாக இருக்கின்றது.

## 6. குருநகர் நாட்டுக்கூத்து மன்றம் - 1958

பாரம்பரிய நாட்டுக்கூத்துகளை அழியாது காப்பதற்கும், வளர்ப்பதற்குமென 1958ல் உருவாக்கப்பட்டது குருநகர் நாட்டுக்கூத்து மன்றம். அரிய பல நாட்டுக் கூத்துக்களை ஆரம்பமுதலே மேடையேற்றிய இம்மன்றம் நாட்டின் அமைதியற்ற சூழலினால் சில ஆண்டுகள் செயலிழந்து காணப்பட்டது. பின்னர் 1992ல் மீண்டும் புனரமைக்கப்பட்டு செயற்படத் தொடங்கியுள்ளது.

குருநகர் நாட்டுக்கூத்து மன்றத்தால் ஞானசீலி (1958) எஸ்தாக்கியார், கருங்குயில் குன்றத்துக்கொலை, அந்தோனியார், மெய்காப்போன் தன்கடமை, சங்கிலியன், வரதமனோகரி, நொண்டி, போருக்குப்பின், வீரமாதேவி, வேளாங்கன்னி, மனம்போல் மாங்கல்யம், பங்கிராசா, ஜெனோவா, சுபத்திரா, அக்கினேசு கன்னி, கண்டியரசன், மரிசிலியன், துன்பத்தின்பின், வாழ்க்கைப்புயல், புரட்சித்துறவி, போர்க்களம், அமலமரித்தியாகிகள், யூதகுமாரன், செந்தூது, மலைமேற் கொலை, பண்டார வன்னியன், தியாக இராகம், நந்திவர்மன், மூவிராசாக்கள், ஆகிய நாட்டுக்கூத்துக்கள் மேடையேற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

விழா மேடையில் சிறந்த சமூக கலைத்தொண்டர்களான இ. டோறஸ், அ. மத்தியாஸ், சுதி மரியான் ஆகியோர் கௌரவிக்கப்பட்டுள்ளார்கள்.

## 7. கலைக்கழகம் - 1960

குருநகர் மக்களிடையே கலைகளை வளர்த்து, அறிவைப் பெருக்கி, ஆக்க முயற்சிகளில் அவர்களை முன்னேற்றி, நல்வாழ்வு வாழ வழிவகுக்க வேண்டும். என்ற நோக்கத்தைக் கொண்டதாய் 1960ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது குருநகர் கலைக்கழகம். இக் கழகத்தினால் 1962ல் உருவாக்கப்பட்ட கடற் சாரணர் இயக்கம் இன்றுவரை பல் சேவையாற்றி இயங்கிக் கொண்டிருக்கின்றது.

யாழ் பிரதேச கலாமன்றம், சர்வதேச சிரமதான இயக்கம், இலங்கைக் கலைக்கழகம், இலங்கைக் கயரோக நிவாரண சங்கம் ஆகியவற்றில் குருநகர் கலைக்கழகம் அங்கம் வகித்தது.

ஆண்டுதோறும் கலைவிழாக்கள், கலைப்போட்டிகள், கலைக் காட்சிகளையும் விளையாட்டுப் போட்டிகளையும் நடத்தியுள்ளது. அத்துடன் இரவுப் பாடசாலை, க.பொ.த. துரிதகதி பாடபோதனை வகுப்புகள், சித்திர வகுப்புகள் போன்றவற்றை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்க செயற்பாடுகளாகும். 1966இல் கலைவிழா மலரும், 1971இல் ஆண்டு நிறைவு மலரும் வெளியிடப்பட்டுள்ளது. கலைக்கழகத்தினால் றெட்இன்டியன்ஸ், யம்போறி றெய்லர், நவீன ஒப்பறேஷன் ஆகிய நகைச்சுவை நாடகங்களை மேடையேற்றப்பட்டுள்ளன.

கலைக்கதிர் மன்றத்தின் 5வது ஆண்டுவிழா மலரில், மலர் அமைப்பாளர் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "எமது மன்ற வளர்ச்சியில் முக்கிய பங்கு கலைக்கழகத்தையே சாரும். அவர்கள் எம்மை ஆற்றுப்படுத்திய தன்மை சிறந்ததால்தான் எம் ஆற்றல் சுயம்புடன் பீறிட்டுப் பாரிய சாதனை புரிந்தது. சாதனையின் சங்கமத்தால் கலை—இலக்கிய களத்தில் பலதரப்பட்ட வளரும் தலைமுறை எம் மத்தியில் இன்று உருவாகி- போராளியாகி இலங்கையின் கலை, இலக்கிய வளர்ச்சிக் கட்டத்தில் முக்கிய பங்கினை வகிக்கிறார்கள்".

## 8. ஒலிம்பிக் கழகம் - 1960

நாடக அரங்கேற்றத்தையே நோக்காகக்கொண்டு 1960ல் ஆரம்பிக்கப் பட்டதுதான் ஒலிம்பிக் கழகம். 1960ல் குருநகர் கலைக்கழகம் நடத்திய நாடகப்போட்டியில் ஒலிப்பிக் கழகத்தின் கண் திறந்தது எனும் நாடகம் முதற் பரிசு பெற்றதுடன், சிறந்த நடிகருக்கான பரிசு கி. யேசுராசா அவர்களுக்குக் கிடைத்தது.

குடாநாட்டின் பல்வேறு மேடைகளில் 25 தடவைகளுக்கு மேல் மேடையேற்றப்பட்ட இந் நாடகம் பல போட்டிகளில் முதற் பரிசுகளைப் பெற்றதுடன், வல்வெட்டித்துறையில் நடைபெற்ற கலைவிழா - நாடகப் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இக் கழகத்தின் நிர்வாகிகள் பல நாடக மன்றங்களின் நாடகங்கள் மேடையேற்றுவதற்குப் பல்வேறு வழிகளில் துணை புரிந்துள்ளார்கள்.

## 9. குருநகர் றெக்களமேசன் சனசமூக நிலையம் - 1964

குருநகர் சனசமூக நிலையத்தில் ஏற்பட்டிருந்த நெரிசலைக் கருத்தில் கொண்டு றெக்களமேசன் பகுதி மக்களின் கலை, இலக்கிய வளர்ச்சிக்காக குருநகர் றெக்களமேசன் சனசமூக நிலையம் 1964இல் உருவாக்கப்பட்டது. 1963ம் ஆண்டு அத்திவாரமிடப்பட்ட சனசமூக நிலையத்தின் கட்டிட நிதிக்காக "சிங்கமலைக் கள்வன்" எனும் நாடகம் 1963 இல் மேடையேற்றப்பட்டது. தொடர்ந்து மனிதன் மாறிவிட்டான், எங்கே நிம்மதி போன்ற நாடகங்களை மேடையேற்றியுள்ளார்கள்.

ஆண்டுதோறும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது. அந் நிகழ்ச்சிகளில் நடனம், நாடகம், பட்டிமன்றம், பொது அறிவுப்போட்டி போன்றவை இடம்பெறுவதுடன், கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டுள்ளார்கள்.

பலதரப்பட்ட நூல்கள், பத்திரிகைகளைக் கொண்டு மக்களின் அறிவுப் பசியைப் போக்க முனைந்த சனசமூக நிலையம் 1970இல் நூல்கள் இரவல் கொடுக்கும் பகுதியை ஆரம்பித்து கலை, இலக்கியப் பணியை மேம்படுத்தினர்.

## 10. யுத் கிளப் - 1965

விளையாட்டு மன்றமாக 1965இல் பதிவுசெய்யப்பட்டது யுத் கிளப் ஆகும். ஆனால் ஆரம்ப காலம்தொட்டே நாடக ஆற்றுகைகளில் அக்கறை காட்டியுள்ளார்கள். முற்றிலும் இளைஞர்களைக் கொண்ட இக் கழகத்தினால் பின்வரும் நாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ளது.

திருந்திய உள்ளம், மலர்ந்த ரோஜா, பொறுமையின் எல்லை, சுகம் எங்கே, ஒதெல்லோ போன்றவைகளாகும். இவற்றில் நாடகப் போட்டிகளில் திருந்திய உள்ளம் 2ம் இடத்தையும், பொறுமையின் எல்லை, சுகம் எங்கே ஆகியவை 3ம் இடங்களையும் பெற்றது. பெண் பாத்திரமேற்ற நடிகரான அமரர் பி. பி. மரியதாஸ் அவர்கள் இரண்டு நாடகங்களில் பெண் நடிகருக்கான 2ம் இடங்களைப் பெற்றுள்ளார்.

## 11. நெய்தல் வளர்பிறை மன்றம் - 1967

சமூக முன்னேற்றம் காண நாடகம், கலைத்துறை, கல்வி, விளையாட்டு போன்றவற்றை, வளர்ப்பதற்கும் ஊக்குவிற்பதற்குமென 1967இல் நெய்தல் வளர்பிறை மன்றம் உருவாக்கப்பட்டது. இவர்களினால் விளையாட்டுப் போட்டிகளுடன் கலைப் போட்டிகளும் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நெய்தல் வளர்பிறை மன்றமானது தனது ஆரம்பத்திலேயே நாடகத்தை மேடையேற்றியதன் முலம் அறிமுகமானது. இவர்களால் பின்வரும் நாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ளன. இதயக் குமுறல், அண்ணன் காட்டிய வழி, நீதி சாவதில்லை, காவியம் பிறந்தது, வள்ளல் பாரி, நானே கடவுள், சந்தி சிரிக்கின்றது, அமரதீபம், நெஞ்சினலைகள், சாய்ந்த சாணக்கியம், பிராயச்சித்தம், இதுதானா முடிவு.

இவற்றில் காவியம் பிறந்தது சிறந்த நாடகமாக தேர்வுசெய்யப்பட, சிறந்த நடிகராக திரு. ச. ஜேம்ஸ் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார். அண்ணன் காட்டிய வழி இரண்டாவது சிறந்த நாடகமாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது. நெய்தல் என்ற பெயரில் தமது 4வது ஆண்டு நிறைவு மலரை 1971இல் வெகு சிறப்பாக வெளியிட்டிருக் கின்றார்கள்.

## 12. சிம்லாஸ் கம்பைன்ஸ் - 1967

1962ல் நாடக அரங்கேற்றத்தையே நோக்காகக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. சிம்லாஸ் கம்பைன்ஸ் நாடக மன்றத்தால் இடிந்தகோவில் எனும் நாடகம் யாழ். மாநகரசபை மண்டபத்தில் 1967ம் ஆண்டு மேடையேற்றப்பட்டது. பின்னர் இதன் வளர்ச்சியை காணமுடியவில்லை.

## 13. கலைக்கதிர் நாடக மன்றம் - 1967

கலையை வளர்ப்பதற்கும், நாடக ஆற்றுகைகளை மேற்கொள்வதற்கும் என 1967ல் கலைக்கதிர் நாடகமன்றம் ஆரம்பமானது. கலைக்கதிர் மன்றத்தினால் ஐந்தாவது ஆண்டு விழா நடத்தப்பட்டது. அதில் யாழ். மாவட்ட ரீதியில் சிறுகதை, கவிதை, நாடகப் போட்டிகள் நடத்தப்பட்டது.

குறைந்த அங்கத்தவர்களைக் கொண்ட இம் மன்றத்தால் அனார்க்கலி, சண்டியன் சரவணண், காணாத தூரம், மனிதத் தெய்வம், இறைவன் எங்கே, கொலைகாரன், ஒரு துளி, போராடும் நெஞ்சம், உணர்வு பிறந்தது, மனைவி, யேசுநாதர் பேசினார், பட்டமரம் ஆகிய நாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ளது. இவற்றில் "யேசுநாதர் பேசினார்" எனும் நாடகம் முதற் பரிசு பெற்றதாகும். 1972 இல் மன்றத்தின் 5வது ஆண்டு நிறைவு மலர் வெளியிடப்பட்டுள்ளது.

## 14. இள்ளஞர் கலைக்கழகம் - 1968

கலையைப் பல நிலைகளிலிருந்தும் வளர்த்தெடுக்கும் நோக்குடன், குருநகர் கலைக்கழகத்தினால் 1968ல் உருவாக்கப்பட்டது இளைஞர் கலைக்கழகம். இவற்றின் செயற்பாடுகளாக நாடக ஆற்றுகை, சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், தையல் நிலையம், நூல் இரவல் கொடுத்தல், இரவுப் பாடசாலை, மாதாந்த அன்பர் அரங்கம், பட்டிமன்றம் போன்றவற்றை நடாத்தி வந்துள்ளது.

இளைஞர் கலைக்கழகம் மேடையேற்றிய நாடகங்களாக காகித ஓடம் (1968) கலையின் பரிசு, மதுவே இன்பம், உயிர் கொடுத்த உத்தமன், விதியின் கரம், கொடுமை கொடுத்த கொலு, அணை கடந்த வெள்ளம், புவலயம் புகுந்த புனிதன்,

மெழுகுவர்த்தி, நாடக வேதசாட்சி, கருமேகம், படைவெட்டு, றோசாமலர், களம் தந்த களங்கம், கண்ணீர், இடையர் காட்சி, ஆணையின் ஆட்சி, நீதி சாவதில்லை, அணையாதீபம், யார் கிறிஸ்து?, தண்டனை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவற்றில் மெழுகுவர்த்தி (1971) சிறந்த நாடகமாகவும், சிறந்த பெண்பாத்திரத்திற்குரிய நடிகராக அ. மரியதாஸ், சிறந்த வசனகர்த்தாவாக கு. இராயப்பு ஆகியோர் தேர்வுசெய்யப்பட்டனர். றோசாமலர் (1972) இரண்டாவது பரிசைப் பெற்றது. கண்ணீர் (1974) சிறந்த நாடகமாகவும், சிறந்த பெண் பாத்திரத்திற்குரிய நடிகராக அ. மரியதாஸ், சிறந்த நடிகராக டெ. அன்ரனி (சூரி) தேர்வுசெய்யப்பட்டனர். நீதி சாவதில்லை (1975) சிறந்த நாடகமாகத் தேர்வுசெய்யப்பட்டது.

1968இல் "உலகின்ஒளி" எனும் தொகுப்பு இதழ் வெளியிடப்பட்டது. 2002ல் இறையியலும், சமூகவியலும் இணைந்ததாக "கலையார்வன்" ஆல் எழுதப்பட்ட பாடல்களடங்கிய ஒலிப்பேழை (CD) "யாகப்பரே எங்கள் காவலரே" எனும் பெயரில் வெளியிடப்பட்டது. "தண்டனை" நாடகத்தை சின்னத்திரை வீடியோ படமாக வெளியிடுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி, பாதி நிறைவேறிய நிலையில் தவிர்க்கமுடியாத காரணங்களால் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் நடைபெறுகின்ற இளைஞர் கலைக்கழக விழாக்களில் குருநகர் கலைஞர்கள் இனங்காணப்பட்டு கௌரவிக்கப்பட்டு வந்துள்ளார்கள். கௌரவிக்கப்பட்ட கலைஞர்கள் விபரம் வருமாறு,

அண்ணாவி பக்கிரி சின்னத்துரை, அண்ணாவி சிலுவை, அண்ணாவி கிறிஸ்தோத்திரம், அண்ணாவி றோ. துரைவீரன், அண்ணாவி சுவாமிநாதன், அண்ணாவி ஏசா சின்னத்துரை, கலைஞர்கள் கோளாறு ஜேம்ஸ், மனவல்தம்பி, அலெக்ஸ்சாண்டர், யோண் கிளைவ், லியோ, த. பிலிப், கி. யேசுராசா, தாசன், மிருதங்க வித்துவான் த. பாக்கியநாதன், சவிரியான் (மேளம்), கவிஞர் பி. மிக்கேல்பிள்ளை, ஆகியோராவர்

## 15. இளம்பரிதி நாடக மன்றம் - 1970

நாடக ஆற்றுகையை முக்கிய நோக்காகவும் கொண்டு, சிறுகதை, கட்டுரை, கவிதைகள் போன்ற ஆக்கங்களை உருவாக்குவதற்குமாக 1970இல் உருவானது. இளம்பரிதி நாடக மன்றத்தினால் ஊனக்கண், சாக்கிரடீஸ், ஒருவனுக்கு ஒருத்தி, சேரன் செங்குட்டுவன், தாகம், கெலன், முள், சாணக்கிய சபதம், வாழ்க்கை அழைக்கிறது, மெழுகுவர்த்தி, பூலோகம் போன ஜமன் போன்ற நாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ளது.

குருநகரில் இருந்த இசைக் கலைஞர்களையும், அவர்கள் கையாளும் வாத்தியங்களை மட்டும் கொண்டு இசை நிகழ்ச்சி இவர்களால் நடத்தப்பட்டது. இளம்பரிதி நாடக மன்றத்தின் ஆரம்பத்திற்கும், வளர்ச்சிக்கும் கலாநிதி நீ. மரியசேவியர் அடிகள் உந்துசக்தியாக இருந்தார் என செயலாளர் யோ. மரியாம்பிள்ளை குறிப்பிடுகின்றார்.

## 16. செந்தமிழ் மன்றம் - 1971

1971ல் ஆரம்பிக்கப்பட்ட செந்தமிழ் மன்றம், நாடக அரங்கேற்றம், நாடகப் பயிற்சிப் பட்டறைகளை நடத்தும் நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டது. செந்தமிழ் மன்றத்தால் வீரமாநகர் எனும் நாடகம் குருநகர் கலையரங்கில் மேடையேற்றப்பட்டது. பல மன்றங்கள் நாடகங்களை மேடையேற்றுவதற்கு ஒத்தாசை வழங்கியுள்ளது.

1974ல் நடைபெற்ற அனைத்துலக தமிழாராச்சி மகாநாட்டின்போது குருநகரில்

இருந்து மேடையேற்றப்பட்ட ஒரேயொரு நாடகம் "வீரமாநகர்" என்பது குறிப்பிடத் தக்கது.

## 17. குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி - 1971

குருநகர் கலைக்கழகத்தின் முயற்சியினால் குருநகரில் இயங்கிய அனைத்துத் துறைகளையும் சார்ந்த அமைப்புகளின் இணைப்பாக, 1971ல் உருவாக்கப்பட்டது குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியாகும். இம் முன்னணிக்குரிய பிரதிநிதிகளாக ஒவ்வொரு அமைப்புகளிலிருந்தும் இருவர் தேர்வு செய்யப்படுவர். இவ்வாறு தேர்வு செய்யப்பட்டவர்களே முன்னணியின் பொதுச்சபையாகும். அவர்களிலிருந்து செயல் உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். குருநகரின் அனைத்து நிலைகளையும், தேவைகளையும் கண்காணித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதும், மக்களை வழிநடத்துவதும் முன்னணியின் பாரிய பொறுப்பாகும்.

குருநகர் கலையரங்கம் முன்னணியின் நிர்வாகத்திலேயே இருக்கின்றது. 1972ல் நடைபெற்ற கலையரங்க திறப்பு விழாவின்போது மூன்று நாட்கள் தொடர்ந்து பலதரப்பட்ட கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதனையொட்டி திறப்புவிழா மலரும் வெளியிடப்பட்டது. முன்யோசனையுடன் கலையரங்கம் அமைத்ததனால் பல நாடக மன்றங்கள் வளர்வதற்குரிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது எனலாம். 1986இல் முன்னணியினால் யூதகுமாரன் எனும் நாட்டுக்கூத்து மேடையேற்றப்பட்டுள்ளது.

1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 4வது அனைத்துலக தமிழாராச்சி மகாநாட்டு நிகழ்வுகளில் ஒரேயோரு ஞாபகார்த்த சிலையாக சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களது உருவச்சிலை வைக்கப்பட்டது. அதுவும் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் அவர்களின் பிரசன்னத்தில் குருநகரில்தான் வைக்கப்பட்டது என்பதை பெருமையுடன் இன்றும் பலர் நினைவுகூர்வார்கள். இதனை ஏற்பாடு செய்தது குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியேயாகும். இந்தச் சிலையை உருவாக்கியவர் குருநகர் சிற்பி கிறிஸ்ரி அவர்களாகும்.

## 18. நடன நல்லிசைக் கலாமன்றம் - 1973

1973ம் ஆண்டில் இசைத் துறையையே இலக்காகக்கொண்டு நடன நல்லிசைக் கலாமன்றம் தோற்றம் பெற்றது. இசைத் துறையை வளர்ப்பதற்காக இம் மன்றத்தினால் இசைக் கல்லூரி நடத்தப்பட்டது. இவ் இசைக் கல்லூரியில் வாய்ப்பாட்டு, நடனம் (கதகளி, பரதம்), வீணை, வயலின், மிருதங்கம் போன்ற வகுப்புகள் நடைபெற்றது. ஆண்டுதோறும் சகல வகுப்புகளிலும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கல்வி கற்று வந்துள்ளார்கள்.

இசைக் கல்லூரி மாணவர்கள் வட இலங்கை சங்கீதசபையினால் நடத்தப்படும் பரீட்சைகளில் பங்குபற்றி பல திறமைச் சித்திகளை அடைந்துள்ளார்கள். இதற்குரிய ஆதாரமாக 1989ம் ஆண்டு வெளியான மிருதங்க அரங்கேற்ற வெளியீட்டு நூலில் உள்ள குறிப்பில் 33 மாணவர்கள் தோற்றிய வீணை, மிருதங்க பரீட்சையில் 29 மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள். அதல் 19 மாணவர்கள் திறமைச் சித்தி அடைந்துள்ளார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்சியாக 15 ஆண்டுகள் நடைபெற்ற ஆண்டு விழாக்களில் இசைப் போட்டிகள் நடாத்தப்பட்டன. ஒவ்வொரு துறைசார்ந்த இசைக் கல்லூரி மாணவர்களின் திறமைகள் அவ்விழாவில் வெளிக்கொணரப்படும். அத்துடன் இசைக் கல்லூரியில் படித்து முடித்து வெளியேறும் சித்தியடைந்த மாணவர்களுக்கும் சான்றிதழ்கள்

வழங்கப்படும்.

நாட்டின் அமைதியற்ற சூழலாலும், பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த கலை உபகரணங்கள் சூறையாடப் பட்டமையாலும் நடன கல்லூரியை தொடர்ந்து இயக்க முடியாமல்போன நிர்வாகம், மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சியில் இயங்கியுள்ளமை பலரிற்கு சந்தோஷத்தைத் தருகின்றது. அவர்களின் முயற்சி வெற்றிபெற வேண்டுமென்பதே அனைவரினதும் அவாவாகும்.

## 19. யாகப்பர் கலை மன்றம் - 1988

நாடக ஆற்றுகையையே நோக்கமாகக்கொண்டு 1988இல் யாகப்பர் கலை மன்றம் உருவாக்கப்பட்டது. இம் மன்றத்தால் யேசுவின் வரலாற்றை கருவாகக்கொண்ட "பாசப்பலி" எனும் நாடகம் 1989இல் மேடையேற்றப்பட்டது. இந் நாடகமானது வசனங்களின்றி இசை உரையுடன் மட்டுமே மேடையேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. மேடையில் தோன்றும் நடிகர்கள் எவரும் வசனம் பேசமாட்டார்கள் பின்னணியில் இசைக்கப்படும் இசைக்கும், பாடலுக்கும், உரைக்கும் ஏற்ப நடிப்பை வெளிக்காட்டுவார்கள். இது புதியதொரு யுக்தியாகப் பலராலும் பேசப்பட்டது.

இந் நாடகத்தைத் தொடர்ந்து புரட்சித்துறவி, போர்க்களம், வீரமாதேவி, மூவிராசாக்கள் ஆகிய கூத்துக்களை மேடையேற்றியுள்ளார்கள்.

## 20. யோசவ்வாஸ் இளைஞர் மன்றம் - 1994

சமய, சமூக சேவையை முன் நோக்காகக்கொண்டு 1994இல் உருவாக்கப் பட்டது யோசவ்வாஸ் இளைஞர் மன்றம். ஆரம்பிக்கப்பட்ட காலகட்டம் நாட்டுப் பிரச்சினையின் உச்ச காலகட்டமாகையால் அவர்களால் முனைப்பாக எதிலிலும் ஈடுபட முடியவில்லை. 1994இல் "சிதைவின் கானங்கள்" என்னும் ஒலி நாடாவை வெளியிட்டிருக்கிறார்கள். இடம்பெயர்வுகளால் சிதறுண்டு போனவர்கள் மீண்டும் இணைந்து, "பெட்டைமரம்" எனும் நாடகத்தையும், "மனந் திருந்திய மன்னன்" என்னும் நாட்டுக்கூத்தையும் மேடையேற்றியிருக்கிறார்கள்.

### தகவல் - அ

மேலே கொடுக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இதுவரை குருநகரில் இயங்கிய மன்றங்களினால்

| | |
|---|---|
| மேடையேற்றப்பட்ட நாடகங்கள் | : 100 |
| மேடையேற்றப்பட்ட கூத்துக்கள் | : 52 |

என இனங்காணப்பட்டுள்ளது. 1815ம் ஆண்டிற்கு முன்னரே கூத்துக்கள் மேடையேற்றியுள்ளார்கள். அவர்கள் அப்போது ஏதோ ஒரு குழுவாக, மன்றமாக இணைந்துதான் மேடையேற்றி இருப்பார்கள். ஆனால் 1905ம் ஆண்டுக்கு முன்னைய மன்றங்கள், குழுக்கள் பற்றிய விபரமெதுவும் கிடைக்கப் பெறவில்லை. 1905 இற்கும் 1955 இற்கும் இடையிலான காலப்பகுதியின் முழுமைத் தரவுகளையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. குழுமங்களாக அவ்வப்போது மேடையேற்றப்பட்ட நாடகங்கள், கூத்துக்கள் பற்றிய விபரங்களும் இணைக்கப்படவில்லை. அண்ணாவிமார்களின் விபரங்களில் காணப்படுகின்ற அவர்கள் பாடிய கூத்துக்கள் பல மேலே குறிப்பிட்ட மன்றங்களின் குறிப்புகளில் காணப்படவில்லை என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டியிருக்கின்றது.

**தகவல் - ஆ**

இலங்கையின் பல பாகங்களிலும், உலகின் பல நாடுகளிலும் கிளைகளை உருவாக்கி இன, மத, சாகிய வேறுபாடுகளின்றி யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் தனித்துமான மன்றம் “திருமறைக் கலாமன்றம்” ஆகும். இம் மன்றத்தில் ஆரம்ப காலம் முதல் இன்றுவரை குருநகர் கலைஞர்கள் பலர் இணைந்து செயலாற்றுகிறார்கள். ஆக்கங்களிலும், ஆற்றுகைகளிலும், ஆளுமையிலும், ஒத்துழைப்பிலும் தமது மேலான பங்களிப்பை செலுத்தி வந்திருக்கிறார்கள், வருகிறார்கள். வெளிநாடுகளிலுள்ள கிளைகளிலும் இணைந்து செயலாற்றி ஆற்றுகைகளை நடாத்தி வருகிறார்கள்.

1970ம் ஆண்டுமுதல் தொடர்ந்து சில ஆண்டுகள் குருநகர் இளைஞர் கலைக்கழக அங்கத்தவர்கள் அனைருமே இணைந்து பணியாற்றியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இளைஞர் கலைக்கழகத்தின் செயற்பாட்டு மையம் புனித யாகப்பர் ஆலய வளவில் இயங்கியமையாலும், திருமறைக் கலாமன்ற இயக்குனர் அருட்கலாநிதி நீ. மரியசேவியர் அடிகள் பங்குத் தந்தையாக யாகப்பர் ஆலயத்தில் கடமையாற்றியதாலும் இது சாத்தியமாக அமைந்தது எனலாம்.

1971 ஏப்ரல் 4ம் திகதி திருமறைக் கலா மன்றத்தினால் முற்றவெளியில் (தற்போதைய யாழ். துரையப்பா விளையாட்டு மைதானம்) வரலாற்றுப் பெருமைமிக்க திருப்பாடுகளின் காட்சியான “அன்பில் மலர்ந்த அமர காவியம்” 100 யார் நீள மேடையில் 300 கலைஞர்களுடன் மேடை யேற்றப்பட்டது. அன்றுதான் இலங்கை வரலாற்றில் மறக்கமுடியாத சேகுவேரா தாக்குதல் ஆரம்ப நாளாகும். இந்த திருப்பாடுகளின் காட்சிக்கு 70 வீதத்திற்கும் மேலான பங்களிப்பை குருநகர் கலைஞர்களும், மக்களும் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

1971இல் இருந்து குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியின் தலைவர் V.J. கொன்ஸ்ரன்ரைன், செயலாளர் C.M. நெல்சன் உட்பட செயல் உறுப்பினராக செயலாற்றிய பலரும் திருமறைக் கலாமன்றத்தில இணைந்து பகுதி, முழுநேரமாக செயலாற்றத் தொடங்கினார்கள். இதனால் அனைத்து குருநகர் அமைப்புகளினதும் பங்களிப்பு திருமறைக் கலாமன்றத்தை ஏதோவொரு வகையில் சென்றடையத் தொடங்கியது. இவைகளினால் குருநகரின் கலை, இலக்கிய செயற்பாடுகளில் பாரிய வெற்றிடம் காணப்பட்டதை எவரும் மறுத்திட முடியாது. அன்று பலராலும் சுட்டிக்காட்டப்பட்டதை இன்று ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பினும், இன்னும் பலர் உணராதிருப்பது வேடிக்கையானது. அன்று குருநகர் கலைஞர்களால் பாய்ச்சப்பட்ட இரத்தம்தான் இன்றுவரை திருமறைக் கலாமன்றம் பெரும் புகழுடன் நிமிர்ந்து நிற்பதற்கு உறுதுணையாய் இருந்தி ருக்கின்றது என்பது மறைக்கப்பட்ட ஒன்றாகி விட்டது.

திருமறைக் கலாமன்றம் கலை சம்பந்தமான பல்துறைகளையும் உருவாக்கி அவற்றினூடாக கலைப்பணி ஆற்றி வருகின்றார்கள். இம்மன்றம் குருநகருக்கு உட்பட்டாத, எல்லைகளற்ற மன்றமாக இயங்கிடினும், குருநகர் கலைஞர்களின் பங்களிப்பு கணிசமான அளவு இருந்தமை, இயக்குனர் அருட் கலாநிதி நீ மரியசேவியர் அடிகள் பங்குத் தந்தையாக யாகப்பர் ஆலயத்தில் கடமையாற்றிய காலங்களில் (1970-1971) அதுவே பணிமனையாக இருந்தமை போன்றவற்றால் இதனையும் ஒரு பதிவாக உள்வாங்க வேண்டியதாக இருக்கின்றது.

# மாட்சி - 5

## குருநகர் நாடக எழுத்தாளர்கள்.

இணைப்பு - 4 இல் கொடுக்கப்பட்டுள்ள மன்றங்கள் பற்றிய தரவுகளில், இதுவரை குருநகரில் இயங்கியதாக இனங்காணப்பட்ட மன்றங்களினால் 100 நாடகங்கள், 55 கூத்துக்கள் வரை மேடையேற்றப்பட்டுள்ளதாக அறியக்கூடிய தாக இருக்கின்றது இவைகள் முற்றுப் பெற்றவை களல்ல. என்பதற்கான காரணங்களை அங்கே குறிப்பிட்டிருக்கிறேன்.

அங்கே குறிப்பிட்டவாறு 1905 இற்கு முற்பட்ட தகவல்களையும், குருநகரில் இயங்கிய கலை இலக்கிய மன்றங்களினால் மேடையேற்றப் பட்டது என்ற எல்லையையும் தவிர்த்து, நாடகத்தை தனித்து எடுத்து நோக்கும்போது இன்னமும் பல நாடகங்களை, நாடக எழுத்தாளர்களை இங்கே வெளிச்சத்துக்குக் கொண்டுவரக் கூடியதாக இருக்கின்றது.

- ***பாடசாலை வாழ்க்கையில் எழுதப்பட்ட, மேடையேற்றப்பட்ட நாடகங்கள்.***
- ***குருநகர் எழுத்தாளர்களால் எழுதப்பட்டு, குருநகர் தவிர்ந்த ஏனைய ஊர் மன்றங்களினால் மேடையேற்றப்பட்ட நாடகங்கள்.***
- ***பத்திரிகை, சஞ்சிகைகளுக்கு எழுதப்பட்ட நாடகங்கள்.***
- ***மன்றங்களல்லாத குழுமங்களினால் மேடை யேற்றப்பட்ட நாடகங்கள், அவற்றை எழுதியவர்கள்.***

இங்கே குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை நிலைத் தேர்வில், மேடையேற்றப்பட்ட நாடகங்களை யல்ல நாடக எழுத்தாளர்களையும், அவர்களால் எழுதப்பட்ட நாடகங்களையும் மட்டுமே வெளிக் கொண்டுவர முனைகின்றேன். ஏனென்றால் சந்திக்குச் சந்தி, மூலைக்கு மூலை, அகண்ட, ஒடுங்கிய ஒழுங்கைகளில் எல்லாம் பல குழுமங்களால் பல நாடகங்கள் மேடையேற்றப்பட்டதை அறிவேன். அவற்றையெல்லாம் பட்டியலிடுவதோ, வெளிக் கொண்டுவருவதோ இலகுவான காரியமல்ல. மன்றங்கள் தோன்றிய 1905ம் ஆண்டு முதல் இன்றுவரை உருவாகிய பல்வேறு மன்றங்கள். அவைகளினால் மேடையேற்றப்பட்ட நாடகங்கள், இசை நாடகங்கள் போன்றவற்றின் முழுமைத்

தகவல்களை மோப்பம் பிடித்தறிவதும் நிகழக்கூடியதல்ல. இவற்றிற்குரிய நாடக ஆசிரியர் களை இனங்கண்டு கொள்வதும் சாத்தியமில்லாத ஒன்று என்பதையும் அறிவேன்.

இத்தகைய இடர்மிகு நிலையில் நான் எடுத்துக்கொண்டிருக்கும் இந்த முயற்சி பலரைத் திருப்திப்படுத்துமா? என்ற கேள்வியைக் கேட்கத் தோன்றுகின்றது. எப்படியிருப்பினும் காலம் தாழ்த்திய முயற்சி என்பதை யாவரும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். பல சந்ததியர்களுடன் சம்பந்தப்பட்டதொன்று என்றாலும், முடிந்தவரை யிலான சந்ததியினரை வெளிக்கொண்டு வந்தி ருக்கிறேன்.

இலக்கிய வானில் சஞ்சரித்து கவிதை, கட்டுரை, சிறுகதை, குறுங்கதை, பத்தி எழுத்துக்களென பலதரப்பட்ட ஆக்கங்களை எழதிய பலர் குருநகரில் வாழ்ந்திருக்கிறார்கள். தற்போதும் இருக்கிறார்கள். அத்தகையோர்களையும் வெளியில் கொண்டுவர வேண்டுமென்பதும் என் அவா. ஆனால் அதனைச் செய்யக்கூடிய சாதகநிலை எனக்குக் கிடைக்கவில்லை.

1. பெயர் : **V.J. கொன்ஸ்ரன்ரைன்**
முகவரி : 28/1, சென்ஜேம்ஸ் மேற்கு வீதி,
யாழ்ப்பாணம்.

எழுதி மேடையேறிய நாடகங்கள்:

அரசகட்டளை, கலைக்கோவில், தேன்விருந்து, இடிந்த கோவில், வீரமாநகர், கும்பகர்ணன், சர்வாதிகாரி, கண்கள் எங்கே.

எழுதிய நாடகங்கள்:

சேகரின் அதிஷ்ரம். சதுரங்கம், உதிர்ந்த மலர்.

2. பெயர் : **பிரான்சீஸ் மிக்கேல்பிள்ளை**
முகவரி : 2, ஓடக்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

எழுதி மேடையேறிய நாடகங்கள்:

குமணன், குற்றவாளிக் கூண்டிலே, அருளப்பர்,

3. பெயர் : **S.NJ. மரியாம்பிள்ளை.**
முகவரி : 13/6, மத்திய கிழக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

எழுதி மேடையேறிய நாடகங்கள்:

அமரதீபம், ஊனக்கண், தாகம், முள், மெழுகுவர்த்தி, பூலோகம் போன ஜமன், மணப்பெண்

எழுதிய நாடகங்கள்:

இரட்டையர், கனவு பலித்தது

4. பெயர் : **அன்ரன் செபஸ்ரியன் நீலன் (மன்னன்)**
முகவரி : சென் ஜேம்ஸ் மகா வித்தியால வீதி,
யாழ்ப்பாணம்.

எழுதி மேடையேறிய நாடகங்கள்:

மனோன்மணி, துளிவிஷம், ஏழையின் கண்ணீர், இதயக்குமுறல், அண்ணன் காட்டிய வழி, நீதி சாவதில்லை, காவியம் பிறந்தது, வள்ளல் பாரி, நானே கடவுள், சந்தி சிரிக்கின்றது, சாய்ந்த சாணக்கியம், பிராயச்சித்தம், இதுதானா முடிவு

5. பெயர் : **முத்துராசா புஸ்பராஜன்**
முகவரி : 11/3, தண்ணீர்த்தாங்கி 4ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

எழுதி மேடையேறிய நாடகங்கள்:

கெலன், சாணக்கிய சபதம், வாழ்க்கை அழைக்கிறது, நெஞ்சினலைகள்

6. பெயர் : **குருசுமுத்து இராயப்பு**
முகவரி : 28, மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.

எழுதி மேடையேறிய நாடகங்கள்:

ஹம்லெட், தர்மம் தலைகாக்கும், ராஜராஜன், காகித ஓடம், கலையின் பரிசு, மதுவே இன்பம், உயிர் கொடுத்த உத்தமன், விதியின் கரம், கொடுமை கொடுத்த கொலு, அணை கடந்த வெள்ளம், ஜோசவ்வாஸ், கடவுள் இருக்கின்றாரா? புவலயம் புகுந்த புனிதன், மெழுகுவர்த்தி, தீர்ப்பு, கருமேகம், றோசாமலர், களம் தந்த களங்கம், கண்ணீர், இடையர் காட்சி, ஆணையின் ஆட்சி, நீதி சாவதில்லை, அணையாதீபம், யார் கிறிஸ்து?, யார் குற்றவாளி? புதிய பிறப்பு, தண்டனை.

7. பெயர் : **தம்பித்துரை யேசுராசா**
முகவரி : 49/1, மவுண்காமல் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

எழுதி மேடையேறிய நாடகம்:
கள்ளோ காவியமோ.

8. பெயர் : **தம்பித்துரை பாக்கியநாதன்**
முகவரி : 26, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

எழுதி மேடையேறிய நாடகங்கள்:
நிராசை, யூலியஸ் சீசர்.

9. பெயர் : **கி. புவனேந்திரன்**
முகவரி : 17/3, மத்திய கிழக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

எழுதி மேடையேறிய நாடகம்.
குறுஞ்சிமலர்,

10. பெயர் : **ம. சாம் பிரதீபன்**
முகவரி : 28, கொண்டடி வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

எழுதி மேடையேறிய நாடகங்கள்:
நீதியின் இருக்கைகள், விடியலைத் தேடும் வெண்புறாக்கள், ஒளிதேடும் மானுடங்கள், நான் நல்ல நிலமா?, புயலான பூவை, மலையோரக் கருங்குயில்கள், மீன் தங்காத பட்டிகள், இலக்கியம் இட்ட தீ, இருட்டு உருவங்கள், சூரியன்கள் நிலவுகளாக, செந்நீர் கோவணங்கள், உயிர் மூச்சு, அமைதிக்களம்.

எழுதிய நாடகம்.
உன்னை நம்பு

11. பெயர் : **முத்தன் தேவதாஸ்**
முகவரி : 17/1, கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

எழுதி மேடையேறிய நாடகங்கள்:
சண்டியன் சரவணன், இறைவன் எங்கே, கொலைகாரன், போராடும் நெஞ்சம், மனைவி

12. பெயர் : **றோமான் ஜெயரெட்ணசிங்கம் (அன்ரன்)**
முகவரி : 89/8, சென் செபஸ்ரியன் வீதி
குருநகர், யாழ்ப்பாணம்.

எழுதி மேடையேறிய நாடகங்கள்:

திருந்திய உள்ளம், மலர்ந்த ரோஜா, பொறுமையின் எல்லை, சுகம் எங்கே, ஒதெல்லோ

13. பெயர் : **வண. யோ. எ. ஜெயசீலன்**
முகவரி : 6ம் குறுக்குத்தெரு
குருநகர், யாழ்ப்பாணம்.

எழுதி மேடையேறிய நாடகம்:
கடற் குதிரைகள்

14. பெயர் : **சவிரிமுத்து யேசுதாசன் (அரி)**
முகவரி : 10/4, மத்திய கிழக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

எழுதி மேடையேறிய நாடகம்:
சிங்கமலைக் கள்வன்

15. பெயர் : **இராஜசிங்கம் டோறஸ்**
முகவரி : 19, சென் ஜேம்ஸ் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

எழுதி மேடையேறிய நாடகங்கள்:
காசில்டா

16. பெயர் : **யேசுதாசன் இக்னேஷியஸ் (பிரபா)**
முகவரி : 179/1, பாங்ஷால் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

எழுதி மேடையேறிய நாடகங்கள்:
பெட்டை மரம், அம்சாகன் (நவீன வடிவம்)

17. பெயர் : **S.A. அழகராஜா**
முகவரி : 24, கொண்டடி வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

எழுதி மேடையேறிய நாடகங்கள்:

பயணங்கள், நீதி காத்தான் (சிந்துநடை கூத்து), களம் கண்ட காரிகை (இசை நாடகம்), தியாக இராகங்கள் (நாட்டுக்கூத்து) நீதிபதி, கோலங்கள், புத்தகப் பூச்சிகள், உணராத உண்மைகள், சுமை, யாருக்காக, பாசம்.

# இணைப்பு - 6

## குருநகர் இசைக் கலைஞர்கள்.

நாடக, நாட்டுக்கூத்து நடிகர்களாக, எழுத்தாளர்களாக, மட்டுமல்லாமல் சிறந்த இசைக் கலைஞர்களாகவும் குருநரில் பலர் வாழ்ந்திருக்கி றார்கள். அவர்களில் பலர் உள்ளூர் கலைஞர்களாக மட்டுமே இருந்திருக்கிறார்கள். அதனால் எல்லோரையும் இங்கு குறிப்பிட முடியவில்லை. பிரபல்யமாய் வாழ்ந்த கலைஞர்களை மட்டுமே இங்கே குறிப்பிடுகின்றேன்.

பெயர் : **திரு. நீக்கிலாஸ் ஜேம்ஸ்**
(உடக்கன் ஜேம்ஸ்)
முகவரி : தண்ணிர்த்தாங்கி 4ம் குறுக்குத்தெரு
குருநகர். யாழ்ப்பாணம்
பிறப்பு : *16.08.1926*
இறப்பு : *28.10.1990*

கொன்னக்கோல் இசையின் மூலம் இலங்கையிலேயே பிரபல்யமாய் திகழ்ந்தவர் அமரர் ஜேம்ஸ் அவர்களாகும். துணை வாத்தியங்களான மோர்சங், புல்லாங்குழல் போன்றவற்றை மிகத் திறமையாகப் பயன்படுத்துவார். இசை நிகழ்ச்சிகளில் பாடகரையும் குறிப்பிட்ட சில இசை வாத்தியங்களை வாசிப்பவர்களையும் தவிர ஏனையோர் பிரபல்யமாவது குறைவு. இசைக்கு உயிர் கொடுக்கும் வாத்தியங்களை உபயோகிப்போர் புறந்தள்ளப்படுவதும், கவற்சிகரமான வாத்தியங்களை உபயோகிப்பவர் முன்னிலை வகிப்பதையும் நாம் கண்கூடாகக் கண்டிருக்கின்றோம். அத்தகைய வாத்தியக் கலைஞர்களில் ஒருவர்தான் கொன்னக்கோல் இசைக் கலைஞர் அமரர் ஜேம்ஸ் அவர்கள்.

இருநூறுக்கு மேற்பட்ட இசை நிகழ்ச்சிகளில் பங்குகொண்டுள்ள அமரர் ஜேம்ஸ் அவர்களது புல்லாங்குழல் வாசினையைக் கேட்டவர் திரும்பத் திரும்பக் கேட்பதையே விரும்புவர் அத்தகைய இனிமையாய் வாசிக்கக்கூடிய திறமையைக் கொண்டவர். மோர்சங்கினை தமது வாய்க்குள் திணித்து, நாக்கை மடித்துப் பிடித்து, விரல்களால் தட்டி அதன் இசையை வெளியில் கொண்டுவரும் பிரயத்தனத்தைப் பார்க்கும்போது ஆச்சரியமாக இருக்கும். தகுந்த பயிற்சியற்ற சாதாரண ஒருவரால் அதனைச் செய்வது முடியாத காரியமாகும். ஒருதடவை அவரது செய்கையைப் பார்த்த நான் "உங்கள் நாக்கு துண்டாகாதா," என்று கேட்டேன். "நாக்கு துண்டாகவில்லை. ஆரம்பத்தில் பல காயங்கள் உண்டாகி இரத்தம் பாய்ந்ததுண்டு. இப்போது அப்படியில்லை" என்றார் சாதாரணமாக.

இசை வாத்தியங்களைத் திறமையாகக் கையாளுவதைப்போல வர்ண சுண்ணாம்புக் கட்டிகளைக்கொண்டு அழகான சித்திரங்களைச் சுவரில் வரைவார். ஒவ்வொரு சித்திரமும் தத்துரூபமாய், உயிர்த்துடிப்புடன் மிளிர்ந்தை கண்டும், பலர் கூறவும் கேட்டிருக்கிறேன். கூத்துப் பாடகர் சைமன் மிக்கேல் (செம்பர்) அவர்களை

எட்டடுக்கு முடியுடன் அரசன் உடையில் அற்புதமாக வரைந்திருந்தார்.



பெயர் : **திரு. தம்பித்துரை பாக்கியநாதன்**
முகவரி : 26, கடற்கரை வீதி,
குருநகர். யாழ்ப்பாணம்
பிறப்பு : 24.10.1928
இறப்பு : 27.11.1997

மிருதங்கம் வாசிப்பதையே தனது முழுநேர தொழிலாகவும், சேவையாகவும் கொண்டு வாழ்ந்தவர் அமரர் த. பாக்கியநாதன் அவர்கள். 1952–1954 களில் இந்தியாவில் அண்ணாமலை இசை மன்றத்தில் படித்தார். தொடர்ந்து இலங்கையில் ஆசிரியர் இராமநாதனிடம் கல்வி கற்றார். 1955 முதல் இசை விழாக்கள், இசைக் கச்சேரிகள், நடன நிகழ்ச்சிகள் போன்றவற்றிற்கு பக்கவாத்தியமாக மிருதங்கத்தை பயன்படுத்தத் தொடங்கினார்.

முதல்தர வித்துவானாக தேர்வுசெய்யப்பட்ட திரு பாக்கியநாதன் அவர்கள் இலங்கை வானொலியால் ஒலிபரப்பப்பட்ட தாளவாத்தியம், லயஉபநியாசம் நிகழ்ச்சிகளுக்கு 1962 முதல் 1990 வரை மிருதங்கம் வாசித்துள்ளார். இருபத்தைந்தக்கு மேற்பட்ட மாணவர்களை மிருதங்க அரங்கேற்றத்திற்கு தயாரித்த பெருமை இவருக்குரியது.

குருநகர் நடன நல்லிசைக் கலாமன்றத்தின் பொறுப்பாளர்களில் ஒருவராகவும், இதற்குட்பட்ட இசைக்கல்லூரியில் மிருதங்க ஆசியராகவும் பணிபுரிந்துள்ளார். இசைக்கல்லூாயில் இவரிடம் கல்விகற்ற மாணவனான செல்வன் ம. பிரசன்னா (13 வயது) அவர்கள் 17.12.1989ல் மிருதங்க அரங்கேற்றம் செய்வதற்கான "மிருதங்க அரங்கேற்ற விழா மலர்" இனைப் பார்வையிடக்கூடிய சந்தற்பம் எனக்குக் கிடைத்தது. மேலும் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம், இளங் கலைஞர் மன்றம் ஆகியவற்றில் மிருதங்க பாடங்களை நடாத்தியுள்ளார்.

தமது இயலாத நிலையிலும் கதிரையில் இருந்தவண்ணம் முடிந்தவரை கைகளை அசைத்து, அசைத்து பாடங்களை நடத்தியுள்ளார். (இதனைக் கூறும்போது அவர் மனைவியின் கண்ணில் நிர் பனித்ததை அவதானிக்க முடிந்தது) 1994ல் திரு. பொன் சுந்தரலிங்கம் தலைமையிலான கலைஞர் குழு திரு பாக்கியநாதன் அவர்களுக்கு விழாவெடுத்துக் கௌரவித்தது.

இவருடன் இணைந்து இவரது மருமகனான **திரு. ஞா. விஜயன்** அவர்கள் மிருதங்கத்தை வாசித்து வந்திருக்கிறார். அரங்கேற்றம் செய்யாதிருப்பினும் அனைத்து இராகங்களையும் அற்புதமாக வாசிக்கக்கூடியவர். தனித்து பல நிகழ்ச்சிகளுக்கு பக்கவாத்தியமாக மிருதங்கத்தை வாசித்திருக்கிறார்.

தந்தையின் சேவைத்தொடரை தற்போது அவரது மகன் **திரு. பா. கபிலன்** அவர்கள் மேற்கொண்டிருக்கிறார். இவரது வாசனை சற்று வித்தியாசமானது நவீனத்துவ இசையுடன் மிருதங்கத்தை இணைத்து வாசிக்கிறார். இளைஞர் கலைக்கழகத்தால் வெளியீடு செய்யப்பட்ட "யாகப்பரே எங்கள் காவலரே" எனும் இசைத்தட்டுக்குரிய பாடல்களனைத்திற்கும் திரு கபிலன் அவர்களே மிருதங்கம் வாசித்திருந்தார். தமிழீழ கலை பண்பாட்டுக் கழகம் வெளியிட்ட பல இசைத்தட்டுகளுக்கு இவரின் மிருதங்க இசை புதுமெருகூட்டுகிறது. திறமையாக

மிருதங்கத்தை வாசிப்பமைக்காக தமிழீழத் தலைவரிடம் "சிறந்த கலைஞர்" இற்கான தங்க விருது பெற்றுள்ளார்.

பெயர் : **திரு. பத்திநாதர் மகிமைநாதன்**
முகவரி : தண்ணீர்த்தாங்கி வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்
பிறப்பு : 22.08.1942
இறப்பு : 04.01.1999

கிற்றார் வாத்தியத்தை வெகு லாவண்யமாகக் கையாளும் திறமையுள்ளவர் அமரர் ப. மகிமைநாதன் அவர்கள். யாழ்ப்பாணத்தில் இயங்கிய இசைக் குழுக்களில் எல்லாம் பங்காற்றியிருக்கிறார். தற்பெருமை இல்லாதவர். "எல்லாம் மாயைதானா" என்ற பாடலை கிற்றாரில் வாசிக்கும்போது மெய்மறந்து கேட்காதார் இருக்கவே முடியாது. அது அவரின் திறமைக்கோர் எடுத்துக்காட்டாகும்.

1972ல் கலைக்கதிர் நாடக மன்றத்தின் ஐந்தாவது ஆண்டுவிழா மலருக்கு திரு மகிமைநாதன் அவர்கள் வழங்கிய நேர்காணலில், "இது (இசை) எனது மெய். மெய்யான சிந்தனைப் பாய்ச்சலாகும். காலத்தால் தாக்குண்டு சில சீர்கேடான விஷயங்களில் ஈடுபட்டுக்கொண்டு திரிந்த நான், எதேச்சையாக எமது ஊரில் உள்ள சில தோழர்களுடன் இணைந்து "மகிமைநாதன் இசைக்குழு", "குருநகர் இசைக்குழு" போன்ற இசைக் குழுக்களை அமைத்து ஒரு புதிய திருப்பத்தை அடையும் சந்தர்ப்பத்தை நானே ஏற்படுத்திய வேளையில், என்னை வழித்துறைப்படுத்தி பரவலான முறையில் இசையின் பங்கைச் செலுத்துவதற்கு ஒரு முன்னோடியாக, ஆசானாக வந்து வாய்த்தவர் திரு ஏ. டபிள்யூ. நெல்சன் அவர்கள். அவர் மூலமாகவே வெற்றிப்படிகளில் ஏறுகின்றேன்."

என்று கூறியுள்ள அவர் மேலும் 1969ல் பாடற்போட்டியில் முதற்பரிசு பெற்றதாகவும், அறுநூறுக்கும் அதிகமான நிகழ்ச்சிகளில் (1972 வரை) கலந்து கொண்டுள்ளதாகவும் கூறியுள்ளார். தமது இறுதிக்காலம் வரை இசைக் கலைஞனாகவே வாழ்ந்த அவர் மேலும் பல இசைநிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருந்தார். எனப் பலர் கூறுவதைக் கேட்கமுடிந்ததே தவிர அவை பற்றிய தரவுகள் என்னால் பெற முடியவில்லை. இவர் யாழ்ப்பாணத்தில் பிரபல்யமாக விளங்கிய இசைக் குழுக்களான கலாலையா, கண்ணன், அருணா, மண்டலேஸ்வரன் போன்றவற்றின் இசை நிகழ்ச்சிகளில் பங்காற்றியுள்ளார்.

## குருநகரிலிருந்து வெளியான ஒலிநாடா, ஒலிபேழைகள்

| | |
|---|---|
| யாகப்பர் பாடல்கள் | 1990 |
| சிதைவின் கானங்கள் | 1994 |
| யாகப்பரே எங்கள் காவலரே | 2002 |

# மாட்சி - 7

## குருநகர் நாட்டுக்கூத்துச் சிறப்பு

இயலுக்கும் இசைக்கும் முக்கியத்துவம் கொடுத்து நல்ல உயிரோட்டம் நிறைந்த சிந்தனைகளை கதைகள் மூலம் ஆடிக்காட்டும் ஒரு கலைவடிவமே நாட்டுக்கூத்து. எமது தனித்துவமான, பாரம்பரிய கலைவடிவமாக இன்றுவரை நிலைத்து நிற்பதும், அடையாளம் காட்டுவதும் இந்த நாட்டுக்கூத்தேயாகும். பல மட்டங்களில் ஆய்வுகளையும், அரங்கேற்றங்களையும், பாராட்டுதல்களையும், புனரமைப்புகளையும் பெற்று தனித்துவமாய் நடைபோடும் எமது பாரம்பரிய கலையைப் பற்றி கலையரசு சொர்ணலிங்கம், கலைப்புலவர் நவரத்தினம் போன்றவர்களின் வாயிலிருந்து வெளிவந்த வார்த்தைகளென திருமறைக் கலாமன்றத்தின் "கலைமுகம்" (சித்திரை-ஆனி 1992) கலை இதழில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"நாட்டுக்கூத்து வெறும் ஒப்பாரியைப் போன்றது. நாகரீகமற்ற வர்களுக்காகப் படிக்கப்படுவது. கத்தோலிக்க மக்களின் சமயப் பிரசாரசாதனம். குடிகாரர்களின் கூக்குரல்"

கலையை முனைப்பாகவும், தம் பெயரில் முகப்பாகவும் கொண்டவர் களின் உள்ளக்கிடக்கையை உங்களிடமே விட்டுவிட்டுகின்றேன்.

"நாட்டுக்கூத்து" என்று அழைப்பது பிழையானது என்பது ஆய்வாளர் களின் தற்போதைய கருத்தாகும். "முன்பு கூத்துகளே நாடு தழுவிய நாடகமாக இருந்ததால் இதனை நாட்டுக்கூத்து என்று அழைத்தாரில்லை. நாட்டுச் சினிமா, நாட்டு நாடகம், நாட்டு பத்திரிகை என்று அழைப்பதில்லையே" என கலாநிதி மௌனகுரு தனது "பழையதும் புதியதும்" நூலில் கேள்வி எழுப்புகிறார்.

அப்படியானால் இது முன்னர் எவ்வாறு அழைக்கப்பட்டிருக்கும்? முன்னைய கூத்து பிரதிகளிலுள்ள காப்புவிருத்தங்களில் "நாடகம்" என்றே எழுதியிருக்கிறார்கள். ஆகவே "நாடகம்" என்கின்ற பெயரிலேயே அந்த நாட்டுக்கூத்துகள் அளிக்கை செய்யப்பட்டிருக்கிறது. எனவே இப்போதைய நாட்டுக்கூத்து அப்போது நாடகம் என்றே அழைக்கப்பட்டுள்ளது.

நாமறிந்த காலத்தில் நாடகம் என்று சொல்லப்படுகின்ற, பாடல்களற்று வசனங்களை மட்டும் அல்லது மிகக் குறைந்த பாடல்களுடன் கூடிய ஆற்றுகைகள் நாடகம் எனவும், கணிசமான பாடல்களுடன் கூடிய ஆற்றுகைகள் இசைநாடகம் என்கின்ற பெயர்களைச் சூடிக்கொள்ள, பண்டைய நாடகமரபு அதிகமான பாடல்களையும், பாடல்களுக்கேற்ற ஆட்டங்களையும் கொண்டிருந்ததால் "கூத்து" என அழைக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்க வேண்டும்.

நவீன வடிவங்களில், கவர்ச்சிகரமான முறைகளில் புதிய புதிய நாடகங்கள் நகர்ப் புறங்களை அலங்கரிக்க பாரம்பரிய கூத்துகள் புறந்தள்ளப்பட்டு அல்லது தூக்கியெறியப்பட்டு கிராம மக்களின் அளிக்கைகளாக அவர்களுடன் ஒன்றித்துவிட்டதால் "நாட்டுக்கூத்து" என அழைக்கப் பட்டிருக்கலாமெனக் கருதக்கூடியதாக இருக்கின்றது. (அண்ணாவியார் பேக்மன் ஜெயராஜா அவர்கள் திருமறைக் கலாமன்றத்திற்கு அளித்த பேட்டியில் நாட்டுக்கூத்து 1980ல் ஆடியபோது கல்லெறியையும் சந்தித்ததாகக் குறிப்பிட்டிருக்கின்றார்.) "நாட்டுக்கூத்து" என்று அழைப்பது பிழையானது என்பதை

ஏற்றுக்கொண்டாலும் தற்போதும் மக்களால் நாட்டுக்கூத்து என்றே அழைப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. கூடவே தென்மோடி நாட்டுக்கூத்து என்றும் குறிப்பிடப்படுகின்றது. வேறு மோடிக் கூத்துகளின் வரவு பிரித்துணர்த்தும் தேவையை உருவாக்கியுள்ளது போலும்.

குருநகரில் 180 வருடங்களுக்கு மேல் கூத்துக்கள் ஆடப்பட்டுள்ளன. அவைகளைப் பற்றிய முழுமையான தகவல்களையோ, ஆடப்பட்ட நாட்டுக் கூத்தின் சிறப்பியல்புகளையோ அறிந்துகொள்வது கடினமானது என்பதை அனைவரும் அறிவர். குருநகரைச் சேர்ந்த அவுறாம்பிள்ளை என்னும் புலவரால் 1815ம் ஆண்டு ஐந்து கூத்துக்கள் எழுதப்பட்டுள்ளதாக அமரர் மு. வி. ஆசீர்வாதம் அவர்களால் பதிப்பிக்கப்பட்ட 'தேவசகாயம்பிள்ளை' நாட்டுக்கூத்து நூலில் காணக்கூடியதாக இருக்கின்றது. குறிப்பிட்ட அந்த ஆண்டிற்கு முன்னரா அல்லது பின்னரா எழுதப்பட்டவை என்பதை உறுதிபட அறியமுடியாமலும் இருக்கின்றது.

நான் சிறுவனாக இருந்தபோது நாட்டுக்கூத்தை இப்படிச் செய்தோம், அப்படிச்செய்தோம். என்று கண வழிவந்த கதைகளைக் கூறி பல வயோதிபர்கள் பெருமைப்பட்டதை கண்டிருக்கிறேன். ஆனால் அவற்றையெல்லாம் நினைவிலிருந்து மீட்டெடுத்து ஒழுங்கமைக்க முடியாதவனாகவே இருக்கின்றேன். இந்த நிலையையே நான் சந்தித்த பலரிடமும் கண்டேன்.

இருப்பினும் பல வழிகளிலும் பெற்றெடுத்த தகவல்களை பாதுகாத்துக் கொள்வதற்காக உங்களுக்குத் தருகின்றேன்.

- 1913 இல் "சந்தியோகுமையோரின் வாழ்க்கை வரலாறு" அண்ணாவி அந்தோனி (கரடி அந்தோனி) அவர்களால் அரங்கேற்றப்பட்டது.
- 1923 இல் எட்டு அடுக்குகளைக் கொண்ட முடி, முழங்காலுக்குச் சலங்கை, தோள்பட்டைக் கீரிடத்தில் சலங்கை கட்டி அரசன் பாத்திரத்தில் அமரர் சைமன் மிக்கேல் (செம்பர்) ஆடியுள்ளார். (எட்டடுக்கு முடி மிகவும் பாரமானது சாதரணமாக எவராலும் அதனைப் பயன்படுத்த முடியாது. மிக்கேல் அவர்களது முடியுடன் கூடிய இந்தத் தோற்றத்தை அமரர் நீ. ஜேம்ஸ் அவர்கள் தமது வியாபார நிலையத்தில் மிக அழகாக வரைந்திருந்தார். இப்போது வியாபார நிலையத்துடன் சித்திரமும் சேதமாகிவிட்டது.)
- 1934 இல் குருநகரில் தற்போது விளையாட்டு மைதானம் அமைந்துள்ள இடத்தில் கொட்டகை போட்டு வட்டக்களரியில் "படைவெட்டு" கூத்து ஆடப்பட்டது. பகல் இரவு தொடர்ச்சியாக கலைஞர்களால் ஆடப்பட்ட இக் கூத்தில் நாதஸ்வரம் வாசித்தல் மற்றும் யுத்தக் காட்சிகள் போன்றவை நூல்களினால் இயக்கப்படும் பொம்மைகள் மூலம் காட்டப்பட்டுள்ளது.
- 1940இல் குருநகரில் தற்போது விளையாட்டு மைதானம் அமைந்துள்ள இடத்தில் 18அடி அகலமும் 66அடி நீளம்கொண்ட மேடையில் இருபிரிவாக மேடையமைத்து நாட்டுக்கூத்து ஆடப்பட்டது.
- 1957இல் குருநகரில் தற்போது பகல் பாலர் விடுதி அமைந்துள்ள இடத்தில் கொட்டகை போட்டு "மீகாமன்" ஆட்ட நாட்டுக்கூத்து கரப்பு உடுப்பு, கெருடம் வைத்து வட்டக்களரியில் ஆடப்பட்டுள்ளது.

- 1961இல் 12 வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமியரை மட்டுமே கொண்டு "வாழ்க்கைப்புயல்" என்னும் சமூகக் கதை நாட்டுக்கூத்தாக மேடையேற்றப்பட்டது.
- 1971இல் குருநகர் கலையரங்கில் பிற்பாட்டுக்குப் பதிலாக ஆர்மோனியம், வயலின் போன்ற வாத்தியங்கள் மட்டும் பயன் படுத்தப்பட்டு "தேவசகாயம்பிள்ளை" கூத்து மேடையேற்றப்பட்டது
- 1988இல் குருநகர் கலையரங்கில், மூன்று பிரிவைக் கொண்ட நீண்ட மேடையில் முதல்தடவையாக "புரட்சித்துறவி" கூத்து ஆடப்பட்டது.

நாட்டுக் கூத்துக்கள் அல்லாதவைகள்.

- 1924 இல், 19.07.1924 முதல் 25.07.1924 வரை பகுதிபகுதியாக "சந்தியோகுமையோரின் சீவிய வரலாற்றுக் காட்சி" பாஸ் மேஸ்திரி கபிரியேல்பிள்ளை, பரிகாரி நீக்கிலாஸ், மூப்பர் இராசேந்திரம் ஆகியோரால் காண்பிக்கப்பட்டது.
- 1940 முதல் 1963 வரை ஒவ்வொரு ஆண்டும் பொம்மைகளைக் கொண்டு, நூற்களின் உதவியுடன் "யேசுவின் திருப்பாடுகளின் காட்சி" குருநகர் யாகப்பர் பக்கினரால் யாகப்பர் ஆலய முன்றலில் பெரிய வியாழன், பெரிய வெள்ளி தினங்களில் காண்பிக்கப் பட்டுள்ளது.
- 1970இல் குருநகர் யாகப்பர் ஆலய முன்றலில், யாகப்பர் ஆலய இளைஞர்களால் மூன்று பிரிவைக் கொண்ட நீண்ட மேடையில் முதல் தடவையாக "ராஜராஜன்" (யேசுவின் உயிர்ப்பின் வரலாறு) மேடையேற்றப்பட்டது.

மேலே குறிப்பிட்டவற்றைத் தவிர பொதுவான தகவல்கள் பின்வருவன வற்றைக் குறிப்பிடலாம்.

**கூத்துப் பிரதி.**

தற்போது நடைமுறையில் இருப்பதைப்போல், பாத்திரங்களுக்குரிய பாடல்கள். வசனங்களை தனித்தனியே எழுதிப் பாத்திரத்திற்கு உரியவர்களிடம் கொடுப்பதில்லை. ஒரு கூத்துப் பிரதியையே வைத்திருப்பார்கள். கூத்துப் பழகும்போது மட்டுமே உரிய பாத்திரக்காரருக்கு அண்ணாவியால் சொல்லிக் கொடுக்கப்படும். அவற்றை கேட்டு மனனம் செய்து நடிகர்கள் பாடுவார்கள். பிரதியை வைத்திருக்கும் ஒருவர் பாடலின் வரியை அண்ணாவிக்குச் சொல்ல, அண்ணாவி தனது கைத்தாளத்தை தட்டி பாடலாகச் சொல்லிக் கொடுப்பதையும், நடிகன் அதனை மீளப்பாடுவதையும் பார்த்துக்கொண்டிருக்க இரசனையாக இருக்கும்.

வாரத்தில் ஞாயிற்றுக்கிழமை மட்டுமே பழக்கம் நடைபெறும். ஏனென்றால் கடற்றொழிலுக்கு செல்பவர்களுக்கு ஞாயிறு மட்டும்தான் விடுமுறை தினமாக இருந்தது. இதற்காக ஐந்தாறு மாதங்களுக்கு முன்னரேயே கூத்துப் பழகத் தொடங்கி விடுவார்கள். ஒரே கையெழுத்துப் பிரதியே திரும்பத் திரும்ப பாவிக்கப்

பட்டமையால்தான் மூலப் பிரதிகள் இன்று அழிவுற்றுக் காணப்படுகின்றது.

ஆரம்ப காலங்களில் ஏடுகளிலிலேயே கூத்துப் பாடல்கள் எழுதப் பட்டிருந்தன. ஏட்டில் உள்ள பாடல்களையோ, வசனங்களையோ இலகுவில் வாசித்தறிய முடியாது. ஏனென்றால், எந்தவொரு எழுத்துக்கும் குற்றுகள் இருக்க மாட்டாது. அவ்வாறு குற்றுகள் இல்லாமல் எழுதப்பட்டிருந்த கூத்துக்களை பாடவேண்டுமென்றால் மீள, முறையாக எழுதியே பயன்படுத்த வேண்டும். இவ்வாறு ஏடுகளிலிருந்த 52 கூத்துக்களை அண்ணாவி பாவிலுப்பிள்ளை அவர்கள் படித்துப் பாடி எழுதுவித்துள்ளார். இந்த 52 பிரதிகளும் 1995இல் நிகழ்ந்த இடப்பெயர்வின்போது 6ம் குறுக்குத்தெருவிலுள்ள அவரது இல்லத்தில் இருந்து களவாடப்பட்டு விட்டது.

**நடிகர்கள்.**

முன்னர் நாட்டுக்கூத்துகளுக்கு ஒலிபெருக்கிகளோ, மின்சார வெளிச்சங் களோ பாவிக்கப்படுவதில்லை. அதற்குரிய வசதிகள் அப்போது இல்லை. திறந்தவெளிகள் கொட்டகை போடப்பட்டு கூத்துக்கள் ஆடப்படும். கொட்டகை யிலிருந்து 200 மீற்றர் தூரத்திற்கும் அதிகமாக பெருந்திரளாக மக்கள் குழுமியிருப்பார்கள். அனைவருக்கும் கேட்கும் வண்ணம் பாட வேண்டியிருப்பதால் குரல்வளம் மிக்க நடிகர்களையே சேர்த்துக்கொள்வார்கள். பெண்கள் நடிப்பதற்கு முன்வராமையால், பெண் பாத்திரங்களுக்கு ஆண்களே நடிப்பார்கள். அதற்கேற்ற குரல் வளம் உள்ளவர்களை தேடியலைவதுண்டு. ஒருவர் திறமையுள்ளவராக காணப்பட்டால் அவரை கூத்துப் பாடுவதற்கு அழைப்பார்கள். அழைக்கப்படுபவர் பெரும்பாலும் மறுக்காது ஏற்பார். எவரேனும் மறுப்பாராயின் அவருக்கு தொழில் செய்வதற்கு தடைவிதிக்கும் வழக்கமும் இருந்தது. பின்னர் இம்முறை நீக்கப்பட்டுவிட்டது.

கூத்துப் பாடுவதற்கு நல்ல ஆரோக்கியமான குரல் வளம் மிகவும் அவசியம். ஒலிவாங்கி இல்லாமலே பல யார்கள் தூரத்தில் இருக்கும் பார்வையாளனுக்கு கேட்கக்கூடியதாகப் பாடுவதற்கு அவனுக்கு நிறைந்த சக்தி வேண்டும். அலைகடலிலே மூச்சுப்பிடித்து மூழ்கி எழுந்து இயற்கையாகவே பயிற்சிபெறும் கடலோரக் கலைஞர்களுக்கு. அந்த சக்தி இயல்பாகவே வந்துவிடுகிறது. மேலும் கடலிலே அவர்கள் தினமும் சுத்தமான காற்றைச் சுவாசிப்பதால் மிகவும் ஆரோக்கியம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். இதனால் கூத்துப் பாடுவதற்கு வல்லவராயிருக்கின்றார்கள்.

கூத்துக்கள் இரவு பூராவும் அல்லது இரண்டு இரவுகள் நடைபெறுவதால் பாத்திரத்தின் தேவையைப் பொறுத்து ஒரு பாத்திரத்திற்கு பலர் பயன் படுத்தப்படுவார்கள் (1ம் இராசா, 2ம் இராசா). பார்வையாளர்களை உற்சாகப் படுத்துவதற்கு கோமாளிகள் மூலம் நகைச்சுவையை காண்பிப்பார்கள். நான் அறிந்த ஆரம்ப காலங்களில் பெற்றோமைக்ஸினையே ஒளிக்காக பயன் படுத்தினார்கள். இரண்டு பெற்றோமைகஸ் கட்டப்பட்டிருக்கும். இரண்டு உள்ளே பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும். தேவையின் நிமித்தம் பயன்படுத்துவார்கள். பின்னர் இயந்திரம் மூலம் மின்சார வெளிச்சங்கள் பாவிக்கப்பட்டன ஆனால் ஒலிபெருக்கி பாவிக்கப்படவில்லை. பெற்றோமைக்ஸ் பாவிக்கப்படுவதற்கு முன்னர் ஒளிக்கென பந்தங்கள், லாம்புகள், போன்றவை பாவிக்கப்பட்டதாக அறிந்திருக்கிறேன். காலப்போக்கில் ஒலிபெருக்கியும் அரங்கில் பாவிக்கப் படலாயின. 1954இல் குருநகர் “கில்பேட் சவுண்ட் சேவிஸ்” மூலம்தான் முதன்முதல் ஒலிபெருக்கி பயன்படுத்தப்பட்டது. 1954இல் பாவனைக்கு கொண்டு வரப்பட்டிருப்பினும் 1960கள் வரை கூத்துக்காகப் பயன்படுத்தப்படவில்லை.

கைத்தாளம், மத்தளம் போன்றவற்றின் இசையுடன் பிற்பாட்டுகளும் (பக்கப்பாட்டு) பாடப்பட்டு கூத்துகள் அளிக்கை செய்யப்படும். பிற்பாட்டு பாடுவதன் மூலம் கூத்தைப் பார்த்துக் கொண்டிருப்பவர்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது. இதன்மூலம் நடிகனே பெரிதும் பயன் பெறுகின்றான். எவ்வாறெனில், பாடல் வரிகளுக்கு இடையில் பிற்பாட்டு பாடும் நேரத்தில் குரலுக்கு ஓய்வுகொடுத்து, இலகுவான சுவாசத்தைப் பெறுகிறான். மறந்த பாடல் வரிகளை நினைவிற் கொள்வதற்கு சந்தர்ப்பத்தைப் பெறுகின்றான். பிற்பாட்டு ஒலியைக் கேட்பதன் மூலம் நடிகன் தான் பாடுவது சரிதானா என்று கணிப்பீடு செய்து, தன் குரலைச் சீர்செய்துகொள்ள வாய்ப்பைப் பெறுகின்றான். மேலாக பாடல் வரிகளில் அவனால் விடப்பட்ட பிழை பிறர் அறியாமல் மறைக்கப்படுகின்றது. கூத்துகளின் அளிக்கைகளுக்கு பிற்பாட்டு பிரதான இடத்தினை வகிப்பதால் அதற்கென திறமையுள்ள பலர் அழைக்கப்படுவார்கள். பயிற்சியும் நடைபெறும். மேடையில் பாடுபவர்களைவிட சில பிற்பாட்டுக்காரர்கள் திறமைசாலிகளாய் இருந்திருக் கிறார்கள். கூத்து முழுவதும் பிற்பாட்டு பாடுவதற்கு அபார ஆற்றல் தேவை.

முன்னர் பாவித்த கைத்தாளம், மத்தளம் போன்றவற்றுடன் ஹார்மோனியம், மிருதங்கம் போன்றவையும் பாவிக்கப்படலாயின. 1971இல் அண்ணாவி பக்கிரி சின்னத்துரை அவர்களால் பிற்பாட்டுக்குப் பதிலாக ஹார்மோனியம், வயலின், மிருதங்கம், கைத்தாளம், மோர்சங் போன்ற வாத்தியங்கள் பயன்படுத்தப்பட்டு "தேவசகாயம்பிள்ளை" கூத்து மேடை யேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. இது பாடல்களை பிழைகளின்றியும் இலகுவாகவும் பாடக் கூடியவர்களால்தான் முடியும்.

**கொட்டகை.**

திறந்த வெளிகளில் கொட்டகை போட்டு கூத்து ஆடப்படுவதாகக் குறிப்பிட்டிருக்கிறேன். சாதாரண மேடையானால் நாலு அடி உயரத்திற்கு 16 தென்னங்குற்றிகள் நான்கு வீதம் சம அளவான இடைவெளிவிட்டு நடப்படும். தேவைக்கேற்ப அதிகமாகவும் பயன்படுத்தப்படும். ஒவ்வொரு தென்னங் குற்றியையும் குறுக்கு, நெடுக்காக பனஞ்சிலாகை அல்லது மொத்தமான சட்டங்களால் இணைப்பார்கள். அதற்குமேலே பலகைகளைப் பரவி கயிற்றால் வரிந்து கட்டுவார்கள். இதுவே மேடையாகும்.

மேடையைச் சுற்றி உயர்ந்த பருமல் (பாய் மரங்கள்) நட்டு அவற்றில் மூன்று பக்கத்தையும், மேற் பக்கத்தையும் தறப்பாள் அல்லது படுகுப் பாய் கொண்டு மறைப்பார்கள். முன்பக்கம் வெளியாக இருக்கும். முகப்பிற்கு அழகான தட்டிகளையும், கூத்தின் தேவைகளுக்கேற்ப அரண்மனை, வீதி, காடு, குகை என வரையப்பட்ட காட்சிகளைக்கொண்ட திரைகளை உள்ளுக்குள் வரிசையாகக் கட்டுவார்கள். முன் பக்கம் எப்போதும் வீதிக்குரிய திரையே காணப்படும். இதனையே கொட்டகை என அழைப்பர். கொட்டகையின் உள்ளே இரண்டு பக்கங்களிலும் போதிய வெளி விடப்பட்டே மறைக்கப்பட்டிருக்கும். அந்த வெளி பிற்பாட்டுக்காரர் இருப்பதற்கும், கூத்தின் தேவைக்கும் பயன்படுத்தப்படும்.

சில விசேட காட்சிகள் இடம்பெறுகின்ற கூத்துகளும் நடைபெறும். உதாரணமாக, சண்டையில் தோற்றுப்போய் தனிமையில் அழுது புலம்பிக் கொண்டிருக்கும் அரசன் ஒருவனுக்கு, தேவதூதன் காட்சி கொடுத்து ஆறுதல் சொல்வது போன்ற ஒரு காட்சி என்று எடுத்துக்கொள்வோம். இவ்வாறான காட்சிகளுக்கு, கூத்துக் கொட்டகையிலிருந்து 50 மீற்றர்கள் தொலைவில் உயர்ந்த, ஒடுங்கிய மேடை கட்டப்படும். அம் மேடையும், கூத்துக்

கொட்டகையையும் இணைத்தாற்போல் கம்பி கட்டப்பட்டிருக்கும். குறிப்பிட்ட காட்சி வரும்போது உயர்ந்த மேடையிலிருந்து தேவதூதன் கம்பி வழியாக கொட்டகையை அடைவார். கொட்டகைக்கு உள் இறங்கி காட்சி கொடுத்து, ஆறுதல் கூறி பின் மீண்டும் உயர்ந்த மேடையை நோக்கி வந்துவிடுவார். முன்னர் பொம்மைகளை மட்டும் பயன்படுத்தியவர்கள் பின்னர் சிறுவர்களைப் பயன் படுத்தியிருக்கிறார்கள். இந்தக் காட்சி அனைவரையும் உற்சாகப்படுத்தும்.

கொட்டகை போடும் வேலை மூன்று, நான்கு கிழமைகளுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டுவிடும். அதற்கும் காரணம் இருக்கின்றது. ஞாயிற்றுக்கிழமை ஒன்றே ஓய்வுநாளாக இருப்பதாலும், கூத்தில் சம்பந்தப்பட்டவர்களே முன்னின்று கொட்டகையைப் போடுவதாலும் தமக்கு வசதியான நேரத்தைப் பயன்படுத்தி பகுதி பகுதியாகப் போடவேண்டிய அவசியம் அவர்களுக்கு இருந்தது. அவ்வாறு செய்வதால் கூத்து நடைபெறப் போகின்றது என்பதை மக்களுக்கு முன்கூட்டியே வெளிப்படுத்தக் கூடியதாகவும் இருந்தது.

**பணக்கூத்து.**

கூத்துகளை மேடையேற்றுபவர்கள் பணத்தை நோக்காகக் கொண்ட வரல்லர். கோவிற் திருவிழாக்கள், பொழுது போக்குகள் போன்றவற்றிற்காகவே இலவசமாக மேடையேற்றுகிறார்கள். இதனால் இவர்களுக்கு பணத் தேவையுண்டு. கூத்துப் பழகத் தொடங்கியது முதலே செலவுகளும் ஆரம்பமாகும். நடிகர்கள் தமக்குள்ளே சேகரித்து சிற்சில தேவைகளைச் சமாளித்துக் கொள்வார்கள். ஏனையவற்றிற்கு பிறரிடம் பெறவேண்டிய தேவை இருந்தது. அதற்காகப் பணக்கூத்து முறையைக் கைக்கொண்டார்கள். கூத்து ஆடப்படுவதற்கு மூன்று கிழமைக்கு முதல் பணக்கூத்து தொடங்கும். இது தொடர்ச்சியாக மூன்று முறைகள் நடைபெறும். பணக்கூத்து நடைபெறும் காலகட்டம் அனேகமாக எல்லா நடிகர்களும் தமது பயிற்சியில் நிறைவுகண்ட காலமாகவே இருக்கும். இந்நாட்களில் பயிற்சி நடைபெற மாட்டாது. எனக்கும் ஒருசில பணக்கூத்துக்களை பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்திருந்தது.

பணக்கூத்தானது பணம் சேகரிப்பதற்கென நடத்தப்படும் தொடர்புகளற்ற கூத்தாகும். ஏனென்றால் அங்கே பாடல்கள் தொடராகவோ, முழுமையாகவோ பாடப்படுவதில்லை. பணக்கூத்து நடக்கப்போவது பற்றி ஒவ்வொரு நடிகர்களும் தமது உறவினர், நண்பர், அயலவர்களுக்குத் தெரியப்படுத்தியிருப்பார்கள். குறித்த ஞாயிற்றுக்கிழமை, குறிப்பிட்ட இடத்தில் சிறு பந்தல் அமைந்திருக்கும். பந்தலின் முன்னால் பெரிய பித்தளைப் பானை, வாய்ப் பக்கம் வெள்ளைச் சீலையால் கட்டப்பட்டவாறு வைக்கப்பட்டிருக்கும்.

பந்தலினுள்ளே அனைத்து நடிகர்களும் அமர்ந்திருப்பார்கள். பெண் பாத்திரங்களை ஏற்கும் ஆண்கள் பெண் உடை அணிந்திருப்பார்கள். அண்ணாவியார் கைத்தாளத்துடன் நின்றவண்ணம் பார்வையாளர்களைப் பார்த்துவிட்டு ஒரு நடிகரின் பெயரைச் சொல்லி அழைப்பார். நடிகர்களின் உறவினர்களை அநேகமாக அவர் அறிந்திருப்பதால் அவ்வாறு செய்கிறார். நடிகர் எழுந்ததும் நடிகரின் உறவினன் எழுந்து வந்த தமது பங்களிப்பை அண்ணாவியாரிடம் கொடுப்பார். (அந்தோனிப்பிள்ளை என்பவர் பாடுவதற்காக அவரது மைத்துனர் ஞானப்பிரகாசம் நிதி கொடுக்கிறார் என்று எடுத்துக்கொள்வோம்.) உடனே அண்ணாவி "அப்பிடியிப்பிடி எண்றாப்போல அந்தோனிப்பிள்ளை அரசனுக்கு பாடுவதற்காக அவரது மச்சான் ஞானப்பிரகாசம், அவரது மச்சான் ஞானப்பிரகாசம் போடும் கட்டிப்பூராயம்" ("அவரது மச்சான் ஞானப்பிரகாசம்" என்பதை பல

தடவைகள் சொல்வார். "கட்டிப்பூராயம்" என்பது பெறுமதி அறியப்படாத தொகையாகும்) எனக் கூறியபடி பித்தளைப் பானைக்குள் காசைப் போடுவார். உடனே அந்தோனிப்பிள்ளை தமக்குரிய பாடலில் ஒரு பாடலை பாடுவார். இப்படியே தொடர்ந்துகொண்டிருக்கும். இவ்வாறே உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் தங்களின் நிதியைக் கொடுப்பார்கள். அண்ணாவியாரும் ஒவ்வொரு தடவையும் சொல்லிக்கொண்டே இருப்பார். இதனால் ஒருவர் போடுவதை மற்றவர் அறிய முடியாவிட்டாலும். பார்வையாளர்கள் மத்தியில் போட்டவரினால் புகையத் தொடங்கிவிடும்.

இதேபோன்றே அனைத்து நடிகர்களுக்கும் நிகழும். எல்லா நடிகர்களுக்கும் தாராள நிதி கிடைக்கும் என்று சொல்லிட முடியாது. மிகச் சொற்ப நிதியும் கிடைக்கும். இதனை எவரும் பெரிதுபடுத்துவதில்லை. குறிப்பிட்ட நடிகர்களைத் திரும்பத் திரும்பப் பாடச்சொல்லி கேட்டுப் பாடவைப்பார்கள். பாடும் ஒவ்வொரு தடவையும் பணம் கொடுப்பார்கள். பணத்தை சிலர் சில்லறையாக்கி முடிச்சாகவும் கொடுப்பார்கள். அதனை அண்ணாவி குலுக்கிக் காட்டுவார். இது போட்டியைத் தோற்றுவிக்கும். இவ்வாறான போட்டியினால் ஒருவர் தனது சங்கிலியைக் கழற்றிக் கொடுத்ததைக் கண்டிருக்கின்றேன். பார்வையாளருக்கு சந்தோஷமாக இருக்கும்.

தற்போதைய நிலை போன்று பணப் பெருக்கம் அதிகரித்த காலமல்ல. அக்காலகட்டம். ஒரு பவுண் 10 ரூபாய்க்கு வாங்கியதாகவும், 50 சதம் நாளாந்த உணவுக்குப் போதுமானது எனவும் பெற்றோர் சொல்வதுண்டு. ஒரு பவுண் 50 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டதை அறிந்திருக்கிறேன். தொழிலாளர்கள் தமது தொழில் நிலவரம் பற்றி உரையாடும் போது 5பவுண், 8பவுண், 10பவுண் என்ற சொற்களை 50 ரூபா, 80 ரூபா, 100 ரூபா போன்ற பணத்தின் தொகைக்குப் பயன்படுத்துவதை கண்டிருக்கிறேன். பவுணின் பெறுமதி கணிசமான காலங்கள் அவ்வாறு இருந்த படியால்தான் பலரும் சரளமாக சொல்லுவதைக் காணக் கூடியதாக இருந்தது. ஒரு நாளைக்கு 2 ரூபாய் வருமானம் கிடைத்தால் அது நிறைவான வருமானமாக நோக்கப்பட்டது. அனைத்து செலவுகளும் அதற்குள் கட்டுப்பட்டுவிடும். இதனால் பணக்கூத்திற்கு சில்லறைக் காசுகளே அதிகமாகக் கிடைக்கும்.

மூன்று மணியளவில் ஆரம்பமாகும் பணக்கூத்து இருளானதும் நிறுத்தப்படும். சிலவேளைகளில் பெற்றோமைக்ஸ் ஒளியில் தொடர்வதுமுண்டு. முடிவில் அண்ணாவியாரால் பணத்துடன் சீலை கூட்டிக் கட்டப்பட்டு எடுத்துச் செல்லப்படும். இப்பணம் கூத்துத் தேவைக்கு பயன்படுத்தப்படும். சில வேளைகளில் மூன்று பணக்கூத்துகளிலிருந்தும் கிடைத்த நிதிகள் கூத்தின் தேவைக்குப் போதாமலிருக்கலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் வீடுவீடாகச் சென்று விபரத்தைக் கூறி நிதி சேகரிப்பார்கள்.

காலப்போக்கில் மூன்று பணக்கூத்து ஒன்றாக மாறியது. அத்துடன் தொழில் உரிமையாளர்களிடம் பணம் சேகரிக்கவும், சில நாட்கள் தொடர்ச்சியாக ஒவ்வொரு தொழில்களிலும் மீன்கள் சேகரித்து விற்பனை செய்யவும் தொடங்கி னார்கள். இப்போது பணக்கூத்து முற்றாக நின்றுவிட்டது.

பணக்கூத்தைப் போன்று மீண்டுமொரு நிதி சேகரிப்பு இடம்பெறுவதுண்டு மூன்றாவது தடவை மேடையேற்றப்படுகின்ற கூத்துகளிலேயே இந் நிதி சேகரிப்பு இடம்பெறுகின்றது. ஞாயிறு விடுமுறை நாளாக இருப்பதால் சனிக்கிழமை களிலேயே கூத்து நடைபெறும். மூன்றாவது தடவை மேடையேற்றப்பட்ட கூத்தானால் அது முடிந்ததும் (விடிந்துவிடும்) முற்பகுதிக்கு பாடிய நடிகர்கள்

முகப்பூச்சுடனும், பிற்பகுதிக்குப் பாடிய நடிகர்கள் உடுத்திய உடைகளுடன் ஒவ்வொரு வீடுவீடாகச் சென்று பாடுவார்கள். வீட்டு உரிமையாளர்கள் பணம் கொடுப்பார்கள். இதில் அதிக பணத்தை எதிர்பார்க்க முடியாது. இப்பணம் கூத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தமது சந்தோஷத்தைக் கொண்டாடப் பயன் படுத்துவார்கள். சிறுவனாக இருந்தபோது இவர்களின் பின்னால் நானும் சென்றதுண்டு. என்னைப்போல் பல சிறுவர்களைக் காணலாம். குறிப்பிட்ட நேரம்வரை பாடி முடிந்ததும் கோவிலுக்குச் சென்று அனைவரும் மங்களம் பாடுவார்கள். மங்களத்தின் மூலம் தாம் குற்றங்குறை செய்திருந்தால் மன்னிக்கும்படி கடவுளிடம் வேண்டுவார்கள். மங்களம் பாடிய பின்னர் அக்கூத்து இந்தக் குழுவினரால் மீண்டும் பாடப்படமாட்டாது.

**அலங்காரம்.**

கொட்டகையைப் போன்று நடிகர்கள் ஒவ்வொருவரும் தத்தமது ஒப்பனை, உடைகள் போன்றவற்றில் அதிக கவனம் செலுத்துவார்கள். மேல் உடைகள் அதாவது மணி உடுப்புகள் வாடகைக்கு எடுக்கப்படும். அநேகமாக கொட்டகைக்குரிய திரைச்சீலை, தட்டி போன்றவற்றை வாடகைக்கு விடுபவர்களே உடுப்பு, ஒப்பனைகளுக்கு பொறுப்பாக இருப்பார்கள். இவர்கள் சோடனைக்காரர் என அழைக்கப்படுவார்கள். சிலர் தமது சொந்தச் செலவில் மேலுடைகளை தயாரித்துக் கொள்வதுமுண்டு.

மேல் உடை தவிர்ந்த கீழ் உடைகள் சேலைகளாலேயே தாறுபாச்சி உடுத்தப்படும். இதற்காக கூறைச் சேலை அல்லது சரிகைகள் நிறைந்த சேலைகளையே அனைவரும் பயன்படுத்துவார்கள். ஒப்பனை, ஆடையலங்காரம் நடைபெறும் வேளைகளில் அவரவர் குடும்பத்தில் ஒருவர் அல்லது மனைவி சமூகமளித்து சரிபார்ப்பதுமுண்டு. அன்றேல் நடிகனே தன்னைத்தான் கண் காணிப்பதுமுண்டு. இதற்கு இரண்டு சிறு உதாரணங்களைக் கூறலாம்.

நான் பங்குகொண்ட "ஞானசௌந்தரி" இசை நாடகத்திற்குரிய ஒப்பனை நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒரு பெண் ஒப்பனை, ஆடையலங்காரம் முடிந்த நிலையில் நின்றிருந்தார். அவ்வேளை அங்கு வருகைதந்த அப் பெண்ணின் தாயார். தமது மகளைப் பார்த்துவிட்டு ஒப்பனையாளரை அழைத்து "என்னங்க இந்தப் பிள்ளைக்கு முகம் இருள்போல இருக்கிறது. என்னென்று மேக்கப் செய்திருக்கிறீர்கள். திரும்பச் செய்யுங்கள்" எனக்கூறி திரும்பவும் செய்வித்து திருப்திப்பட்டார்.

"அகினேசுகன்னி" கூத்திற்கான ஒப்பனை நடைபெற்றுக் கொண்டிருந்தது. அண்ணாவி சுவாம்பிள்ளை அவர்கள் அரசன் பாத்திரத்தில் நடிக்கவிருந்தார். அவருக்குரிய ஒப்பனை முடிந்து, கீழ் உடையாக சேலை தாறுபாச்சி உடுத்தப்பட்டுவிட்டது. சோடனைக்காரரால் மேலுடை உடுத்தப்பட்டது. அந்த உடுப்பில் திருப்தியற்ற அண்ணாவியார், வேறு உடை மாற்றுமாறு கேட்டார். சோடனைகாரரிடம் வேறு உடை இருக்கவில்லை. உடனேயே மேலுடையைக் கழற்றிவிட்டு தாறுபாச்சிய நிலையில் மேலுடையாக சால்வையைப் போட்டு அரசனாக நடித்தார்.

ராஜபாட் மற்றும் சில முக்கியமான பாத்திரங்களை நடிப்பவர்களுக்கு ஒப்பனை செய்யப்படும்போது அந்த நடிகனது உறவினரில் ஒருவர் அல்லது நண்பர் ஒப்பனையாளனைத் தனிமையில் அணுகி "திறமாய் மேக்கப் செய்யவேண்டும்" என்று கூறி அவருக்கு பணமாகவும், பானமாகவும் அன்பளிப்பு வழங்குவதுண்டு.

ஒரு ஆற்றுகை நடைபெறுகிறபோது அனைத்திலும் கவனம் செலுத்தும் வழக்கம் இருந்துகொண்டே வந்திருக்கிறது. மின்னொளியைப் பற்றி பெரிதாக அக்கறை செலுத்துவதில்லை. ஏனென்றால் நாலு வலுக்கூடிய மின் விளக்குகள் எப்போதும் ஒளியைப் பாய்ச்சியபடியே இருக்கும். சிறப்புக் காட்சிகளுக்கு குறைந்த ஒளி, வர்ணஒளி பயன்படுத்துவதுண்டு. ஒலிபெருக்கி பயன்படுத்தத் தொடங்கிய பின்னரும் அதனில் கவனம் செலுத்துவது குறைவு. ஒலியை நம்பி யாருமே பாடுவதில்லை. ஒலிவாங்கி ஒதுக்கப்பட்ட நிலையே காணப்படும். சில சிறுவர்கள் நடிக்கின்ற வேளைகளில் ஒலிபெருக்கி பெரிதும் பயன்படும். இப்போது ஒலிவாங்கி, ஒலிபெருக்கிகளின் திறமையில்தான் கூத்தின் வெற்றி தங்கியுள்ளது. இதனால் இவைகள் இல்லாது கூத்து இல்லையென்ற நிலை தோன்றிவிட்டது.

கூத்து மேடையேறுகின்ற நாளன்று மாலையில் அந்தச் சுற்றாடல் மிகவும் கலகலப்பாக இருக்கும். தேனீர்க்கடை, சிற்றுண்டி கடை, கடலை, கச்சான் வியாபாரிகள், பூந்தி, இனிப்பு வியாபாரிகள், விளையாட்டுப் பொருட்கள், சிறிய பாவனைப் பொருட்களின் வியாபாரிகள். எனப் பல தற்காலிக கடைகள் சுற்றாடலில் உருவாகிவிடும். மெல்ல மெல்ல வியாபாரமும் ஆரம்பமாகிவிடும். சிறார்கள் முதல் பெரியோர்கள் வரை கூட்டம் கூட்டமாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

இருள் சூழத் தொடங்கியதும் தமக்கு சாதகமான இடங்களைத் தேர்வுசெய்து ஒதுக்கிக் கொள்வதற்காக குடும்பம் குடும்பமாக பாய்கள் கொண்டு வருவதைக் காணலாம். பெரியவர்களின் ஆலோசனையுடன் சிறார்கள் ஏற்கனவே இடங்களைத் தேர்வுசெய்து பாய்விரித்து இடம்பிடித்துக் கொள்வதுமுண்டு. சிறிது சிறிதாக மைதானம் நிரம்பத் தொடங்கும். மொத்தத்தில் திருவிழாக் கோலத்தை அங்கே காணலாம்.

பல சமயங்களில் சிறுவர்களாகிய நாம் உறக்கத்தில் ஆழ்ந்து விடுவோம். ஆனால் பிற் கூத்தில் அரசரின் வருகை மற்றும் உச்சகட்ட நிகழ்வுகள் வரும்போது, பெற்றோர் எம்மைத் தட்டி எழுப்பிப் பார்க்கச் சொல்லுவார்கள். சில சமயங்களில் உறங்குவதற்கு முன்னர் "நான் படுக்கப்போறன். (பெயர் குறிப்பிட்டு) வரும்போது எழுப்புங்கள்" என்று கூறித் தூங்குவதுமுண்டு. பெற்றோரும் அதனை நிறைவேற்றுவார்கள்.

மாலை 9, 9.30 மணியளவில் ஆரம்பமாகும் கூத்து, முடியும்போது வானம் வெளுத்து நிற்கும்.

# மாட்சி - 8

## குருநகர் கவிஞர்களால் எழுதப்பட்ட கூத்துக்கள்.

முகமறியா படைப்பாளிகளாக வாழ்பவர்கள்தான் நாடக, நாட்டுக்கூத்து எழுத்தாளர்களாகும். பிரபல்யம் பெற்ற, புகழ்பெற்றவர்களால் பாடப்பட்டு பாராட்டுதல்களைப் பெற்ற, அல்லது பல்வேறு மேடைகளைக் கண்ட நாடக, கூத்துக்களானாலும் சரி எழுத்தாளர்களின் பெயர் பிரபல்யமாவதோ, நினைவிற் கொள்ளப்படுவதோ இல்லை. நடிகரைப் புகழ்வதும், நல்ல கதை என்ற விமர்சனத்தை வைப்பதுடன் பார்வையாளர்கள் தம் பணியை முடித்துக் கொள்கிறார்கள். யாராவதொருவர் கதை யாருடையதென விசாரிப்பாராயின் அவருக்கு பதில் கிடைப்பது அரிதாகவே இருக்கும். நடித்த நடிகர்களிடம் அதுவும் ஒருசிலரிடம் மட்டும்தான் கதையாசிரியரை அறிந்துகொள்ள முடியும்.

ஒரு நாடக, நாட்டுக்கூத்து எழுத்தாளன், தான் எழுதிய நாடகம், நாட்டுக்கூத்து மேடையேறும்போது அவன் அடையக்கூடிய சந்தோஷம் அளவிட முடியாதது. குழந்தையை பிரசவித்த தாயின் மகிழ்ச்சியை அவன் அடைகின்றான். நாடகத்தின் புகழை பிறர் வாய்மூலமாகக் கேட்கும்போது எல்லையில்லா உணர்வுக்கே சென்றுவிடுகின்றான். அந்த உணர்வு அவனை அடுத்த நாடக, கூத்தின் உருவாக்கத்திற்குக் கொண்டு செல்கின்றது. ஆனாலும் அவன் பல சந்தர்ப்பங்களில் சமூகத்தில் அறியப் படாதவனாகவே இருக்கின்றான்.

அத்தகையோரைக் கண்டுபிடித்து வெளிக் கொண்டுவர வேண்டுமென்ற முயற்சியில் இறங்கினேன் ஓரளவு வெற்றியும் கண்டேன். அதன் விளைவுதான் இங்கே பட்டியலிடப்பட்ட பெயர்களாகும். 1815ம் ஆண்டிலிருந்தே கூத்துக்கள் எழுதத் தொடங்கிய பதிவை இங்கே காண்கிறீர்கள். அதற்கு முன்னரே குருநகரில் கூத்துக்கள் ஆடப்பட்டிருக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள்

கூத்துக்களை எழுதுவதற்கான உந்துதலைப் பெற்றிருக்க முடியும். செயலுருப்படாத ஒன்றிற்காக தமது கால நேரத்தை செலவிட்டு எழுதியிருக்க மாட்டார்கள். இங்கே 1815 இற்கு முன்னர் எழுதப்பட்ட கூத்துக்களையோ, 1913இற்கு முன்னர் ஆடப்பட்ட கூத்திற்கான தகவல்களையோ என்னால் பெற முடியவில்லை.

எந்தவொரு பதிவுகளும் இல்லாமை, அக்காலத்துடன் சம்பந்தப்பட்ட அல்லது அவர்களின் வழித்தோன்றல்களை இனங்காண முடியாமை, இனங் காணப்பட்டவர்களிடமும் ஆவணங்கள் எதுவும் பெறமுடியாமை, ஞாபகத்திலிருந்து தானும் தகவல்களை எடுக்க முடியாமை போன்றவற்றால் முன்னையவற்றை தற்சமயம் கைவிடும் நிலையே எழுந்துள்ளது. பலரால் அறியப்படாமல் இருந்த வற்றில் அறிந்ததை உங்களுக்குத் தருகின்றேன்.

| நூலின் பெயர் | ஆண்டு | நூலாசிரியர் |
|---|---|---|
| 1. நொண்டி | அவுறாம்பிள்ளை | 1815 |
| 2. சம்பேதுரு பாவிலு | அவுறாம்பிள்ளை | 1815 |
| 3. சூசையப்பர் யாக்கோபு | அவுறாம்பிள்ளை | 1815 |
| 4. வரப்பிரகாசம் | அவுறாம்பிள்ளை | 1815 |
| 5. சுளியார் | அவுறாம்பிள்ளை | 1815 |
| 6. யூதகுமாரன் | சந்தியோகு | 1856 |
| 7. சபீன கன்னி | சந்தியோகு | 1856 |
| 8. மூவிராசாக்கள் | சந்தியோகு | 1856 |
| 9. என்றிக் எம்பிரதோர் | சந்தியோகு | 1856 |
| 10. இசிதோர் | சந்தியோகு | 1856 |
| 11. சந்தியோகுமையோர் படைவெட்டு | சந்தியோகு | 1856 |
| 12. செனகப்பு | சந்தியோகு | 1856 |
| 13. மாகிறேற்றம்மா | நீக்கிலாஸ் (பரிகாரி) | 1915 |
| 14. தீத்தூஸ் | நீக்கிலாஸ் (பரிகாரி) | 1915 |
| 15. பங்கிராஸ் | நீக்கிலாஸ் (பரிகாரி) | 1915 |
| 16. ஆட்டு வணிகன் | நீக்கிலாஸ் (பரிகாரி) | 1915 |
| 17. ஊசோன் பாலன் | நீக்கிலாஸ் (பரிகாரி) | 1915 |
| 18. வாழ்க்கைப் புயல் | யேம்ஸ் | 1961 |

| | | | |
|---|---|---|---|
| 19. | நாடக வேதசாட்சி | யேம்ஸ் | 1975 |
| 20. | ஜோசவ்வாஸ் | யேம்ஸ் | 1975 |
| 21. | சுபத்திரா | யேம்ஸ் | 1975 |
| 22. | யேசீலன் | யேம்ஸ் | 1975 |
| 23. | மொட்டச்சி | யேம்ஸ் | 1975 |
| 24. | ஞானசீலன் ஞானசீலி | யேம்ஸ் | 1975 |
| 25. | போருக்குப் பின் | பி. மிக்கேல்பிள்ளை | 1987 |
| 26. | வீரமாதேவி | பி. மிக்கேல்பிள்ளை | 1990 |
| 27. | புரட்சித்துறவி | பி. மிக்கேல்பிள்ளை | 1990 |
| 28. | செந்தூது | பி. மிக்கேல்பிள்ளை | 1991 |
| 29. | துன்பத்தின் பின் | பி. மிக்கேல்பிள்ளை | 1993 |
| 30. | தியாக இராகங்கள் | பி. மிக்கேல்பிள்ளை | 1994 |
| 31. | மெய்காப்போன் தன் கடமை | பி. மிக்கேல்பிள்ளை | 1994 |
| 32. | அமலமரித் தியாகிகள் | பி. மிக்கேல்பிள்ளை | 1994 |
| 33. | சோழன் மகன் | ம. சாம்பிரதீபன் | 1998 |
| 34. | மனந்திரும்பிய மன்னன் | யே. இக்னேஷியஸ் (பிரபா) | 2001 |
| 35. | மெய்ப்பொருள் நாயனார் | யே. இக்னேஷியஸ் (பிரபா) | 2001 |
| 36. | உத்தரியத்தின் மகிமை | ம. துரைசிங்கம் | 1997 |

மேலே கொடுக்கப்பட்டுள்ள கூத்துக்களின் விபரங்களில் 8 கவிஞர்கள் 36 கூத்துக்களை எழுதியிருக்கின்றார்கள். இவற்றில் 1915ம் ஆண்டிற்கு முன்னர் உள்ளவற்றை காலம் கடந்தவையெனத் தவிர்த்து நோக்கினாலும் 1915ம் ஆண்டிற்கும் 1961ம் இடையிலான 46 வருடங்கள் வெற்றிடமாகவே காணப்படுகின்றது. அந்த வெற்றிடத்திற்கான காரணத்தை கண்டுபிடிக்க முடியவில்லை. 1961இற்கு பின்னர் எழுதப்பட்டுள்ள கூத்துக்கள் யாவும் நான் அறிந்தவர்களால் எழுதப்பட்டிருக்கின்றது. எனவே எனக்கு முன்னைய ஒரு தலைமுறையினரால் எழுதப்பட்ட கூத்துக்களின் விபரம் கிடைக்கப் பெறவில்லை. அவை புதைக்கப்பட்ட தகவல்களாக ஆகிவிட்டது. அவற்றை எவரேனும் அகழ்ந் தெடுப்பார்களா?


# மாட்சி - 9

## குருநகர் பிரசவித்த அண்ணாவிகள்.

பாரம்பரியக் கலையான நாட்டுக்கூத்தை குருநகரில் வளர்த்தவர்கள் பலர். பாதுகாத்தவர்கள் பலர் இவர்கள் ஆய்வாளர்களின் கண்களுக்குத் தட்டுப்படாமலும், காதுகளுக்கு எட்டப்படாமலும் போனதுதான் ஆச்சரியத்தைத் தருகின்றது. இவர்களில் பிந்திய தலைமுறையினரில் ஒருசிலரைத் தவிர எவருமே எம்முடன் இல்லை. எவரொரு வரினதும் ஆவணங்களும் இல்லை என்பது கவலைக்குரியது. இதனால் அவர்கள் பற்றிய முழுமையான அல்லது சிறப்பான தரவுகளை, அவர்களின் பிந்திய தலைமுறையினரிடம் இருந்து பெற்றுக்கொள்வது சிரமமாக இருக்கின்றது. அவர்களது தரவுகள் அனைத்தும் அவர்களுடனேயே புதைகுழி சென்றுவிட்டது. முடிந்தவரை முயற்சித்து பலருடாகச் சேர்த்த குறைந்த தரவுகளையேனும் உங்களுக்குத் தருவதில் பெருமிதம் அடைகின்றேன்.

நாட்டுக்கூத்தை வளர்த்தவர்கள் என்று கொள்வதானால் பாரிய நூலாகவே உருவாக்க வேண்டும். அத்தகைய உயர்நிலையில் கூத்தாடிய பலர் குருநகரில் வாழ்ந்திருக்கிறார்கள். ஆனால் நான் சற்று இவர்களுக்கு அப்பால் சென்று அண்ணாவிமார்களை மட்டுமே வெளிக்கொண்டு வந்திருக்கிறேன். அண்ணாவிமார்களே கூத்துக்களின் உயிர்நாடியாகத் திகழ்ந்திருக்கின்றார்கள். இவ் அண்ணாவிமார் ஒவ்வொரு வரும் நடித்த, பழக்கிய கூத்துக்களை ஆய்வுசெய்து பார்த்தால், ஒவ்வொரு வரும் ஒரே கூத்தை பல தடவைகள், பல்வேறுபட்ட பாத்திரங்கள் அல்லது அதே பாத்திரத்தில் நடித்திருக்கிறார்கள். பல தடவைகள் பழக்கியிருக் கிறார்கள். குறிப்பிட்ட சில கூத்துக்கள் மக்களால் பெரிதும் விரும்பப்படுவதே இதற்குக் காரணமாக இருந்தது. அவ்வாறானவர்களுக்கு ஒரே கூத்தை ஒருதடவை மட்டுமே குறிப்பிட்டிருக்கிறேன். இதனால் அவர்களது கூத்துக்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றது. மட்டுமல்ல தகவலாளர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் பாரிய வேறுபாட்டைத் தருகின்றது. தகவலாளர்கள் இதனை ஏற்றுக் கொள்வார்களென நம்புகின்றேன்.

## 1



பெயர் : **திரு. அவுறான்பிள்ளை பாவிலுப்பிள்ளை**
முகவரி : 58, 6ம் குறுக்குத்தெரு
குருநகர். யாழ்ப்பாணம்
பிறப்பு : *01.05.1891*
இறப்பு : *19.08.1983*

நடித்த கூத்துக்கள் :
யூதகுமாரன் (1918)

பழக்கிய கூத்துக்கள் :
வரப்பிரகாசம், சுழியார், செனகப்பு, கற்பலங்காரி, மத்தேஸ்மவுறம்மாள், சபீனகன்னி, யூதகுமாரன், தர்மப்பிரகாசம்.

சந்தக விருத்தம் பாடுவதில் விற்பன்னராக திகழ்ந்தவர் அமரர் அண்ணாவி பாவிலுப்பிள்ளை அவர்களாவர். தாம் பாடிய முதலாவது கூத்திலிருந்தே மற்றவர்களுக்கு பாடல் பழக்கி அண்ணாவியாராகத் திகழ்ந்த அற்புதக் கலைஞனாவார். அண்ணாவி நட்டுவர் அந்தோனிப்பிள்ளைக்கு குட்டுப்போட்டு பழக்கியவர் என்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஏடுகளில் குற்றுகள் இல்லாமல் எழுதப்பட்டிருந்த கூத்துக்களை தாமே பாடி, அவற்றை பிறரைக்கொண்டு எழுதி அனைவரும் இலகுவில் பாடுவதற்கு ஏற்றவாறு உருவாக்கிய பெருமை அண்ணாவி பாவிலுப்பிள்ளையையே சாரும்.

இவ்வாறு 52 கூத்துக்கள் இவரினால் எழுதப்பட்டுள்ளது. இந்தக் கூத்துக்கள் அனைத்தையும் அண்ணாவியாரே பழக்கியுள்ளார். ஆனால் அவற்றின் விபரங்களை அறிய முடியவில்லை. இவரினால் மீள எழுதப்பட்ட 52 கூத்துக்களும் இவரது மருமகன் அருளப்பு என்பவரினால் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தது. ஆனால் 1995 இல் இடம்பெற்ற மாபெரும் இடப்பெயர்வில் அவை களவாடப்பட்டு விட்ட செய்தி கவலையைத் தருகின்றது.

## 2

பெயர் : **திரு. மிக்கேல் சின்னப்பு இளையப்பா**
(எம்.எஸ். இளையப்பா, செட்டன் இளையப்பா)
முகவரி : 11/7, தண்ணிர்த்தாங்கி 4ம் குறுக்குத்தெரு,
குருநகர். யாழ்ப்பாணம்
பிறப்பு : *18.09.1893*
இறப்பு : *06.08.1982*

நடித்த கூத்துக்கள் :
தீத்தூஸ், என்றிக் எம்பிறதோர், அகினேசுகன்னி, சுபத்திரா, பங்கிராசா, மெய்காப்போன் தன் கடமை, தேவசகாயம்பிள்ளை. (ஏனையவை அறியமுடியவில்லை)

பழக்கிய கூத்துக்கள் :
வேதாகமமும் வெள்ளிச் சிலுவையும், வேளாங்கன்னி, மெய்காப்போன் தன்

கடமை, கண்டியரசன், அந்தோனியார், என்றிக் எம்பிறதோர், பங்கிராசு, பூதத்தம்பி.

காதல் காட்சிகளில் துல்லியமாய் நடிக்கக்கூடிய அண்ணாவி இளையப்பா அவர்கள் புகழ்பெற்ற அண்ணாவிமார்களில் ஒருவராகத் திகழ்ந்தார். (மேடையில் நன்றாய்த் துரத்திப் பிடிப்பார் என்று பெண்கள் கேலிசெய்வதைக் கேட்டிருக்கிறேன்) கூத்துப் பாடல்களுக்கு சங்கீத இராகங்களை இணைத்தும், இணையாமலும் சுவைபடவும், இனிமையாகவும் பாடக்கூடிய திறமையைக் கொண்டவர். அண்ணாவி சுவாமிநாதன் அவர்களை இளையப்பாவே உருவாக்கினார் என்றும் சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறேன். இளையப்பாவின் பாணியை சுவாமிநாதர் கையாளுவதுண்டு.

அண்ணாவி இளையப்பா நாட்டுக்கூத்துகளை மட்டுமே நடித்தும், பழக்கியுமுள்ளார். இவர் நடித்த பல கூத்துகள் பற்றிய விபரங்களை அறியமுடியவில்லை. கட்டைக்காடு, தாளையடி, இளவாலை போன்ற இடங்களுக்குச் சென்று கூத்துக்களை பழக்கி மேடையேற்றியுள்ளார். இவர் பழக்கிய ஏனைய கூத்துக்களையோ, இவரைப் பற்றிய மேலதிக விபரங்களையோ பெற முடியவில்லை.

## 3



பெயர் : **திரு. மனவல் அந்தோனிப்பிள்ளை**
நட்டுவர் அந்தோனிப்பிள்ளை

முகவரி : 23, கொண்டடி வீதி
குருநகர். யாழ்ப்பாணம்

பிறப்பு : 12.04.1894

இறப்பு : 13.10.1976

நடித்த கூத்துக்கள் :

யூதகுமாரன், கற்பலங்காரி, வரப்பிரகாசர், சுளியார், தேவசகாயம்பிள்ளை, செபஸ்தியார், செனகப்பு, கனகசபை, மூவிராசாக்கள், அகினேசுகன்னி, ஞானசவுந்தரி, பிலோமினாம்மாள், இம்மனுவல், உடைபடா முத்திரை, நொண்டி, மரியகொறற்றி, சந்தியோகுமையோர் படைவெட்டு, சபீனகன்னி, மனம்போல் மாங்கல்யம், மத்தேஸ் மாகிறேற்றம்மாள், தாவீது கோலியாத், ஊசோன் பாலன், சஞ்சுவான், கருங்குயில் குன்றத்துக் கொலை

பழக்கிய கூத்துக்கள் :

தர்மப்பிரகாசம், ஜெயசீலன், சபீனகன்னி, மரியதாசன், விஜயமனோகரன், அலங்காரரூபன், தொம்மையார், சவேரியார், திருஞானதீபன், பவுலீனப்பர், மூவிராசாக்கள். செனகப்பு, தாவீது கோலியாத்.

குருநகர் தவிர்ந்த வேறுபல இடங்களிலும் நாட்டுக்கூத்துக்களைப் பழக்கி மேடையேற்றிய இவர், பட்டங்களை, புகழை விரும்பாத ஒருவராகக் காணப்பட்டார். எத்தகைய இராகமென்றாலும் உடனுக்குடன் இலகுவாகப் பாடக்கூடியவர். தமது வாழ்வின் இறுதி ஆண்டுவரை நடித்துக்கொண்டிருந்த சிம்மக்குரலோனின் இழப்பு ஈடுசெய்ய முடியாததொன்றாகும். அண்ணாவியார் பேக்மன் ஜெயராஜா அவர்கள்

திருமறைக் கலாமன்றத்திற்கு அளித்த பேட்டியில், அண்ணாவியார் அந்தோனிப் பிள்ளையை பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"மரபு தவறாது ஆணித்தரமாகப் பாடக்கூடியவர்களில் இவரும் ஒருவர். பூந்தான் பழக்கிய தேவசகாயம்பிள்ளை நாட்டுக்கூத்தில் இவர் தேவசகாயம் பிள்ளையாகவும், நான் முதலாம் அதிகாரியாகவும் நடித்தேன். ஒரு கட்டத்தில் அவருடன் பாடுவதற்கு எனக்குக் கடினமாக இருந்தது. நான் அவரிடம் "அண்ணாவியார் கொஞ்சம் குறைத்துப் பாட முடியுமா?" என்றுகேட்டேன். அவர் சிரித்துவிட்டு முதுகில் தட்டிச் சொன்னார் "நாட்டுக்கூத்து என்றால் இப்படித்தான் பாடவேண்டும். நீ பாடுவாயென்ற நம்பிக்கையில்தான் பூந்தான் என்னுடன் போட்டிருக்கின்றார். நீ பாடுவாய் பாடு" என்ற என்னைத்தட்டி ஊக்கம் கொடுத்தார். இன்று நான் மேலே குரலெடுத்துப் பாடுவதற்கு அவரும் ஒரு காரணகர்த்தாவாக இருக்கின்றார்"

## 4

பெயர் : **திரு. அவுறான் ஞானப்பிரகாசம்**
(ஏசா சின்னத்துரை, கொண்டையர், பெரிய அண்ணாவி)
முகவரி : 12, சென் ஜேம்ஸ் கிழக்கு வீதி,
குருநகர். யாழ்ப்பாணம்
பிறப்பு : 16.08.1896
இறப்பு : 12.01.1974

நடித்த கூத்துக்கள் :
ஞானசெந்தரி, எஸ்தாக்கியார் ஏனைய விபரங்கள் தெரியவில்லை.

பழக்கிய கூத்துக்கள் :
சத்தியவான் சாவித்திரி, கண்ணகி போன்ற இந்துசமய நாட்டுக்கூத்துக்கள் பலவற்றை இந்துக்கள் செறிந்துவாழும் பல இடங்களில் பழக்கியுள்ளார். குருநகரிலும் ஐம்பதுக்கு மேற்பட்ட கூத்துக்களையும், இசை நாடகங்களையும் பழக்கியுள்ளார். இவைகள் பற்றிய முழுமையான விபரங்கள் அறிய முடியவில்லை.

அமரர். ஏசா அண்ணாவியார் அவர்கள் குருநகரில் நாட்டுக்கூத்தின் நாயகனாகத் திகழ்ந்தவர். இதனால்தான் பெரிய "அண்ணாவியார்" எனப் பலராலும் அழைக்கப்பட்டார். இவர் நாடகம், இசை நாடகம், நாட்டுக்கூத்தினைக் கற்றுக்கொடுக்கும் கலையில் விற்பன்னராக விளங்கினார். ஐம்பதுக்கு மேற்பட்ட நாட்டுக் கூத்துக்களை, இசை நாடகங்களைப் பயிற்றுவித்ததன் மூலம் குருநகரின் புகழ்பூத்த அண்ணாவிமார்களான பக்கிரி சின்னத்துரை, நட்டுவன் அந்தோனிப்பிள்ளை, மலக்கியாஸ் சுவாமிநாதர், இளையப்பா ஆகியோரை உருவாக்கிய பெருமை இவரையே சாரும்.

நாடக, கூத்துப் பழக்கங்களில் ஹார்மோனியத்தை தாமே கையாளக்கூடிய திறமையைக்கொண்ட இவர், நாடக, கூத்துப் பழக்கங்களையே தமது தொழிலாகவும் கொண்டிருந்தார். 15 வயதினில் இவர் நடித்த ஒரு இசை நாடகத்தில் இவரது பாடல் திறமையைக் கண்டு அப்போதே அண்ணாவியாரென அழைக்கப்பட்டதாக பரம்பரையான கதையொன்று கூறுகின்றது.

திரு இருதய சபையின் அங்கத்தவரான இவர், சங்கீத்தை நாட்டுக்கூத்திலும் புகுத்தலாம் என்ற ஆலோசனையை பக்கிரி சின்னத்துரைக்கு வழங்கிச் செயலில் காண்பித்தவர். இவர் நாட்டுக்கூத்துகளைவிட இசை நாடகங்களையே அதிகமாக பயிற்றுவித்திருந்தார். இவர் இசைநாடகங்களில் அக்கறைகாட்டினதாலோ என்னவோ, குருநகரில் அதிகமான இசைநாடகங்கள் மேடையேற்றப்பட்டதாக சொல்லக் கேட்டிருக்கிறேன். விபரங்களை பெற முடியவில்லை.

ஞானசௌந்தரி, பவியோலாவின் பரிசுத்த காதல் ஆகிய இரண்டு இசை நாடகங்களில் அண்ணாவியாருடன் இணைந்து செயற்படக்கூடிய சந்தற்பம் எனக்குக் கிடைத்தது. சங்கீதமென்றால் என்னென்றே தெரியாதவரையும் (நானும் அடங்கும்) மிக மிக இலகுவாக, சுவைபட பாடச்செய்ததைக் கண்டேன். உரத்துப் பேசியதையோ, கோவித்துப் பேசியதையோ பார்த்ததேயில்லை. திரும்பத் திரும்ப எத்தனை தடவைகளேனும் சொல்லிக் கொடுப்பதற்கு பின் நிற்பதேயில்லை. சாகும்வரை பாடிக்கொண்டேயிருந்த அண்ணாவியார் குடுமி வைத்திருந்த காரணத்தால் "கொண்டையர்" என அழைக்கப்பட்டார். "கொண்டையர் அண்ணாவி" என்று சொன்னால் அனைவரும் இலகுவாக இனங்கண்டுவிடுவர்.

## 5



பெயர் : **திரு. பாவிலோன் செபமாலை சின்னத்துரை (பக்கிரி சின்னத்துரை)**
முகவரி : 82, மவுண்கார்மேல் வீதி, குருநகர். யாழ்ப்பாணம்
பிறப்பு : 09.01.1905
இறப்பு : 01.06.1985

நடித்த கூத்துக்கள் :

ஞானசௌந்தரி, அரிச்சந்திரா, தேவசகாயம்பிள்ளை, ஏனையவை அறியமுடியவில்லை.

பழக்கிய கூத்துக்கள் :

இவர் நடித்த கூத்துகளுக்கு இவரே அண்ணாவியாராக இருந்தார். கூத்துகளின் விபரம் அறியமுடியவில்லை.

இவரது மைத்துனர் ஒரு அண்ணாவியார். அதனால் சிறுவயதிலிருந்தே பக்கிரிக்கு நாட்டுக்கூத்தில் ஆர்வம் ஏற்பட்டது. ஏசா அண்ணாவியாரின் மாணவனாக இருந்த அமரர் பக்கிரி சின்னத்துரை இலங்கையிலும், இந்தியாவிலும் சங்கீதத்தையும் முறையாகக் கற்று சிறந்து விளங்கினார். அதனால் இவர் இசை நாடகத்துறையில் நுழைவதற்கு பெரும் வாய்ப்பாக இருந்தது. 1938ம் ஆண்டு இந்தியாவில் இருந்து வந்த இசைக் குழுவினருடன் சேர்ந்து யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் (தற்போது பொது நூலகம் அமைந்துள்ள இடம்) இசை நாடகமான "ஞானசௌந்தரி" இல் கதாநாயகனான பிலேந்திரன் பாகம் ஏற்று நடித்து பலரது பாராட்டைப் பெற்றதோடு "சுரபூஷபனம்" என்ற பட்டத்தையும் பெற்றார். 1939ம் ஆண்டு "சங்கீதபூஷணம்" என்ற பட்டத்தை பெற்றார். இவரது காலத்தில் சங்கீத நாயகர்களான புத்துவாட்டி சோமு, இணுவில் சொக்கலிங்கம் போன்றோரோடு இந்து ஆலயங்களில்

சுரவரிசை பாடுவதற்கு இவர் பலதடவை அழைக்கப்பட்டு பாராட்டையும் பெற்றவர். பத்துக்கும் மேற்பட்ட பட்டங்களைப் பெற்றவர் எனப் பலரும் சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால் அதன் விபரங்களை அறிய முடியவில்லை.

இசை நாடகங்களில் சிறந்து விளங்கியதுபோல் நாட்டுக்கூத்துகளிலும் சிறந்து விளங்கினார். நாட்டுக்கூத்தில் கர்நாடக சங்கீத அம்சங்களைப் புகுத்தி நாட்டுக்கூத்து பாடல்களுக்கும், கூத்துக்கும் மெருகூட்டிய பெருமை அவருக்கேயுண்டு. அத்தகைய நாட்டுக்கூத்துள் "தேவசகாயம்பிள்ளை" குறிப்பிடத்தக்கது. திரு இருதய சபை அங்கத்தவராவரான இவருக்கு 1975ஆம் ஆண்டு தினகரனால் நடாத்தப்பட்ட அண்ணாவிமாருக்கான மகாநாட்டில் அண்ணாவிக்கான சான்றிதழ் வழங்கப்பட்டது.

1971ம் ஆண்டு சேந்தாங்குளம் என்னும் இடத்தில் தேவசயாயம்பிள்ளை நாடகம் மேடையேற்றப்பட்டது. அதில் அண்ணாவியார் பூந்தான் யோசேப்பு, அண்ணாவியார் பக்கிரி சின்னத்துரை ஆகியோர் நடித்தனர். இருவருக்கும் இடையில் ஏற்பட்ட கருத்துவேறுபாட்டால், தம்முடன் ஒரு பொதுமேடையில் கூத்துப் பாடல் போட்டிக்கு வரும்படி பூந்தான் யோசேப் அவர்களை அழைத்தார். அப்போட்டியில் தாம் தோற்கும் பட்சத்தில் தன் சொத்தின் ஒரு பகுதியை தருவதாக பக்கிரி சின்னத்துரை அவர்கள் சவால் விட்டார். இது நடைபெறுகிறபோது நானும் சமூகமளித்திருந்தேன். அத்தகைய போட்டி எதுவும் பின்னர் நடைபெறவில்லை.

இந்தப் பிரச்சினை காரணமாகவே தேவசகாயம்பிள்ளை கூத்தில் அண்ணாவியார் பூந்தான் யோசேப்பு நடித்த பாத்திரத்திற்கு தம்பித்துரை யேசுராசாவை பழக்கியெடுத்து பிற்பாட்டுக்குப் பதிலாக ஹார்மோனியம், வயலின் போன்ற வாத்தியங்களை மட்டும் பயன்படுத்தி, குருநகர் கலையரங்கத்தில் அதே ஆண்டு மேடையேற்றினார். தமது திறமையில் முழுமையான நம்பிக்கை வைத்திருந்தார் என்பதற்காகவே இங்கே குறிப்பிடுகின்றேன். சமூகத்தில் வசதி படைத்தவராக இருந்தும், பல திறமைகளைத் தன்னுள் கொண்டிருந்தும் தம்மை முன்னிலைப் படுத்தக்கூடிய செயற்பாடுகளை அல்லது தமது உயர்நிலையை ஆவணப்படுத்தக்கூடிய எவற்றிலும் ஈடுபடாது விட்டமை, இவர் விட்ட தவறாகவே நோக்கவேண்டியுள்ளது.

இந்த இடத்தில் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1970களில் ஒரு குறிப்பிட்ட நாடக மன்ற நடிகர்களுடன் கணிசமான தொடர்பு எனக்கு இருந்தது. அவ்வேளையில் ஒரு சமூக நாடகம் அக் குழுவினரால் மேடையேற்றப்பட்டது. அம் மேடையேற்றத்திற்குரிய நிதியுதவியை வழங்கிய ஒரு அண்ணாவியார், பொன்னாடைக்குரிய பணம், குறிப்பிட்ட பட்டத்திற்குரிய பெயர் ஆகியவற்றைக் கொடுத்து, நாடக ஆரம்பத்தில் பொன்னாடை போர்த்தி, பட்டம் சூட்டும்படி கேட்டுக் கொண்டார். அது நிறைவேற்றப்பட்டது. இவ்வாறல்லாது அண்ணாவியார் பக்கிரி சின்னத்துரை வேறுபட்டவராகக் காணப்பட்டார்.

## 6



பெயர் : **திரு. யோசேப் சூசைப்பிள்ளை**

ஒட்டுக்காளி சூசை

முகவரி : 26 சென் செபஸ்ரியன் வீதி,

குருநகர். யாழ்ப்பாணம்

பிறப்பு : 27.04.1911

பிறப்பு : 29.04.1981

நடித்த கூத்துக்கள் :

திருஞானதீபன், ஞானசௌந்தரி, புனிதசீலி, மனோகரி, செனகப்பு, சுளியார், தேவசகாயம்பிள்ளை, அருள்மணி, அபயசீலி, ஜெனோவா, வரப்பிரகாசர், யூதகுமாரன், ஞானப்பிரகாசம்.

பழக்கிய கூத்துக்கள் :

அருள்மணி, தேவசகாயம்பிள்ளை

இலங்கை சின்னப்பா என்று பலராலும் அழைக்கப்படுபவர் அமரர் சூசைப்பிள்ளை. இவர் 15 இற்கு மேற்பட்ட இசை நாடகங்களை நடித்திருக்கிறார். சிறு வயதில் கோவிந்தக்குட்டி பாகவதரிடம் சங்கீதத்தைக் கற்றுக்கொண்டார். பாகவதர் இறந்த பின்னர் ஏசா அண்ணாவியாரிடம் சங்கீதப் பயிற்சி பெற்றவர், அண்ணாவி பக்கிரி சின்னத்துரையுடன் இணைந்தும், தனித்தும் பல கூத்துக்களை பழக்கி மேடையேற்றியுள்ளார். தாளையடி, இளவாலை போன்ற இடங்களில் நடித்தும், பழக்கியும் இருக்கிறார்.

தமது 12வது வயதிலேயே நடிக்கத்தொடங்கிய இவர் 1968இல் யாழ். திறந்தவெளி அரங்கில் அண்ணாவியாரக கௌரவிக்கப்பட்டார். புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் போட்டியின் அடிப்படையில் அண்ணாவியாராகத் தேர்வு செய்யப்பட்டு வண. ஆண்டகை தீயோப்பிள்ளை அவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். தேவசகாயம்பிள்ளையில் மந்திரியாக இவர் நடித்த நடிப்பை இன்றும் பலர் நினைவு கூருகின்றனர்.

## 7

பெயர் : **திரு. நீக்கிலாஸ் கிறிஸ்தோத்திரம்**
முகவரி : தண்ணீர்த்தாங்கி 2ம் குறுக்குத்தெரு
குருநகர். யாழ்ப்பாணம்
பிறப்பு : 1919
இறப்பு : 1992

நடித்த கூத்துக்கள் :

அறியமுடியவில்லை

பழக்கிய கூத்துக்கள் :

சுபத்திரா, (ஏனையவை அறியமுடியவில்லை)

ஹார்மோனியத்தை திறமையாக வாசிக்கக்கூடியவர் அமரர் அண்ணாவி கிறிஸ்தோர்திரம் ஆவர். குருநகரில் இடம்பெற்ற பெரும்பான்மையான கூத்துகளுக்கு இவரே ஆர்மோனியத்தை பயன்படுத்தியுள்ளார். பல நாட்டுக்கூத்துக்களில் நடித்தும், பழக்கியுமுள்ளார். ஆனாலும் அவரது வழித்தோன்றல்கள், நண்பர்கள் எவரேனும் தற்சமயம் இங்கு இல்லாமையால் தகவல்களைப் பெற முடியவில்லை.

இவரது கற்பனைக் கதை ஒன்றிற்கு (பெயர் ஞாபகத்தில் இல்லை) வசனம் எழுதி நாடகமாக்கிக் கொடுத்திருக்கிறேன். இவரைச் சந்தித்திருந்தாலும் நெருங்கிப் பழகக்கூடிய சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை. அதனால் இவரைப் பற்றிய தகவல்களை என்னால் முன்வைக்க முடியவில்லை. இவர் நாட்டுக்கூத்து கலைஞர், இசைக் கலைஞர் மட்டுமல்ல ஒரு கட்டிடக் கலைஞருமாவர். மூன்று திறமைகளையும்

கொண்டு விளங்கிய இவரின் சிறப்புமிக்க தகவல்களை வெளிக்கொண்டுவர முடியாமல் போனது துரதிர்ஷ்டவசமானது.

## 8



பெயர் : **திரு. ஆசீர்வாதம் சுவாம்பிள்ளை**
முகவரி : 9/4, மத்திய கிழக்கு வீதி, குருநகர். யாழ்ப்பாணம்
பிறப்பு : 21.06.1923
இறப்பு : 21.06.1991

நடித்த கூத்துக்கள் :
யூதகுமாரன், அகினேசுகன்னி, சத்தியசீலன், சங்கிலியன், தேவசகாயம்பிள்ளை, செனகப்பு,


பழக்கிய கூத்துக்கள் :
கருங்குயில் குன்றத்துக் கொலை, சத்தியசீலன், செனகப்பு.

குருநகரில் மட்டுமல்லாது வேறு பல ஊர்களிலும் நாட்டுக்கூத்துகளைப் பழக்கி புகழ் பெற்றவர் அமரர் அண்ணாவி சுவாம்பிள்ளை அவர்கள். அமைச்சர் மட்டத்தில் விருதினைப் பெற்ற இவர் சிறந்த முறையில் இராகங்களைப் பாடக்கூடிய வல்லமையைக் கொண்டிருந்தார். நடிக்கும்போதோ, சொல்லிக் கொடுக்கும்போதோ இராகம் தவறாது பாடவேண்டுமென்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

எந்த வேடமென்றாலும் பாத்திரத்திற்குரியவராகவே மாறிவிடுவதுகண்டு பலர் ஆச்சரியப்படுவதுண்டு. தான் நடிக்கும்போது உடைகள் முதல் ஒப்பனை, பக்கவாத்தியங்கள், பிற்பாட்டு வரை கண்காணிப்பவராகவே காணப்பட்டார். கூத்துக்களைப் பழக்கி மேடையேற்றும்போதும் இவற்றில் கரிசனை செலுத்துவதைக் காணக்கூடியதாக இருந்தது. இதற்கு சிறு உதாரணத்தைக் குறிப்பிடலாம்.

"அகினேசுகன்னி" கூத்தில் தமக்கு போடப்பட்ட மேலுடையில் திருப்தி இல்லாத அண்ணாவியார், மாற்றுடை கேட்டார். அது கிடைக்காமையால் மேலுடையைக் கழற்றிவிட்டு தாறுபாச்சிய நிலையில் மேலுடையாக சால்வையைப் போட்டு அரசனாக நடித்தார்.

## 9



பெயர் : **திரு. முத்தையா துரைசிங்கம்**
முகவரி : 18/4, மத்திய கிழக்குவீதி, றெக்ளமேசன், குருநகர். யாழ்ப்பாணம்
பிறப்பு : 26.05.1924

நடித்த கூத்துக்கள் :
யேசீலன், ஞானசீலன், சுளியார்.

பழக்கிய கூத்துக்கள் :

யூதகுமாரன், தர்மபிரகாசம், உத்தரியத்தின் மகிமை

1986ம் ஆண்டு குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியால் மேடையேற்றப்பட்ட யூதகுமாரன் நாட்டுக்கூத்தினை இவரே சுருக்கி எழுதி, பழக்கி மேடையேற்றியுள்ளார். முதல் தடவையாக யூதகுமாரன் வீடியோ பிரதி செய்யப்பட்டதாகவும், இதுவே தம்மை அண்ணாவியாராக அறிமுகப்படுத்திய கூத்துமென பெருமையுடன் குறிப்பிடுகின்றார்.

07.05.1993ல் திருமறைக் கலாமன்றத்தினால் நாட்டுக்கூத்து கலைஞர் வரிசையில் அண்ணாவியாராக கௌரவிக்கப்பட்டுள்ளார். சுகவீனமுற்றிருக்கும் இவர் தள்ளாத வயதிலும் நாட்டக்கூத்து எழுதவேண்டும், பழக்கவேண்டும் என்ற ஆர்வத்திலிருக்கிறார். தற்போதுகூட கலைஞர் கருணாநிதியின் மனோகரா படத்தை நாட்டுக்கூத்தாக எழுதிக்கொண்டிருக்கிறார். இவரின் கலையார்வத்தின்முன் தலைவணங்குகின்றேன்.

அண்ணாவியார் நட்டுவர் அந்தோனிப்பிள்ளையை தமது குருவாக நினைவுகூறும் இவர் நட்டுவர் அந்தோனிப்பிள்ளை ஒரு கடல் என்று பெருமிதத்துடன் குறிப்பிடுகிறார்.

## 10



பெயர் : **திரு. மலக்கியாஸ் சுவாமிநாதர்**
(அண்ணாவி சாமிநாதாதன்)
முகவரி : 2, சென் ஜேம்ஸ் மகாவித்தியாலய வீதி
குருநகர். யாழ்ப்பாணம்
பிறப்பு : 27.12.1934
இறப்பு : 29.02.2000

நடித்த கூத்துக்கள் :

அக்கினேசுகன்னி (1946), தேவசகாயம்பிள்ளை, நவீன சுபத்திரா, ஞானசீலி எஸ்தாக்கியார், கருங்குயில் குன்றத்துக் கொலை, அந்தோனியார், மெய்காப்போன் தன்கடமை, சங்கிலியன், வரதமனோகரி, நொண்டி, போருக்குப்பின், வீரமாதேவி, வேளாங்கன்னி, மனம்போல் மாங்கல்யம், பங்கிராசா.

பழக்கிய கூத்துக்கள் :

ஜெனோவா, சுபத்திரா, அக்கினேசு கன்னி, கண்டியரசன், மரிசிலியன், துன்பத்தின்பின், வாழ்க்கைப்புயல், புரட்சித்துறவி, படைவெட்டு, அமலமரித்தியாகிகள், யூதகுமாரன், கருங்குயில் குன்றத்துக் கொலை, எஸ்தாக்கியர், போருக்குப்பின், நொண்டி, ஞானசீலி, வீரமாதேவி, பங்கிராசா, இன்னும் பல.


தமது 12 வது வயதில் கூத்து ஆடத்தொடங்கியவர் அமரர் அண்ணவியார் சுவாமிநாதர் ஆவர். தாளம் போடும், பின்னணி பாடும் திறமையைக்கொண்ட இவர், மூல இசையுடன் கர்நாடக இசைகலந்து பாடுவதையே பெரிதும் விரும்புவார்.

அதிகமாக பெண் பாத்திரங்களில நடித்திருக்கிறார். மாதகல், மாரிசங்கூடல், பருத்தித்துறை, முல்லைத்தீவு, செம்பியன்பற்று, மணற்காடு, குடத்தனை, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி ஆகிய பிற இடங்களில் கூத்து பழக்கியும், நடித்துமுள்ளார். 1961ம் ஆண்டு சிறுவர் சிறுமியரைக் கொண்டு பழக்கி மேடையேற்றிய "வாழ்க்கைப்புயல்" எனும் நாட்டுக்கூத்து அவரது திறமைக்கோர் சான்று.

வறுமைக்கோட்டில் வாழ்ந்தபோதும் கலையை வளர்ப்பதில் சளைக்காது உழைத்த அண்ணவியார் சுவாமிநாதர் அவர்கள், இனிமையாகவும், அமைதியாகவும் பழகுவார். இசைகலந்த இராகங்களைப் பாடும்போது கேட்டுக்கொண்டே இருக்கவேண்டும் போலிருக்கும். இத்தகைய இனிய குரலோனின் மறைவு கலைத்துறைக்கு பேரிழப்பேயாகும். அண்ணாவியார் பக்கிரி சின்னத்துரை, அண்ணாவியார் இளையப்பா போன்றோரை தமது குருவாகக் கொண்டிருந்தார்.

நாளும் பொழுதும் கூத்து மெட்டுக்களையே இசைத்துக்கொண்டு கருமங்கள் ஆற்றிவந்த அந்த அற்புதக் கலைஞன், 1995இல் நடைபெற்ற மாபெரும் இடப்பெயர்வில் வன்னி சென்று மீண்டுவந்தபோது வாய் திறந்து வார்த்தையெதுவும் பேசமுடியாமல் போனது வேதனைக்குரியது.

**11**



பெயர் : **திரு. அருக்காஞ்சிப்பிள்ளை மனோகரன்**
முகவரி : 225, பாங்ஷால் வீதி,
குருநகர். யாழ்ப்பாணம்
பிறப்பு : 06.09.1941

நடித்த கூத்துக்கள் :

கற்பலங்காரி கற்பலங்காரன், சிலை எடுத்த சேரன், சகோதரபாசம், நொண்டி, எஸ்தாக்கியார், நந்திவர்மன், அரிச்சந்திரா, கருங்குயில் குன்றத்துக் கொலை, புரட்சித்துறவி, கண்டியரசன், வீரமாதேவி, வரதமனோகரி.

பழக்கிய கூத்துக்கள் :

சங்கிலியன், நந்திவர்மன், சகோதரபாசம், நொண்டி, உத்தரியத்தின் மகிமை, விஜயமனோகரன்.

தனது 13வது வயதில் "கற்பலங்காரி கற்பலங்காரன்" எனும் நாட்டுக் கூத்துடன் கலைத்துறைக்கு காலடி எடுத்துவைத்தவர் அண்ணாவி மனோகரன். உரத்த குரலில் பாடக்கூடிய இவர், யாழ். பிரதேச கலாச்சாரப் பேரவையினால் "சேவை நலன் பாராட்டு" சான்றிதழை 2002இல் பெற்றதுடன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தினால் 2002ம் ஆண்டு கௌரவிக்கப்பட்டுள்ளார். பெண் பாத்திரங்களிலும் இனிமையாகப் பாடக்கூடியவர்.

அண்ணாவிமார்களான இராசாத்தம்பி, சுவாமிநாதர், சுவாம்பிள்ளை, கிறிஸ்தோத்திரம் போன்றோர் தன்னுடன் இணைந்து பாடியதன் மூலம் தன்னை வளர்த்துக் கொள்ளக்கூடியதாக இருந்ததாகக் குறிப்பிடுகிறார். மாணவர்களைக்

கொண்டு கூத்துப் பழக்கி வானொலி சேவையில் ஒலிபரப்ப உதவியதாகவும், கிறிஸ்து பிறப்பு நிகழ்வை நாட்டுக்கூத்துப் பாடல்களுடன், கூடிய வசனங்களையும் இணைத்து புதிய பாணியில் இரண்டு பாடசாலைகளில் பழக்கி மேடையேற்றியதாகவும், 2003இல் யாகப்பர் ஆலயத்தில் நடைபெற்ற பசான் போட்டியில் போட்டியாளர்களை நெறிப்படுத்தியதாகவும் அவரிடமிருந்து அறியக்கூடியதாக இருக்கின்றது.

## 12

பெயர் : **திரு. றோமான் துரைவீரன்**
முகவரி : 34, கடற்கரை வீதி,
குருநகர். யாழ்ப்பாணம்
பிறப்பு : 09.07.1945
இறப்பு : 02.12.1989

நடித்த கூத்துக்கள் :
தர்மப்பிரகாசம், தேவசகாயம், அரிச்சந்திரா, போருக்குப்பின், மனம்போல் மாங்கல்யம், செனகப்பு, படைவெட்டு

பழக்கிய கூத்துக்கள் :
தர்மப்பிரகாசம், ஞானசெந்தரி

எல்லா இராகங்களிலும் பாடக்கூடிய திறமையும், நல்ல சாரீரத்தையும் கொண்டவர். 1987 இல் அண்ணாவியாராக கௌரவிக்கப்பட்டார். ஏனைய விபரங்கள் பெற முடியவில்லை.

## 13



பெயர் : **திரு. தம்பித்துரை யேசுராசா**
முகவரி : 49/1, மவுண்கார்மல் வீதி,
குருநகர். யாழ்ப்பாணம்
பிறப்பு : 05.07.1948

நடித்த கூத்துக்கள் :
சுழியார் (1960), வாழ்க்கையின் புயல், நாடக வேதசாட்சி, படைவெட்டு, தர்மப்பிரகாசா, வரப்பிரகாசர், தேவசகாயம்பிள்ளை, வீரமாதேவி, போர்க்களம், புரட்சித்துறவி

பழக்கிய கூத்துக்கள் :
தர்மசீலன் (1991), பத்துக் கன்னியர், குணசேகரன், போர்க்களம், மூவிராசாக்கள்

குறிப்பிட்டுக் கேட்கும் இராகத்தை உடனுக்குடன் பாடக்கூடிய திறமையைக் கொண்ட இவர் பல இசை நாடகங்களைப் பழக்கியும், நடித்தும் இருக்கிறார். பல

நாடகங்களில் முக்கிய பாத்திரமேற்று நடித்துப் புகழ்பெற்றுள்ளார். 12வது வயதில் கூத்து ஆடத் தொடங்கியவர் இன்றுவரை கலைப்பணி ஆற்றி வருகிறார்.

பவ்வியமாகப் பாடல்களைச் சொல்லிக் கொடுக்கக்கூடிய யேசுராசா அவர்கள் எந்தப் பாடலையும் ஒன்றுக்குமேற்பட்ட இராகங்களினூடப் பாடக்கூடியவர். இவரது திறமை எல்லோருக்கும் இருப்பதில்லை. அண்ணாவியார் சுவாமிநாதனிடம் பாடல்களைக் கற்றதாலோ என்னவோ அவருடைய திறமைகளின் சாயலை இவரிடம் காணக் கூடியதாக இருக்கின்றது.

## 14



பெயர் : **திரு. கிறகரி கிறிஸ்தோப்பர்**

முகவரி : 20, கடற்கரை வீதி,
குருநகர். யாழ்ப்பாணம்

பிறப்பு : *18.06.1949*

நடித்த கூத்துக்கள் :

போருக்குப்பின், வீரமாதேவி, ஜெனோவா, புரட்சித்துறவி, போர்க்களம், செந்தூது, மலைமேற் கொலை, பண்டார வன்னியன், தியாக இராகம், நந்திவர்மன், மூவிராசாக்கள்.

பழக்கிய கூத்துக்கள் :

புரட்சித்துறவி, பண்டார வன்னியன், மலைமேற் கொலை, செந்தூது, நந்திவர்மன்.

பல கூத்துக்களை, நாடகங்களை நெறியாள்கை செய்த கிறிஸ்ரோப்பர் அவர்கள் நெய்தல் வளர்பிறை மன்றத்தால் மேடையேற்றப்பட்ட 12 நாடகங்களில் நடித்திருக்கிறார். அமைதியான குரலில் பாடக்கூடிய திறமையைக் கொண்ட இவர் “செந்தூது” நாட்டுக்கூத்தில் அண்ணாவியாராகப் பிரகடனப்படுத்தப்பட்டார். நாச்சிக்குடாவில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளார். இவர் தமது குருவாக அண்ணாவியார் சுவாமிநாதனை நினைவுகூருகிறார். குருநகர் நாட்டுக்கூத்து மன்றத்தை புனரமைப்பு செய்வதற்கு முன்னின்று உழைத்ததுடன் அதனை வளர்த்தும் கலைச்சேவை செய்து வருகின்றார்.

## 15

பெயர் : **திரு. சவிரி செபமாலை ரெத்தினம்**

முகவரி : 17/1, கடற்கரை வீதி,
குருநகர். யாழ்ப்பாணம்

பிறப்பு : அறிய முடியவில்லை.

இறப்பு : *03.04.1980*

நடித்த கூத்துக்கள் :

தேவசகாயம்பிள்ளை, ஞானசௌந்தரி, அகினேசுகன்னி, சபீனாகன்னி, மலைமேற் கொலை

பழக்கிய கூத்துக்கள் :

ஞானசௌந்தரி (சிறுமிகளுக்கு)

1964ம் ஆண்டளவில்தான் அமரர் அண்ணாவியார் ரெத்தினம் அவர்கள் கூத்து ஆடத்தொடங்கினார். குடத்தனை, தாளையடி போன்ற இடங்களுக்குச் சென்று கூத்துக்களைப் பழக்கி மேடையேற்றிய அண்ணாவியார் அவர்கள் 1968இல் யாழ். திறந்தவெளி அரங்கில் கௌரவிக்கப்பட்டார். பெண்பாத்திரத்தில் தத்ரூபமாய் நடிப்பதில் கைதேர்ந்தவர். அசல் பெண்ணாகவே காட்சியளிப்பார். தேவசகாயம்பிள்ளையில் இவரும், அண்ணாவி பக்கிரி சின்னத்துரையும் கணவன், மனைவியாகப் பாடும்போது பார்ப்பவரை பரவசத்தில் ஆழ்த்துவதாக பலரூடாக அறிந்தேன்.

அந்நாட்களில் பெண் பாத்திரத்தில் நடிக்கும் நடிகர்களுக்கு மிகுந்த தட்டுப்பாடு நிலவியதால் இவருக்கு பெரும் மதிப்பு இருந்தது. அந்தவகையில் பல கூத்துக்களில் நடிப்பதற்கு இவருக்கு சந்தற்பம் கிடைத்திருக்கும், ஆனால் விபரங்களை அறியமுடியவில்லை. புகையிலை வியாபரம் செய்த இவர் தமது தொழிலைவிட கூத்தில் அக்கறையுள்ளவராகக் காணப்பட்டார் எனச் சொல்லக் கேள்விப் பட்டிருக்கின்றேன்.

## 16

பெயர் : **திரு. சிலுவை**
(பூனரி சிலுவை)
முகவரி : அடப்பன் வீதி, 3ம் ஒழுங்கை
குருநகர். யாழ்ப்பாணம்
பிறப்பு : அறிய முடியவில்லை
இறப்பு : அறிய முடியவில்லை

நடித்த கூத்துக்கள் :

செபஸ்ரியார், என்றிக்எம்பிரதோர், கோலியாத் இன்னமும் பல

பழக்கிய கூத்துக்கள் :

செபஸ்ரியார், என்றிக் எம்பிரதோர், கோலியாத், படைவெட்டு. நாடக வேதசாட்சி இன்னமும் பல

இனிமையாக இராகங்களைப் பாடுவதிலும், சொல்லிக்கொடுப்பதிலும் கைதேர்ந்த அமரர் அண்ணாவி சிலுவை அவர்கள். கைத்தாளம் போடுவதில் இவருக்கு இணை யாருமேயில்லை. அண்ணாவி நட்டுவர், அண்ணாவி பக்கிரி போன்றவர்கள் இவரையே தாளத்திற்கு அழைப்பதுண்டு. பிரமச்சாரியாகவே வாழ்ந்த தனாலும், அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் எவரேனும் உயிரோடு இல்லாததனாலும் அவரைப் பற்றிய தகவல்களைப் பெற முடியவில்லை.

"படைவெட்டு" நாட்டுக்கூத்தில் அவருடன் பணியாற்றக்கூடிய சந்தற்பம் எனக்கும் கிடைத்தது. அவர் பாடல்களைச் சொல்லிக் கொடுக்கும் முறையைப் பார்க்கையில் அற்புதமாக இருக்கும். வளைந்து, குனிந்து, கைகளை இராகத்திற்கேற்ப அசைத்து அசைத்துச் சொல்லிக்கொடுப்பார். இருவர் பாடுகையில் மாறுபட்ட குரல் வளம் காணப்பட்டால், இருவரையும் சமாந்திரமாகப் பாடவைப்பதற்கு ஏற்ற வகையில் தாளத்தை மாற்றி இராகத்தைச் சொல்லிக்கொடுப்பதில் வல்லவராகக் காணப்பட்டார். இவரைப் பற்றிய போதிய தகவல்கள் பெறமுடியாமல்போனது துரதிஷ்ரமானதே.

திறமையாகக் கூத்துப் பாடியவர்களில் நான் சந்தித்த சிலர்.

| | | | |
|---|---|---|---|
| 1. | சைமன் மிக்கேல் (செம்பர்) | 1901 | (இறப்பு 1988) |
| 2. | பொக்கணியன் அந்தோனிப்பிள்ளை | 1903 | (இறப்பு 1972) |
| 3. | கபிரியேல் இராசதுரை (பேச்சாட்டி) | 1911 | (இறப்பு 1994) |
| 4. | நீ. பெ. செல்வசிங்கம் | 1915 | (இறப்பு 1984) |
| 5. | ஞானப்பிரகாசம் இம்மனுவல் (தம்பித்துரை) | 1925 | (இறப்பு 1996) |
| 6. | சஞ்சோன் சேவியர் | 1925 | (இறப்பு 1997) |
| 7. | சின்னத்துரை செல்வம் | 1926 | |
| 8. | அருமை மத்தியாஸ் | 1938 | (இறப்பு 2003) |
| 9. | மகராசம்பிள்ளை சிலுவை | 1942 | |
| 10. | வலத்திசார் அந்தோனிப்பிள்ளை (பூந்தான்) | 1943 | |
| 11. | ஆசிர்வாதம் இம்மனுவல் | 1946 | |
| 12. | திருமதி அ. எலிசிதாஸ் (வேவி) | 1952 | |
| 13. | றோமான் அன்ரனி | 1956 | (இறப்பு 2000) |
| 14. | சிமியோன் இளையப்பா | – | (இறப்பு 1974) |
| 15. | யோசேப் லொபிறேன் | – | (இறப்பு 1986) |
| 16. | சவிரிமுத்து நவரெட்டினம் | – | (இறப்பு 1995) |
| 17. | சாமுவேல் இராயப்பு | – | (இறப்பு 1975–) |
| 18. | வேலுப்பிள்ளை சூசைப்பிள்ளை | – | (இறப்பு 1980–) |
| 19. | கயித்தான் செல்வராசா | – | (இறப்பு 1980–) |
| 20. | அவுறான் மரியாம்பிள்ளை (செல்வம்) | – | (இறப்பு 1980–) |
| 21. | இராசேந்திரம் | – | (இறப்பு 1980–) |
| 22. | பிப்பிசால் பொன்னுத்துரை (பபூண்) | – | (இறப்பு 1985–) |
| 23. | மனவல் அந்தோனி | – | (இறப்பு 1985–) |
| 24. | செல்வராசா | – | (இறப்பு 1985–) |
| 25. | இராசேந்திரம் கிறிஸ்துராசா | – | |

என்னால் முடிந்தவரை சேகரிக்கப்பட்டு வெளிக்கொணரப்பட்ட இந்தத் தகவல்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட அல்லது அவர்கள் வழித்தோன்றல்களால் உறுதிப்படுத்தப் பட்டவைகளாகும். ஏற்கனவே வெளிவந்த சஞ்சிகைகளில் பெற்ற சிற்சில தகவல்களும் இதற்குள் அடங்கும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள தரவுகள் அனைத்தும் பெரும்பாலும் 1950 இற்கும் பிற்பட்டவைகளாகவே என்னால் உணரக்கூடியதாக இருக்கின்றது. *(குறிப்பிடப்பட்டுள்ள அண்ணாவிமார்கள் அனைவரும் நான் சந்தித்தவர்களேயாவர்)* அதற்கு முன்னையதென கொடுக்கப்பட்டுள்ள தரவுகளெல்லாம் சம்பந்தப்பட்டவரினால் வழித்தோன்றல் களுக்கு "இந்த வயதில் கூத்துப் பாடத் தொடங்கினேன். இதுதான் எனது முதல் கூத்து" என்று வாய்மொழியாய் சொன்ன வார்த்தைகளின் இரைமீட்டல்கள் அல்லது சம்பந்தப்பட்டவருடன் நெருங்கிப் பழகியவர்களினால் கூறப்பட்டதாக அறியப்பட்ட தகவல்களேயாகும். மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களின் பிரபல்யங்களை தகவலாளர்கள் நினைவுகூர முடியாதவர்களாகவே காணப் பட்டார்கள்.

1913 இல் அண்ணாவி அந்தோனி என்பவரால் கூத்து அரங்கேற்றப் பட்டுள்ளமையை ஆரம்பத்தில் குறிப்பிட்டிருக்கின்றேன். அவரைப் பற்றியதோ அன்றேல் அவர் காலத்துக்கு உரிய அண்ணாவிகளைப் பற்றிய விபரங்களையோ

வெளிக்கொணர முடியவில்லை.. 1815 ஆண்டு முதல் பாடுவதற்காக கூத்துக்கள் எழுதப்பட்டுள்ளன. ஆனால் அக் காலகட்டங்களில் அவற்றைப் பாடியவர்களின் தரவுகள் எதனையும் முன்வைக்க முடியவில்லை. குருநகர் புலவர்களால் எழுதப்பட்ட கூத்துக்களில் சில பாடப்படாமலேயே காணப்படுகின்றது. கூத்துக்கள் அவ்வப்போதைய தேவையின் நிமித்தம் எழுதப்படுவதால் நிச்சயம் பாடப்பட்டே இருக்கவேண்டும். அவ்வாறு பாடியவர்களின் விபரங்களையும் என்னால் வெளிக்கொண்டுவர முடியவில்லை.

மொத்தத்தில் குருநகர் அன்று நாட்டுக்கூத்தில் இருந்த சிறப்பை இன்றுள்ளோர் முழுமையாக அறியமுடியால் இருக்கின்றது என்பதே உண்மை. காலம் பிந்திய சேகரிப்பும் இதற்கொரு காரணமாகும். மேற் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்த தொகையினரான அண்ணாவிமார்களில் பிந்திய தலைமுறையினரான மு. துரைசிங்கம், த. யேசுராசா, கி. கிறிஸ்ரோப்பர், அ. மனோகரன் ஆகிய நால்வரைத் தவிர வேறு எவரேனும் உயிருடன் இல்லை. அண்ணாவிமார்களுடன் நெருங்கிப் பழகியவர்கள் என்று சொல்லக்கூடியவர்களும் இல்லை. அண்ணாவிமார்களின் வழித்தோன்றல்களிடமும் முழுமைத் தரவுகளை சேகரிக்க முடியாமலிருக்கின்றது.

பல சிரமங்களின் மத்தியில் குருநகரில் காணப்பட்ட கலை இலக்கியங்களின் செழிப்பை, மாட்சிகளை, அவற்றை வளர்த்த குருநகர் மைந்தர்களை இயன்றவரை வெளிக்கொண்டு வந்திருக்கின்றேன். இன்னமும் வெளிக்கொண்டு வரவேண்டும் என்ற எனது ஆதங்கத்தை நிறைவு செய்யமுடியாமல் போனமை வேதனைக்குரியது. இவற்றையேனும் உலகுக்குத் தந்த ஆத்ம திருப்தியில் “குருநகர் கலைமாட்சி” இனை நிறைவு செய்கின்றேன்.



குறிப்பு - 1

**குருநகர் கலைஞர்கள் பற்றிய மேலதிக தகவல்கள் தெரிந்தவர்கள் அதனை அறியத் தந்தால் நன்றியுடையவனாக இருப்பேன்.**

குறிப்பு - 2

**வெளிக்கொண்டுவரப்பட்ட தகவல்கள் யாவும்,**

- எனது ஞாபகத்திலிருந்து பலருடான சம்பாஷனைகளில் உறுதிப் படுத்தப்பட்டவைகள், வாசித்தறிந்தவைகள்.
- சம்பந்தப்பட்டவர், இறந்தவர்களின் இரத்த உறவினர்கள்.
- மன்ற நிர்வாகிகள்.
- த. யேசுராசா, V.J. கொன்ஸ்ரன்ரைன், C.M. நெல்சன், R.C. கில்பேட் ஆகியோர்கள்.
- குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம்,
- புனித யாகப்பர் நூற்றாண்டு மலர், திரு இருதயசபை 90வது ஆண்டு மலர், யாழ். பிரதேச செயலக பிரிவு புள்ளிவிபரக் கையேடு, செவ்வானம், தேவசகாயம்பிள்ளை, கலைமுகம், கம்பன்மகன் போன்ற வெளியீடுகள்.

அடுத்த வெளியீடு

# அவலங்களின் அரங்கேற்றம்

(தென்மோடி நாட்டுக்கூத்து)

31 கடற்தொழிலாளர் அழிப்பு,
18 அடைக்கலம் புகுந்தவர்கள் அழிப்பு,
அராலிக் கடலில் அகதிகள் உயிர் பறிப்பு,
புனித யாகப்பர் ஆலயம் தகர்ப்பு.

இவைகள் குருநகர் மக்கள் சுமந்த
அவலங்களில் சில
மண் சுமந்த அவலங்களை
மீண்டும் நினைவுகொள்ள

அவலங்களின் அரங்கேற்றம்

ஆக்கம்
கலையார்வன் (கு. இராயப்பு)